Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

AXSHAYA CONSTRUCTION JAFFNA
கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், பழைய வீடு களைத் திருத்துதல், குளியலறை கட்டுதல்
Plumbing, Electrical, Painting
அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும் குறித்த காலத்திலும் செய்து கொடுக்கப்படும்.
தொடர்புக்கு: 0776679564
(C3690)

முரசு - 04 | திருவள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 14 புதன்கிழமை (28.05.2014) | பக்கங்கள் 20 | ஓசை - 239

## ஆசிரிய உதவியாளர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை



வடமாகாண ஆசிரியர் உதவியாளர்களை நிரந்தர நியமனத்திற்குள் உள்வாங்குவது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனும் உறுதியளித்துள்ளனர்.

யாழ்.மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் வடமாகாண ஆசிரிய உதவியாளர் சங்கப் பிரதிநிதிகள் தமது கோரிக்கை தொடர்பில் ,நேற்றையதினம் இணைத்தலைவர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## மின்னல் தாக்கி சிறுமி உயிரிழப்பு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்புப் பகுதியில் நேற்று மாலை 5 மணியளவில் மின்னல் தாக்கியதில் 6 வயதுச் சிறுமி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார். நேற்று மாலை மழை பெய்து கொண்டிருந்த போது திடீரென இவர்களின் வீட்டு வளவில் நின்ற தென்னை மரத்தின் மீது இடி விழுந்து குடிசையையும் தாக்கியது. இச்சம்பவத்தில் புதுக்குடியிருப்பு 7ஆம் வட்டாரம் திருநகரைச் சேர்ந்த தமிழரசன் உதயகுமாரி (வயது-6) என்ற சிறுமி உயிரிழந்ததுடன், கர்ப்பிணியான இவரது தாயார் சுபாசினி காயமடைந்தார். இவர்கள் வசித்த குடிசையும் சேதமடைந்தது. இச்சம்பவத்தால் விரக்தியடைந்த சிறுமியின் தகப்பன் தன்னைத் தானே தாக்கிக்கொண்டதில் காயமடைந்தார். இவரும் இவரது மனைவியும் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். உயிரிழந்த சிறுமியின் சடலம் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது.

### - இலங்கைக்கு வருகை தருமாறு -

# ஜனாதிபதி விடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்டார் மோடி

(புதுடில்லி)

இந்தியப் பிரதமராக பதவியேற்றுக்கொண்ட நரேந்திரமோடியை இலங்கைக்கு வருகை தருமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்த அழைப்பை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார். ஹைதராபாத் மாளிகையில் நேற்று முற்பகல் சுமார் 20 நிமிடங்கள் இருநாட்டுத் தலைவர்களுக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே, ஜனாதிபதி இந்த அழைப்பினை விடுத்தார்.


இதனைப்பிரதமர் ஏற்றுக்கொண்டதாக இந்திய வெளியுறவுச் செயலர் சுஜாதாசிங் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக இந்திய வெளியுற[illegible]துறைச் செயலர் சுஜாதாசிங் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் நரேந்திர மோடி சந்தித்து இருநாட்டு உறவுகள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

இதன்போது, தமிழர் பிரச்சினை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

மீனவர்கள் விவகாரம் (19) ஆம் பக்கம் பார்க்க



## இலங்கைத்தமிழர் பாதுகாப்பு உறுதிபூண்டுள்ளார் மோடி
### என்கிறார் இராதாகிருஷ்ணன்



இலங்கையில் உள்ள தமிழர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதில் இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடி உறுதிபூண்டுள்ளதாக இந்திய மத்திய அரசில் புதிதாக இணை அமைச்சராகப் பதவியேற்றிருக்கும் பொன்.இராதாகிருஷ்ணன் தெரிவித்திருக்கிறார். பி.ரி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் அவர், இவ்வாறு தெரிவித்தார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் பேச முடியாது வாயடைத்த சுரேஷ்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் தமது கட்சி உறுப்பினர்கள் தொடர்பாக கணக்கு கொடுத்து அவர்களிடமிருந்து நிதியைப் பெற்றுவந்த நிலையில் இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு தொடர்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் கதைக்கக்கூடாதென பிரதேசசபை உறுப்பினர்கள் கூற சுரேஷ் பிரேமச்சந்திரன் வாய் அடைத்து நின்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கூட்டத்தின் நிறைவில், வடமாகாண விவசாயம் மற்றும் கால்நடை அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் ஊடகவியலாளர்களின் விபரம் திரட்டுதல் மற்றும், அண்மையில் அரச அதிபர் மற்றும் பிரதேச

(19) ஆம் பக்கம் பார்க்க

## நாடுகடத்தப்பட்ட மூவரிடமும் தொடர்ந்தும் விசாரணை



மலேசியாவில் தங்கியிருந்த நிலையில், இலங்கையில் விடுதலைப் புலிகளின் மீள் உருவாக்கத்திற்கு உடந்தையாக செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட மூவரும் தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவிததார்.

மலேசிய பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த மூன்று விடுதலைப் புலி சந்தேக நபர்களும் நேற்று முன்தினம் இலங்கைக்கு கொண்டுவரப் பட்டனர். மீசாலையை சேர்ந்த

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஆசிரியையை காணவில்லை

யாழ்.வ்டமராட்சி மணற்காடு இந்து தமிழ் மகா வித்தியாலயத்தில் கற்பிக்கும் திலகரத்தினம் மதிவதனி (வயது-30) என்ற ஆசிரியையை நேற்று முன்தினம் முதல் காணவில்லையென அவரது சகோதரனால் திங்கட்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் தெரிவித்தனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஆலயவாயிலில் ஆணின் சடலம் மீட்பு

கொடிகாமம், கட்டைபறிச்சான் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் நேற்றுக் காலை ஆணின் சடலம் காணப்பட்டது. காலையில் ஆலயத்திற்கு பூசை செய்யவந்த அர்ச்சகர், ஒருவர் படுத்திருப்பதைக் கண்டு அவரை எழுப்ப முற்பட்டபோது அவர் இறந்த நிலையில் காணப்பட்டதால் பொலிஸாருக்கு அறிவித்தார். பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணைகளை மேற்கொண்ட போது கொடிகாமத்தைச் சேர்ந்த மார்க்கண்டு ரகுமாரன் (வயது-43) என அடையாளம் காணப்பட்டார். இவரது மரணம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றின்

(19) ஆம் பக்கம் பார்க்க

உள்ளே க.பொ.த(சா/த) பரீட்சை தமிழ் மொழியும் இலக்கியமும் வினாத்தாள்

# வடக்கில் கல்வி வளர்ச்சிக்கு சீரான வழிமுறைகள் அவசியம்



## சந்திரகுமார் எம்.பி. வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

வடமாகாணக் கல்வியை சரியான வழிமுறையில் கொண்டு செல்லா விட்டால், கல்வியை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்ல முடியாது. எனவே அதற்கான வழிமுறைகளை உருவாக்க வேண்டாமென வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் சாடினார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று இரண்டாவது நாளாகநடை பெற்றது.

யாழ்.மாவட்ட கல்வி தொடர்பில் ஐந்து வலயக் கல்விப் பணிப்பாளர்களிடமும் விளக்கங்கள் கேட்கப்பட்டன.

அதன்போது வடமாகாணத்தில் ஆயிரத்து 34 ஆசிரியர்கள் மேலதிகமாக இருப்பதாக வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் சத்தியசீலன் கூறினார்.

அத்துடன், தீவக வலயக் கல்விப் பணிமனைக்கு உட்பட்ட பாடசாலைகளில் 50 ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருப்பதாகவும், அதேவேளை மேலதிகமாக 30 ஆசிரியர்கள் தேவை இருப்பதாகவும் கூறினார்.

அதேவேளை, யாழ்.வலயத்தில் 162 ஆசிரியர்கள் மேலதிகமாக இருப்பதாகவும், 60 பேர் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு மேலதிகமாக இருப்பதாகவும் கூறினார்.

மேலதிகமாக இருக்கும் ஆசிரியர்களை கஷ்டப் பிரதேசங்களுக்கு அனுப்ப ஏன் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் கேள்வியெழுப்பினார்.

அதிகஷ்டப் பிரதேசங்களில் 5 வருடங்கள் சேவையாற்றி தற்போது யாழ்.வலயப் பாடசாலைகளில் பலர் கடமையாற்றி வருவதாக செயலாளர் கூறினார்.

அத்துடன் மனநிலை பாதிக்கப்பட்ட 80 ஆசிரியர்கள் யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் இருப்பதாகவும் கல்வியமைச்சின் செயலாளர் கூறினார்.

மேலதிக ஆசிரியர்களை யாழ்.மாவட்டத்தின் கஷ்டப் பிரதேசங்களுக்கு இடமாற்றம் செய்து கல்வியில் வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு நீங்கள் நடந்து கொண்டால் கல்வியில் சீரிழிவு ஏற்படும்

எனவே மனநிலை பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு கட்டாய விடுமுறை வழங்குமாறும் வலியுறுத்தினார். ஆகவே எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளைத் தவிர்த்துக்கொள்ளுமாறும், அதன் பின்னர் எதற்கும் பதில் கூறமுடியாது என்றும் கூறினார்.

அத்துடன் கல்வி அபிவிருத்தி தொடர்பில் நகரப் பாடசாலைகள் அனுபவிக்கும் வசதிகள் கிராம மட்டப் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை.

பிரபல நகரப் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள் மீது இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொண்டு மேலதிக ஆசிரியர்களைக் கஷ்டம் மறறும் அதிகஷ்டப் பிரதேசங்களில கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் வலியுறுத்தினார்.

அதேவேளை, விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம், கணிதம் போன்ற பாடங்களுக்கு ஆசிரிய உதவியாளர் II, பயிற்சி முடித்தவர்களை ஆசிரியர் பற்றாக்குறையாக உள்ள பாடசாலைகளுக்கு கடமையாற்ற நடவடிக்கை மேற்கொள்ளும் சூழலை ஆராயுமாறும், ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் எஸ்.சத் தியசீலனுக்குப் பணித்தார். (25, 92)

## மண்டைதீவு வைத்தியசாலை இன்று முதல் செயற்பாட்டில்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு கிராமிய வைத்தியசாலை இன்று முதல் செயற்பாட்டிற்கென ஆரம்பித்து வைககப்படவிருப்பதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட போதே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

மண்டைதீவுப் பகுதியில் அமைந்திருந்த கிராமிய வைத்தியசாலை கடந்த காலத்தில் நிலவிய யுத்த சூழ்நிலையினால் அழிவடைந்து போயிருந்தது.

இந்நிலையில், அப்பகுதியில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டதனையடுத்து, அவர்களின் சுகாதார சேவையைக். கருத்தில் கொண்டு சுகாதார அமைச்சினால் சுமார் 26 மில்லியன் ரூபா செலவில் இக்கிராமிய வைத்தியசாலை நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

## யாழ்.போதனா வைத்தியசாலையின் சிற்றூழியர் வெற்றிடத்தை நிரப்புக

### ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் நிலவும் தாதியர்கள் மற்றும் சிற்றூழியர்கள் பற்றாக் குறையினை நிவர்த்தி செய்து தருமாறு யாழ்.போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் செ.ஸ்ரீபவானந்தராஜா ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கோரிக்கை விடுத்தார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டன.

அதன்போது போதனா வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் தெரிவிக்கையில், யாழ். போதனா வைத்தியசாலையில் சிற்றூழியர் பற்றாக்குறை நிலவுகின்றது.

அதில் 285 சிற்றூழியர்கள் தேவையாக இருந்தபோது 175 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இன்னும் 110 சிற்றூழியர்கள் தேவையாக இருக்கின்றனர். சிற்றூழியர்களின் வெற்றிடத்தினைப் பூரணப்படுத்தி தருமாறு கோரிக்கை விடுத்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சிற்றூழியர் நியமனம் தொடர்பாக விசேட அமைச்சரவைப்பத்திரம் தாக்கல் செய்யப்படவிருப்பதாகவும் அதற்கு வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் விபரங்களைச் சமர்ப்பிக்கக் கோரியிருந்ததுடன், அந்த விபரங்கள் தொடர்பாக சந்திப்பு ஒன்றையும் ஏற்பாடு செய்திருப்பதாகவும் தெரிவித்தார். (25,பா)

### மாதாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் மாதாந்தப் பொதுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணி க்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குண ராசா தலைமையில் நடைபெறவுள்ளதாக செயலாளர் சி.தா.தர்மரட்ணம் அறிவித்துள்ளார்.

## உலக புகையிலை எதிர்ப்பு தினப் பேரணி

யாழ்.பல்கலைக்கழக சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத் துறையுடன் இணைந்து யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் மருத்துவ விஞ்ஞானப் பிரிவு (Section - C), யாழ்ப்பாண மருத்துவச் சங்கம் மற்றும் சமூக நிறுவனங்கள் என்பன நடத்தும் உலக புகையிலை எதிர்ப்பு தின விழிப்புணர்வுப் பேரணி எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை நடத்தப்படவுள்ளது.

யாழ்.நல்லூர் ஆலய முன்றலில் முற்பகல் 8.00 மணிக்கு ஆரம்பித்து வீரசிங்கம் மண்டபத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நிறைவு பெறவுள்ளதாக சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத் துறைத் தலைவர் டாக்டர் இ.சுரேந்திரகுமாரன் அறிவித்துள்ளார்.

## இணுவில் மத்திய கல்லூரிக்கு புதிய அதிபர் நியமனம்

(இணுவில்)

பல மாதங்களாக அதிபர் இல்லாது இருந்து வந்த இணுவில் மத்திய கல்லூரிக்குப் புதிய அதிபராக இ.துரைசிங்கம் வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வணிகமாணிப் பட்டதாரியான இவர் அதிபர் சேவை 2-II ஐச் சேர்ந்தவராவார். மகாஜனக் கல்லூரியில் இணைப் பிரதி அதிபராகவும், பகுதித் தலைவராகவும் 13 வருடங்கள் சேவையாற்றி யிருந்தவர்.

2012 முதல் இரு வருடங்கள் பூநகரிக் கல்விக் கோட்டத்திலுள்ள கறுக்காய்த்தீவு மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றினார். இந்த வருட முற்பகுதியில் மல்லாகம் மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (06)


## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1060 | திகதி 26.05.2014

வெற்றி எண்கள் 35 38 50 58 | ஆங்கில எழுத்து R

ஜக்பொட் பரிசு ரூ. 2,95,54,120/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 2,95,54,120/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 0 | 10,00,000/= | ரூ. - |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 4 | 50,000/= | ரூ. 2,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 265 | 1,000/= | ரூ. 2,65,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 450 | 1,000/= | ரூ. 4,50,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11667 | 60/= | ரூ. 7,00,020/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6041 | 40/= | ரூ. 2,41,640/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 152518 | 20/= | ரூ. 30,50,360/= |
| ஆங்கில எழுத்து | 22090 | 20/= | ரூ. 4,41,800/= |
| | | மொத்தம் ரூ. | 53,48,820/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 8 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 606293892-2-02 |
| நுவரெலியா | 606283143-4-44 |
| ஹம்பாந்தோட்டை | 606285338-2-22 |
| மொனராகலை | 606280081-9-39 |
| மாத்தளை | 606287046-7-07 |
| பொலன்னறுவை | 606289355-5-15 |
| கொழும்பு | 606288295-2-22 |
| திருக்கோணமலை | 606294316-5-35 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 57,48,820/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 29,852,520/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.05.29 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3674)



வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : ஏ.விசாகன்

முகவரி : வேலணை மேற்கு, கண்ணப்பபுரம்.

அகவை 08 இல்



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



## சிறு விளம்பரங்கள்

### வேலைவாய்ப்பு

நிரந்தரமான தொழில், நிரந்தரமான சம்பளத்துடன் 24,000.00 - 38,000.00 வரை வருகை தரும் தினமே சேர்த்துக்கொள்ளப்படுவர். (உற்பத்தி பொதியிடல், மேற்பார்வையாளர்) சாப்பாடு, தங்குமிட வசதியுண்டு 18 - 55 வயது வரையான ஆண், பெண்களும், குழுக்களாகவும் இணைந்து கொள்ளலாம். தொ.பே-0710854068.

□ □ □ □ □

விமான நிலையம் (கனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18 - 55 வரையான ஆண். பெண் தேவை. சம்பளம் 18,000.00-35,000.00 வரை. தங்குமிடம், உணவு, பயிற்சி வழங்கப்படும். வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள். தொ.பே-0775964299 (R/348)

□ □ □ □ □

### டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3395)

# ஈ பாடசாலை தகவல் தொழில்நுட்பம் இரு பாடசாலைகளில் ஆரம்பம்



(முல்லைத்தீவு)

1000 இடைநிலை பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாங்குளம் மகாவித்தியாலயம் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கு ஈ பாடசாலை தகவல் தொழில்நுட்ப பிரிவு வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக் கப்பட்டது.

முல்லைத்தீவு மாங்குளம் மகாவித்தியாலய அதிபர் ப.ரவீந்திரன் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி அதிபர் க.சிவலிங்கம் ஆகியோர் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் கலந்து தகவல் தொழில்நுட்ப இணையத் தளத்தினை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்து தொழில்நுட்ப மாணவர்களுடன் நேரில் கலந்துரையாடல்களையும் மேற்கொண்டுள்ளனர்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொள்ளும் வீரர்களை பார்வையிட்டு அவர்களோடும் கலந்துரையாடியுள்ளனர்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக முல்லை வலயக்கல்விப் பணிப்பாளர் க.மாளினி. மாங்குளம் இராணுவ பொறுப்பதிகாரி பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோரும் கலந்து சிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

# பார்ப்போரை மெய்சிலிர்க்க வைத்த அடியார்களின் நேர்த்திக்கடன்கள்

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி அருள்மிகு மருதாம்புலம் பத்திரகாளி அம்பாள் ஆலய கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு கடந்த 21 ஆம் திகதி புதன்கிழமை காலை அடியார்கள் ஆனந்தக் காவடி, பாற்செம்பு எடுத்து அம்பாளுக்கு பரிகாரம் செய்த காட்சி பக்திபூர்வமானதோடு அனைவரையும் மெய்சிலிர்க்கச்செய்திருந்தது.

பொலிகண்டி இலுப்பை மூலை சித்திவிநாயகர் தேவஸ்தானத்திலிருந்து காலை 8.00 மணிக்கு விசேட பூசை புண்ணியதானங்களுடன் பெண்கள் பாற்செம்பை தலையிலும் ஆண்கள் காவடிகளை தோள்களிலும் சுமந்தவாறு கந்தவனக்கடவை வீதியூடாக ஏழுபுளியடி வழியே அம்பாளின் பாதக்கமல வாசலை வந்தடைந்தனர்.

இப்பக்திபூர்வமான விழாவில் பொலிகை மறவர் கலை பண்பாட்டு மையத்தினரின் பக்தி இசையில் ஆனந்தத்துடன் காவடிகள் சுழன்று ஆடியது அனைவரையும் மெய்சிலுர்க்கவைத்தது. இதன் பின்னர் பத்திரகாளி அம்பாளுக்கு 11.30 மணியளவில் விசேட பூசை ஆராதனைகளுடன் கும்பப்பூசைகள் நடைபெற்றதோடு பரிவார மூர்த்திகளுக்கான கும்பாபிஷேக ஆராதனைகளும் நடைபெற்று மதியம் ஆலயச் சூழலில் அமைந்துள்ள அமுதசுரபி அன்னதான மடத்தில் மகேஸ்வர பூசையும் இடம்பெற்றது.

மேலும் இவ்விழாவில் அடியார்கள் இறை பக்தியுடன் ஆசாரசீலர்களாக கலந்துகொண்டதுடன் அம்பாளின் அருள்வேண்டிச்சென்றனர். (116)

# யுனிசெப் திட்டங்கள் பற்றி அதிகாரிகளுடன் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் "யுனிசெப்" நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் பற்றிய கலந்துரையாடல் பிரதம செயலாளர் திருமதி. ர.விஜயலட்சுமி தலைமையில் பிரதம செயலாளர் செயலகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இலங்கைக்கான "யுனிசெப்" பிரதிநிதி திருமதி ஊனா மைக்குலே, இலங்கைக்கான "யுனிசெப்" சிறுவர் பாதுகாப்பு தலைமை அதிகாரி திருமதி கரோலின் பெக்கர், வடமாகாணத்திற்கான "யுனிசெப்" வெளிக்கள அலுவலக பிரதம அதிகாரி பிரகாஸ் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ்.திருவாகரன், மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.இரவீந்திரன், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், பிரதிப் பிரதம செயலாளர் - திட்டமிடல் ஆர்.உமாகாந்தன், பிரதிப் பிரதம செயலாளர் - நிதி ஆர்.பத்மநாதன், சுகாதார பணிப்பாளர் கலாநிதி திருமதி எஸ்.ஆர்.ஜுட், சமூக சேவைகள் பணிப்பாளர் திருமதி. ஜ.நளாயினி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளர் வி.விஸ்வரூபன், உள்ளூராட்சி ஆணையர் எம்.யெகு, மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் ஆர். பிரேமகாந்தன் மற்றும் பிரதம கணக்காளர் கே.கமலரூபன் ஆகியோரும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.




# குலத்தார்...! உங்கட ஆக்களுக்கு இனிப்புக் குடுக்கோணுமெண்டால்... உங்கட சொந்தச் செலவில குடுங்கோ...

சத்தியமாச் சொல்லுறன், வட மாகாணக் கல்வி அமைச்சர் ஒரு பென்னாம் பெரிய சாதனையாளன்தான். இவற்றை சாதனையைப் பற்றித்தான் இப்ப மாகாணசபையில எல்லாரும் கதைக்கினம்.

பள்ளிக்கூடக்காணி, ஆஸ்பத்திரிக்காணி எல்லாத்தையும் தனக்கு வேண்டிய ஆக்களுக்குக் குடுக்கிறதுக்கு அலுவல் பாக்கிற ஆள் எண்டால்... குலத்தார் என்ன குறைஞ்ச ஆளே...?

'சும்மா போங்கோ அண்ணை, இவர் இந்தமாதிரியான அரும்பெரும் பணிகளை தன்ரை கல்விச் சேவைக்காலத்திலயும் செய்தவர். இப்ப அரசியல்வாதியாக இருக்கிற காலத்திலயும் செய்து கொண்டிருக்கிறார்' எண்டு சொல்கிறார் குலத்தாரோட ஒண்டாக வேலை செய்து போட்டு இப்ப வந்து இஞ்ச மாகாணசபையில வேலை செய்யிற ஒரு அதிகாரி.

ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம், வாய்க்கால், குளம் எண்ட பொது இடங்களுக்கெண்டு ஒதுக்கப்பட்ட பொதுக்காணிகளைத் தனிப்பட்ட தேவைகளுக்காக அடாத்துப் பண்ணுகிற ஆட்களிட்டையிருந்து பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் படிச்சவைக்கும் பதவியில இருக்கிறவைக்கும் உரியதல்லோ. இதை ஆரும் மறுக்கலாமோ!

ஆனால், இந்தப் பெரிய படிப்பாளி, தன்ரை வீட்டுக்கு முன்னுக்கிருக்கிற ஆஸ்பத்திரிக் காணியை தனக்கு வேண்டிய ஆறு ஏழு குடும்பத்துக்கு எடுத்துக் குடுக்கிறதுக்கு, படாத பாடெல்லாம் படுகிறார்.

இதுக்காக அவர் கொஞ்ச நாளைக்கு முதல் கண்டாவளை ஏ.ஜீ.ஏ கந்தோருக்குள்ளாலை அலுவல் பாத்திருக்கிறார்.

அங்க இருக்கிற காணி உத்தியோகத்தர் தொடக்கம் அதுக்கு மேல கீழ இருக்கிற அதிகாரிகள், உத்தியோகத்தர்மாரிட்ட எல்லாம் கேட்டுக் கெஞ்சிப்பார்த்தார். போனுக்கு மேல போன் அடிச்சு கொஞ்சம் இறுக்கமாகக் கதைச்சும் பார்த்தார்.

ஒண்டும் சரிப்பட்டு வரேல்ல.

இந்தக்காணி பரந்தன் – முல்லைத்தீவில இருக்கிற தருமபுரம் ஆஸ்பத்திரிக்கு உரித்தானது எண்டு, இந்தக்காணியில இருக்கிற குடும்பங்களுக்கு எதிராக கிளிநொச்சிக் கோட்டில (நீதிமன்றத்தில) வழக்கு நடந்து கொண்டிருக்கு.

இந்த வழக்கைப்போட்டதே ஏ.ஜீ.ஏ கந்தோர்தான்.

அப்பிடியிருக்க, இவர் குலத்தார் உள்ளால் சுழிச்சு விளையாட ஆரும் விடுவினமா?

ஆனால், குலத்தாரும் இதை விடுகிறதாக இல்லை.

ஏனெண்டால், இந்தக் காணியில இருக்கிற ஆட்கள், ஐயாவுக்கு வேண்டியவையல்லோ. தேர்தலிலயும் ஐயாவுக்காக வேலை செய்தவை.

'நாங்கள் உங்களுக்கு வோட்பண்ணிறம். நீங்கள் வெண்ட கையோட இந்தக் காணிப்பிரச்சினையை எங்களுக்கு முடிச்சுத்தரோணும்...' எண்டு ஒரு நிபந்தனையையும் ஐயாவிட்ட இவை வைச்சிருந்தவை.

குலத்தாரும் நக்குண்டார் நாவிழந்தார் எண்ட கணக்கில எப்பிடியாவது தான் பட்ட கடனுக்கு இந்தக் காணிகளை எடுத்து அந்தக் குடும்பங்களுக்குக் குடுக்கோணும் எண்டு ராப்பகலாக மண்டையைப்போட்டு உடைச்சுக் கொண்டிருக்கிறார்.

அப்பதான் ஆளுக்கு ஒரு ஐடியா வந்திது. பேசாமல் வட மாகாண சுகாதார அமைச்சைச் சேர்ந்தவையை வைச்சு இந்தக் காணிகளை மடக்கி தன்ரை ஆக்களுக்குக் குடுக்கலாம்.. எண்டு.

உடனயே சிங்கன் களத்தில இறங்கிக் காரியத்தைப் பார்க்கத் தொடங்கீட்டார்...

போன 24.05.2014 ஆந் திகதி தருமபுரத்துக்கு சுகாதார அமைச்சின்ரை ஆக்களைக் கூட்டிக் கொண்டு வந்து, வலு ரகசியமாகக் காயை நகர்த்த வெளிக்கிட்டார்.

அப்பதான் மச்சானுக்குச் சனியன் பிடிக்கத் தொடங்கினது.

இவர் காணியைச் சுத்திக் காட்ட இதைப் பார்த்துக் கொண்டு போன ஆட்கள் ஊருக்குள்ள போய்ச்சொல்ல....

ஆஸ்பத்திரிக்காணியை இப்படி தனிப்பட்ட ஆக்களுக்குக் குடுத்து அநியாயம் பண்ண விடமாட்டம் எண்டு ஊரெல்லாம் அமர்க்களம் தொடங்கீட்டுது...

இதை எதிர்த்துச் சனங்கள் மாகாணசபைக்கும் கோட்டுக்கும் ஊர்வலம் போகவும் தயாராகீட்டினம்.

கிளிநொச்சி நகரப்பகுதிக்கு அடுத்ததாக தருமபுரம்பகுதிதான் சனத்தொகை கூடின பகுதி. அப்பிடியெண்டால், அங்க ஒரு நல்ல பெரிய ஆஸ்பத்திரி கட்டாயம் தேவையல்லோ.... இதுக்கெண்டு காசும் ஒதுக்கப்பட்டு வந்திருக்கு.

இந்தக் காணிப்பிரச்சினையை தீர்த்து வைச்சால் நல்லதொரு ஆஸ்பத்திரியைக் கட்டலாம் எண்டு சுகாதாரப் பணிப்பாளர் தொடக்கம் ஏஜீஏ ஒபிஸ்காரர், ஊரில இருக்கிற நலன் விரும்பிகள் எல்லாரும் முயற்சி எடுத்து கொண்டிருக்கேக்கதான் குலத்தார் இப்பிடிக் குறுக்கால அறுக்கிறார்.

குலத்தார்...! சத்தியமா இது ஒரு சுத்தமான அநியாயம். தருமபுரம் சனத்துக்கு மட்டுமில்ல அந்தச் சுற்றுவட்டாரத்தில இருக்கிற ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு நீங்கள் செய்யிற பச்சைத் துரோகம் இது. இந்தச் சனங்கள் உங்களைப்போல வெளிநாடுகளுக்குப் பிள்ளையளை அனுப்பிப்போட்டு பதவி, புகழுக்காக அரசியல் செய்யிற ஆட்களில்லை. அத்தினையும் ஏழைச்சனங்கள்.

உங்களுக்கு வேண்டிய – நீங்கள் விரும்பிய ஆக்களுக்கு இனிப்புக் குடுக்கிறதெண்டால் நல்லாய்க்குடுங்கோ... ஆனால், அதை உங்கட சொந்தச் செலவில குடுங்கோ...
ஆஸ்பத்திரிக்கு முன்னால், நீங்களும் ஏக்கர்கணக்கில காணி வைச்சிருக்கிறியள்...

இப்பிடி அரசாங்கக் காணியில, ஆஸ்பத்திரிக்காணியில அதைச் செய்யாதையுங்கோ...

ஒரு காலம் தருமபுரத்தில கொம்யுனிஸ்ற் பாட்டிக்காரர் செய்த தொண்டையும் இப்ப குலத்தார் செய்கிற இந்தக் கேவலத்தையும் விசயம் விளங்கின ஆட்கள் ஒப்பிட்டுப்பார்க்கோணும்...

அப்பதான் தெரியும் நன்மை எது தீமை எது எண்டு...

மிகப்பெரிய உண்மை இது, பலமே வாழ்வு
பலவீனமே மரணம். - *விவேகானந்தர்.*

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
**Online : www.emurasu.com**

## தன்னையுணருமா தமிழ்ச் சமூகம்?

மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களைப் புறக்கணித்துக் கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், இப்போது எதற்கு அந்தக் கூட்டங்களில் பங்கெடுத்துக் கொள்கிறார்கள் என்பதை இரண்டு கூட்டத் தொடருக்குள்ளாகவே பட்டவர்த்தனமாக நாம் புரிந்துகொள்ளும்படி காட்டி விட்டார்கள்.

தன்னாட்சி – தனியலகு என்பதைத் தவிர தமிழ் மக்களுக்கு வேறெந்தத் தீர்வும் வரவிடமாட்டோம் என்று சொல்லிவந்தவர்கள், எதற்காக வடக்கு மாகாண சபைக்குப் போட்டியிட்டுப் போய்க் குந்தினார்களோ அதே காரணத்தின் அடிப்படையில்தான் இப்போது அபிவிருத்திக் குழுக் கூட்டத்திற்கும் சென்று, அதையும் வெறுமனே அரசாங்கத்தைத் திட்டிவிட்டுப் போகும் இடமாக மாற்ற முயற்சிப்பதை அவதானிக்க முடிகிறது.

இப்போது கூட்டமைப்பினர் இணைத் தலைமைப் பொறுப்பேற்று படைபட்டாளமாகச் சென்று மாறி மாறி வாய்ப்போர் நடத்திக் கொண்டிருக்கும் இந்தப் போர்க்களக் காட்சிகளுக்கு, முந்தி நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில், அபிவிருத்தி தொடர்பான திட்டங்களும் தீர்மானங்களும், மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் காணப்பட்டே அந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடைபெற்று வந்திருக்கின்றன.

கூட்டமைப்பினர் அபிவிருத்திக் குழுக் கூட்டங்களுக்குச் செல்லத் தொடங்கிய பிறகு, சண்டைக் காட்சிகளும், அரச எதிர்ப்பு வீர வசனங்களும், அது ஏதோ கேலிக்கூத்து நடைபெறும் இடமாகவும்தான் அக்கூட்டங்களைக் கண்டு ஊடகங்கள் மகிழ்ச்சி கொண்டாடுவதைப் பார்க்கமுடிகிறதே தவிர, மக்களுக்கு உருப்படியான எதுவும் நடக்க விடக்கூடாது; எதுவும் நடக்காது என்று ததேகூ வினர் செயற்படுவது துலாம்பரமாகியிருக்கிறது.

அதாவது, அவர்களது முடிந்த முடிபான அந்த அரசியற் கொள்கைக்கேற்ப, தமிழ் மக்களுக்கு எதுவும் நடைபெறாது, இலங்கை அரசாங்கம் எதையுமே செய்யாது; தமிழ் மக்களுக்கு எந்தத் தீர்வும் இல்லை; தமிழர்கள் பேசாமல் போர்க்குற்ற விசாரணைக்கு முயற்சி செய்துகொண்டிருப்பதுதான் ஒரே வழி என்பதை நிறுவுவதற்கே ததேகூ வினர் அபிவிருத்திக் கூட்டங்களையும் குழப்புவதாகத் தெரிகிறது.

ததேகூ வினரின் இந்த சுயநல அரசியற் கொள்கை காரணமாகத்தான், அழிவுகள் அவலங்களைப் பாதியிலேயே தவிர்த்துக் கொள்ளக் கூடிய, தீர்வை எடுத்திருக்க வேண்டிய சந்தர்ப்பங்களொன்றையும் பயன்படுத்த எண்ணாத வெற்று வீம்பிலேயே எமது சமூகம் வைக்கப்பட்டது.

தொடர்ச்சியான விரோதப் பேச்சுக்கள் சவால்கள் மூலம் மாற்றுச் சமூகத்தவர்கள் குறித்து, நம்மிடம் பகையும் வெறுப்பும் ஆவேசங்களையும் உருவாக்குவதன் மூலம் தமிழ்த் தலைவர்கள் எனப்படுவோர் தங்கள் பதவிகளைத் தக்கவைத்துக் கொள்ளும் மிக இழிவான அரசியல்தான் இங்கே நடக்கிறது!

எந்த ஆதார பலமுமில்லாமலே, தொடர்ந்தும் அதே பகை வெறுப்பை வளர்த்துவிட்டுக் கொண்டு அந்த நெருப்பில் பதவிக் குளிர் காய்ந்துகொண்டிருப்பதுதான் தமிழ்த் தேசிய அரசியலாக இருக்கிறது. குகைமனிதர் காலத்து குழுஆவேச உணர்ச்சி தவிர வேறு எந்த ராஜதந்திரமும் அற்றவர்களாக தமிழர்கள் ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

மக்களைக் காக்கும் எந்த ராஜ்தந்திர வழிமுறைகளும் இல்லாதவர்களிடம் அல்லது தெரியாதவர்களிடம் ஒப்புக்கொடுத்துவிட்டு, தடுமாறிக் கொண்டிருக்கும் காட்சியே நம் சமூகத்தின் சித்திரமாகத் தெரிகிறது.

நம் சமூகம் முதலில் தன்னை உணர்ந்து கொள்வதற்கான உரையாடல்களைத் திறக்க வேண்டும். அதிலிருந்து, எமது சமூகத்தின் மீட்சிக்கான யதார்த்த அணுகுமுறைகளுக்கு நாம் செல்ல வேண்டும்.

- ஆசிரியர்.

# புகையிலை நிறுவனத்திடம் விலைபோன உயர்நீதிமன்றம்

## –ஜாதிக ஹெலஉறுமய சீற்றம்

உயர் நீதிமன்றத்தையும் நிறைவேற்று அதிகாரம் கொண்டவரையும் புகையிலை நிறுவனம் விலைக்கு வாங்கி விட்டதா என ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தினதேரர் சந்தேகம் எழுப்பியுள்ளார்.

தற்போதுள்ள ஜனாதிபதிக்கு பதிலாக இன்னுமொரு ஜனாதிபதி வந்தால் அவரையும் இந்த நிறுவனமே ஆட்டிப்படைக்கும் புகையிலை நிறுவனம் தொடர்பில் நீதிமன்றம் அண்மையில் வழங்கிய தீர்ப்பு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. தீர்ப்பு குறித்து பேசி 10 வருடங்கள் சிறை செல்லவும் தயார்.

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் உலக சுகாதார அமைப்பிற்கு இது குறித்து தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளேன்.

நீதிமன்ற தீர்ப்பை விமர்சிக்கும் என்னை முடிந்தால் 10 வருடங்கள் சிறையில் அடைக்கட்டும்.

நாட்டில் தேர்தலுக்கு கசினோ காரர்கள் பணம் வழங்குவதாகவும் இந்த அரசாங்கம் தோல்வியடையும் என தெரிந்து கொண்டால் கசினோ காரர்கள் எதிர்க்கட்சிக்கு பணம் கொடுத்து அவர்களை பலப்படுத்துவர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

77ஆம் ஆண்டிற்குப் பின் நாடடில் சூது அதிகரித்துள்ளது அது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றார்.

# குவைத்தில் சட்டவிரோதமாக 20 ஆயிரம் இலங்கையர் பணி

குவைத் நாட்டில் சட்டவிரோதமாக 20,000 திற்கும் அதிகமான இலங்கை பணியாளர்கள் தங்கியிருப்பதாக, குவைத்தின் இலங்கைக்கான தூதுவராலயம் தெரிவித்துள்ளது.

குவைத்தில் பல்வேறு துறைகளில் தொழில் புரிவோரே சட்டவிரோதமாக தங்கியிருப்பதாக இலங்கைக்கான தூதுவர் சீ.ஏ.எச்.எம்.விஜேரத்ன தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை திரும்பும் எதிர்பார்ப்புடன் பெருந்திரளானவர்கள் நாளாந்தம் தூதுவராலயத்தின் ஒத்துழைப்பை நாடி வருகின்றனர்.

எனினும் குவைத்தில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் இலங்கையர்கள் கைது செய்யப்படும் சந்தர்ப்பங்களில் விசேட ஏற்பாடுகள் மூலம் அவர்கள் விடுவிக்கப்படுவதாகவும் இலங்கைக்கான தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கடந்த 5 மாதகாலப் பகுதியில் 10ஆயிரத்து 540 பேருக்கு டெங்கு

(கொழும்பு)

இந்த வருடத்தின் இதுவரையுமான காலப்பகுதியில் 10 ஆயிரத்து 540 பேர் டெங்கு தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதாக தொற்று நோய் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் பபா பலிகவதன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மழையுடன் கூடிய கால நிலை காரணமாக டெங்கு தொற்று அதிகரிக்கும் அபாய நிலை தோன்றியுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவு இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

மேல் மாகாணத்திலேயே 60 சதவீதமான அதிகரிப்பு காணப்படுகின்றது.

இதன்படி கொழும்பு மாவட்டத்தில் 3 ஆயிரத்து 774 பேரும், கம்பஹா மாவட்டத்தில் ஆயிரத்து 680 பேரும் களுத்துறையில் 774 பேரும் டெங்கு தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

.குறிப்பாக கொழும்பு மற்றும் தெஹிவளை - கல்கிஸ்ச மாநகர சபைகளின் நிர்வாகத்திற்குட்பட்ட பகுதிகளில் துரிதமான டெங்கு தொற்று பரவல் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறிப்பிட்ட காலப்பகுதியில் டெங்கு தொற்று காரணமாக 33 பேர் பலியாகியுள்ளனர். இவ்வாறான நிலையில் டெங்கு தொற்றை குறைத்துக் கொள்ள பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# சினைப்பசுவின் இறைச்சி விற்பனை; பிரதேசசபை பணியாளர் பணிநீக்கம்

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச சபையின் கீழுள்ள அம்பாள்குளம் பகுதியிலுள்ள கொல்களமொன்றில் சினைப் பசுமாடொன்றை இறைச்சிக்கு வெட்டியமை தொடர்பான சந்தேகத்தின் பேரில் பிரதேசசபை பணியாளர் ஒருவரை நேற்று முன்தினம் பணிநீக்கம் செய்ததாக கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் தெரிவித்தார்.

அத்துடன், மேற்படி இறைச்சியை விற்பனை செய்த 2 மாட்டிறைச்சிக் கடைகளை மூடியுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேற்படி பிரதேச சபை பணியாளரின் கண்காணிப்பின் கீழ், கொல்களத்தில் சட்டவிரோதமாக சினைப் பசுமாடொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை இறைச்சிக்கு வெட்டப்பட்டதுடன், இறைச்சி உருத்திரபுரத்திலுள்ள மாட்டிறைச்சிக் கடைகளில் விற்பனை செய்யப்பட்டன.

இந்நிலையில்,குறித்த பணியாளர் மீது விசாரணை மேற்கொண்ட நிலையில், அவரை பணி நீக்கம் செய்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கணனி பாகங்களை திருடிய சிறுவனுக்கு விளக்கமறியல்

யாழ். கொடிகாமம் பகுதிக்குட்பட்ட பாடசாலையொன்றின் கணனி அறையிலிருந்த கணனியின் பாகங்களைத் திருடிய 17 வயது சிறுவனை எதிர்வரும் யூன் மாதம் 4 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவான் சிறிநிதி நந்தசேகரம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.மேற்படி பாடசாலையின் கணனி அறையிலிருந்த 50 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான கணனி உபகரணங்கள் கடந்த புதன்கிழமை திருட்டுப் போயிருந்ததாக பாடசாலை அதிபரினால் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அப்பகுதியினைச் சேர்ந்த 17 வயதுச் சிறுவன் ஒருவனை கடந்த சனிக்கிழமை கைதுசெய்தனர்.

இச்சிறுவன் பாடசாலையின் மதிலைக் கடந்து சென்று பாடசாலையில் உள்நுழைந்ததாக விசாரணைகளின் மூலம் தெரியவந்தது. தொடர்ந்து மேற்படி சிறுவன் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போதே நீதவான் மேற்படி உத்தரவினைப் பிறப்பித்தார்.

# சீசன் போராளிகள்!

**ப்ரோஸ் நிஹாலே**


ஈழத்தமிழர்களை பொறுத்தவரை அவர்களது அரசியலரங்கில் மே 2009 ற்குப் பிறகு மூன்று போராட்ட சீசன்கள் உள்ளன. முதலாவது மார்ச் மாதத்தில் சனல் 4 தொலைக்காட்சி கொடியேற்றத்துடன் தொடங்கி ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டில் அமெரிக்கத் தீர்மானத்துடன் ஐ.நாடுகள் சபைக்கு முன்பாக தீர்த்தத்திருவிழாவில் கொத்து ரொட்டித் தானத்துடன் நிறைவு பெறும்.

இரண்டாவது சீசன் மே மாதத்தின் மூன்றாவது வாரம். இங்கே மூன்றாவது வாரம் என்று குறிப்பாக ஒரு நாளைச் சொல்லாமல் வாரத்தையும் சொல்லுவதற்கு காரணம் உள்ளது. மே பதினேழு, பதினெட்டு, பத்தொன்பது, இனப்படுகொலை நாள், துக்கநாள் என்று தமிழன் குழம்புவதற்கு ஆயிரம் காரணங்கள் உள்ளது. அது சரி திருவிழா என்றால் கொடியேற்றம், தேர், தீர்த்தம், சப்பறம், திருக்கல்யாணம் எண்டு இருக்கத்தானே செய்யும் என்கிறீர்களா?

முள்ளிவாய்க்கால் நினைவு காலம் வந்து விட்டால் அதுவரை சிவனே-யென விட்டத்தை பார்த்து நித்திரை கொள்பவர்கள் எல்லாம், மரவள்ளித் தோட்டத்துக்குள் நுழைந்த பன்றிகள் இரண்டு சீன வெடியைப் போட்டால் பரபரப்பாவது மாதிரி அலாதிப் படுவார்கள். கதைக்கும்



வெசாக் அன்னதானப் பந்தலில்




போது, குரலை ஒரு சோக ரோனில் வைத்திருப்பார்கள். ஒரு வார்த்தை மேலதிகமாக கதைத்துவிட்டால் உடைந்து அழ தயாராகிவிடுபவர்களை போல இருப்பார்கள்.

அதுவரை சமூகவலைத்தளங்களில் அமலாபாலினதும், விராட்ஹோலியினதும் படங்களை முகப்புப் படங்களாக வைத்திருப்பவர்கள், அவசர அவசரமாக கூகுளில் ஒரு தேடுதல் வேட்டையை நடத்தி ஒரு தீபத்திற்கோ அல்லது போட்டோசொப்பில் பதப்படுத்தப்பட்ட ராஜபக்ச, சோனியா காந்தி போன்ற படங்களுக்கோ அல்லது இலங்கை அரசை கண்டிக்கும் சுலோகத்திற்கோ மாறுவார்கள் (அவரவரது அறிவுஜீவித்தனத்திற்கு ஏற்றவாறு மாறுபடும்).

அமலாபாலுக்கு கல்யாணமாகப்போகுதே எண்ட கவலையிலை திரிந்தவர்கள், ஐ.பி.எல். இல் மக்ஸ்வெலின் சூறாவளியில் சுருண்டுபோய் இருந்தவர்களும், காண்டி கிரஷ் சாகவுக்கு இடைவிடாது இன்விட்டேசன் அனுப்பிக்கொண்டிருந்த பயபுள்ளகள் எல்லோரும் சட்டென போராளியாகி, அறக்கத்திகளை நாலாபுறமும் வீசத் தொடங்குவார்கள். ஒவ்வொரு முகப்புத்தக நிலைத்தகவலும் அணுகுண்டாக மாறும், ருவிட்டரில் கண்ணிவெடிகளைப் புதைப்பார்கள், பகிரப்படும் ஒவ்வொரு போட்டோவும் கண்ணீர் வெடியாக மாறும், ஒவ்வொருவரின் தாக்குதலிலும் ராஜபக்ச நூற்றியெட்டு துண்டாகி விழுவார்.

இந்த வருடத்தில் இரண்டாவது சீசனும் எந்தத் தொய்வுமில்லாமல் நடந்து முடிந்துவிட்டது. இனி மூன்றாவது சீசனில்தான் இந்தக் காட்சிகளைக் காணலாம். அது நவம்பரில் மாவீரர்தினச் சமயத்தில் வரும்.

புவிவெப்பமடைந்து வருகிறது, காலநிலை மாற்றம் ஏற்படுகின்றதெனச் சொல்கிறார்கள், அதுபோலத்தான் இதுவும். ஈழத்தமிழர்களின் அரசியலரங்கில் கடந்த ஐந்து வருடங்களில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றமிது. முன்னர் வருடத்தின் 365 நாளும் போராடிய காலம்போய், இப்பொழுது வருடத்திற்கு மூன்று போராட்ட சீசன்களாகச் சுருங்கிப் போயிருக்கிறது.

வங்கக்கடலோரமாக திடீர்த்திடீரென காற்றழுத்த மையங்கள் ஏற்படுவது மாதிரி, அவ்வப்போது ஏதாவது மாற்றங்கள் வரலாம். எப்பவாவது ராஜபக்ச வெளிநாட்டிற்கு ஒரு விசிற் அடித்தால், வடக்கில் ஒரு எலக்சன் வந்தால்தான் சீசனிற்கு மிஞ்சிய பொங்குதல் நடக்கும்.

அதுவரை அமலாபாலையோ, அடுத்த வீட்டு பிகரையோ புரபைல் பிக்சராக்கிவிடலாம். அந்த போராட்ட முறையினால் யாரிற்கும் எந்தப் பாதகமுமில்லை. அவ்வப்போது மனத்திருப்தியுமாயிற்று. நூறு லைக் வாங்கியுமாயிற்று.

மனிதர்களின் நிஜ வாழ்க்கை வேறு, இணைய வாழ்க்கை வேறு என்பதுதான் தொழில்நுட்பம் கற்றுத்தந்திருக்கும் பாடம். இணைய உலகமும் நிஜ உலகமும் வேறுவேறானவை என்பதைத் துல்லியமான உதாரணங்களின் மூலம் காலம் நிரூபித்துள்ளது.

எல்லா மனிதர்களிற்குள்ளும் அறவுணர்வு உள்ளதுதான், போராட்ட குணமும் உள்ளதுதான். ஒரு செயலுக்காக இணையத்தில் ஆவேசத்தை வெளிப்படுத்தும் ஒருவர், அதே செயலை நேரடியாக எதிர்கொள்ளும் போது அதேவிதமான எதிர்வினையை ஆற்றுவதில்லை. நம்மை, நமது வாழ்க்கையை, குடும்பத்தை, வேலையை என பலதையும் சிந்தித்தே செயற்படுகின்றோம். பெரும்பாலான சமயங்களில் எதுவும் பேசாமல் இடத்தைவிட்டு நகர்ந்து விடுவோம். இதனால்தான் இணைய உலகம் வேறு, நிஜ உலகம் வேறு என்கிறேன்.

இதனை மேலுமிரண்டு துல்லியமான உதாரணங்கள் மூலம் சொல்கிறேன்.

இன்று நாங்கள் கண்டு கொதிக்கும் முள்ளிவாய்க்கால் துயரம் ஐந்து வருடங்களின் முன்னர் நடந்தது. அப்பொழுது தமிழ்ச்சமூகம் என்ன செய்தது?

வகைதொகையில்லாமல் நமது மக்களே கொல்லப்பட்ட அடுத்தடுத்த மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நல்லூர் திருவிழா நடக்கவில்லையா? நமது பெண்கள் நந்திக்கடலோரமாக நிர்வாணமாக்கப்பட்டு கொல்லப்பட, கற்பில் சிறந்தது கண்ணகியா? சீதையா? என நாம் பட்டி மன்றங்கள் நடத்திக்கொண்டிருக்க வில்லையா? நடிக நடிகையரை அழைத்து புலம்பெயர் தேசங்களில் நட்சத்திர கலைவிழாக்கள் நடக்க வில்லையா? என்ன, வழமையில் எதுவும் சொல்லாமல் ஆடிப்பாடி விட்டு செல்பவர்கள், அந்த சமயத்தில் மட்டும், "ஐ லவ் யூ யப்னா" என அரங்கத்திலிருப்பவர்களை பார்த்து ஒரு உதட்டு முத்தம் கொடுப்பார்கள். அந்த நடிகையையும் நாம் போராளியாக்கி மனதை திருப்திப்படுத்தி கொள்வோம்.

இரண்டாவது உதாரணம் அண்மையில் நடந்தது. அண்மையில் வடக்கு மாகாணசபைக்கு எதிரில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் அஞ்சலி நிகழ்வு நடப்பதாக அறிவிக்கப்பட்டது. அறிவித்தல் வந்ததும், பாதுகாப்பு தரப்பு பெருந்தொகையில் அங்கு திரண்டு சென்றது. கணிசமான ஊடகக்காரர்களும் சென்றனர். ஆனால், தமிழ்தேசிய கூட்டமைப்புகாரர்கள்தான் வரவில்லை.

அன்றைய நிகழ்விற்கு வந்தது வெறும் மூவர். சிவாஜிலிங்கம், அனந்தி, மேரி கமலா. மிகுதிப்பேர் எங்கே? யாழ்ப்பாணத்தில் நான்கரை இலட்சம் மக்களிற்கு குறையாமல் உள்ளபோதும், அன்றைய அஞ்சலிக்கு வந்தவர்கள் வெறும் மூவர்தான்.

மிகுதிப்பேர் அனைவரும் வேறு ஒரு இடத்தில் பிஸியாக நின்றனர். கைதடியில் இருந்து சில கிலோமீற்றர்கள் தொலைவில்தான் யாழ்ப்பாண நகர மையம் உள்ளது. அங்குதான் படையினர் தமது பிரமாண்ட வெசாக் வலயத்தை அமைத்திருந்தனர். தமிழர்கள் பெரும்பாலானவர்கள் அங்கு குவிந்து நின்றனர். களியாட்டமொன்றை கண்டு களிக்கும் உற்சாகத்துடன் வந்து சென்று கொண்டிருந்தனர்.

சிவாஜிலிங்கம் தனித்து நின்று தீபமேற்றிய செய்தி வெளியான அன்று, நகரத்தில் படையினர் அமைத்த வெசாக் வலயத்தில் 10 ஆயிரம் மக்கள் அன்னதானம் உண்டதாக படையினர் அறிவித்தனர். இந்தப் பத்தாயிரம் பேரும் தென்பகுதியில் இருந்து இராணுவம் அழைத்து வந்தவர்கள் அல்லர். அனைவரும் இராணுவ ஆட்சிக்கு எதிராக இதே சிவாஜிலிங்கத்திற்கும், விக்னேஸ்வரனுக்கும் ஓட்டுப்போட்ட சிவப்பு மஞ்சள் தமிழர்கள்தான்.

இந்த எண்ணிக்கை மிகை எண்ணிக்கை அல்லவெண்பது அன்றைய நிகழ்வை அவதானித்தவர்களிற்கு தெரிந்திருக்கும். இத்தனைக்கும் யாழ்ப்பாண நகரத்துக்கும் கைதடிக்குமிடையில் உள்ளது வெறும்இருபது நிமிட பயணத்தூரம் தான்.

படையினரின் வெசாக் கண்காட்சி நான்கு நாட்கள் நீண்டு மே 20ஆம் திகதி வரையும் நடந்தது. கண்காட்சியில் அண்ணளவாக முப்பதாயிரம் மக்கள் கலந்து கொண்டார்கள் என வைத்துக் கொள்ளலாம். இவர்களில் சமூக வலைத்தள ஊடாட்டமுள்ளவர்கள் என அரைப்பங்கிற்கு மேற்பட்டவர்களை

**ஆகவே தோழர்களே... இனிப் பொழுதை வீணடிக்க தேவையில்லை. இன்னும் மெழுகுவர்த்திகளையோ, மே 18 என எழுதிய படங்களையோ முகப்பு படங்களாக வைத்திருக்க தேவையில்லை. மாற்றி விடலாம். நவம்பர் வரைக்கும் அரச்சீற்றத்துக்கு அல்வா கொடுத்துவிட்டு அமலாபால் கல்யாண அலுவல்களைக் கவனிக்கலாம்? சுப்பிரமணிய புரம் சுவாதி கூட கல்யாணத்துக்கு தயாராம் (எவ்வளவு சோகத்தைத் தான் தமிழன் தாங்குவான்!)**

கொள்ளலாம். அவர்கள் அத்தனை பேருமே சமூகவலைத்தளங்களில் முகப்பு படங்களாக ராஜபக்சவினதோ, ராணுவத்தினதோ படங்களை கொண்டவர்கள் என்பது அர்த்தமல்ல. சமூக வலைத்தளங்களில் அறச்சீற்றம் கொள்பவர்கள், இந்த மக்கள் திரளிற்குள்தான் இருப்பார்கள்.

இவர்கள் அன்றைய தினத்தில் மனம் பொங்கி, யாழ்ப்பாணம் சிங்கள மயப்பட்டு வருகின்றதென்றோ, பௌத்த சிங்கள அடையாளத் திணிப்பு நடக்கின்றதென்றோ பக்கத்திலிருந்தவருடன் கீழ்க்குரலில் குசுகுசுத்திருக்கக் கூடும். அதுபற்றியும் நமது அக்கறையல்ல. நாம் குறிப்பிட விழைவது, யாழ்ப்பாண நகரத்திற்கும் கைதடிக்குமிடையிலான இடையிலான தூரம் பற்றியதே.

தமிழர்கள் என்றாலே முகத்தை உர்ரென வைத்தபடி இருக்க வேண்டுமென்பதோ, களியாட்டங்களை புறக்கணிக்க வேண்டுமென்பதோ நமது வாதமல்ல. நாம் இங்கே சுட்டிக்காட்ட விரும்புவது விடுதலைப்போராட்டமொன்றை நடத்திக் கொண்டிருக்கும் நமது மக்களின் அடிப்படை இயல்பு பற்றியது. இன்னும் துல்லியமாக சொன்னால், இந்த இயல்பு நமது சமூகத்தின் பொது இயல்பு. அதனை இப்படி புரிந்து கொள்ளலாம்.

யுத்தத்தில் இறுதியில், சுமார் 12 ஆயிரம் பேர் புலிகள் அமைப்பில் இருந்ததாகக் கூறப்பட்டு புனர்வாழ்வின் பின்னர் விடுவிக்கப்பட்டனர். புலிகள் அமைப்பு ஆரம்பித்ததில் இருந்து முடியும் வரையான 35 வருட காலத்தில் பல்வேறு காலத்திலும் பங்களித்தவர்கள் அவர்கள்.

இதனைத் தவிர, விடுதலைப்புலிகளில் மரணமானவர்கள் என நாற்பதாயிரம் பேரைக் கொள்ளலாம். விடுதலைப் புலிகளின் மாவீரர் பட்டியலில் இடம் பெறாதவர்கள், யுத்தத்தின் கடைசி இரண்டு மூன்று நாட்களில் கொல்லப்பட்டவர்கள் என ஒரு மூவாயிரம் பேரைக் கணக்கிட்டாலும், மொத்தமே விடுதலைப்புலிகளின் நேரடி களச்செயற்பாட்டாளர்கள் என 55 ஆயிரம் பேர்தான்.

வெவ்வேறு காலங்களில் புலிகளிலிருந்து விலகி வெளிநாடு சென்றவர்கள் என, இரண்டாயிரம் பேரைக் கொண்டாலும் மொத்தமே 57 ஆயிரம்தான். அதாவது, கனடாவில் ரொரான்டோவில் உள்ள ஈழத்தமிழர்களின் ஆறில் ஒரு பகுதியினர்.

உலகம் முழுவதும் சுமார் 10 இலட்சம் ஈழத்தமிழர்கள் சிதறி இருக்கிறார்கள். இவர்களில் 90 விழுக்காட்டிற்கும் அதிகமானவர்கள் தீவிர தமிழ்த்தேசியவாதிகள். விட்டால் ராஜபக்சவின் குரல் வளையைக் கடித்துக் குதறிவிடத் தயாராய் இருப்பவர்கள். விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளர்கள். மனதளவில் தமிழீழ விடுதலைப்புலிகளை ஆழமாக நேசிக்கிறார்கள். ஈழவிடுதலைக்காக பணம் உள்ளிட்டவற்றை கொடுக்கிறார்கள்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# இனவாதிகளால் நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்க முடியாது

## மீன்பிடித்துறை அமைச்சர் தெரிவிப்பு



இனவாதிகள் மற்றும் மதவாதிகளினால் நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்க முடியாது என மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

மத்துகமவில் அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றின்போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கௌதம புத்தர் இனவாதம் மதவாதம் மற்றும் அடிப்படைவாதத்தை முற்று முழுதாக நிராகரித்தார்.

மனித நேயத்தை எவ்வாறு வளர்த்துக் கொள்வது என்பது பற்றியே கௌதம புத்தர் வழிகாட்டி வந்தார். 88 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்ற காலத்தில் வாரத்திற்கு இரண்டு தடவைகள் வடக்கிற்கு விஜயம் செய்து தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடாத்தியிருந்தேன்.

ஈ.பி.ஆர்.எல்.எப் மற்றும் ஈரோஸ் போன்ற அமைப்புக்களுடன் இணைந்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டோம். சகல விடுதலைப் புலி உறுப்பினர்களுடனும் இணைநது நான் செயற்பட்டிருக்கின்றேன்.

பயங்கரவாதத்தை நான் நிராகரித்தேன். இந்திய இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது முதல் நான் தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்துள்ளேன் என்றார்.

# உலக சுற்றாடல் தினத்தில் அதிக ஒலி எழுப்பலுக்கு தடை

(கொழும்பு)

எதிர்வரும் யூன் 5 ஆம் திகதி உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு கொழும்பில் வாகனங்களில் அதிக ஒலி எழுப்புவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது கொழும்பு நகரில் வாகன ஒலி எழுப்பலை குறைக்கும் செயற்பாட்டுக்கு முதல்படியாக இருக்கும் என்று கொழும்பு மாநகர சபை அறிவித்துள்ளது.

குறித்த நாளில் வாகன ஒலி எழுப்பல்கள் கவனிக்கப்படும் என்று மாநகரசபையின் சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். சாரதிகளுக்கு விழிப்புணர்வு என்ற அடிப்படையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# மலேசியாவில் கைதானவர்கள் இலங்கைக்கு நாடு கடத்தல்

புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற குற்றச்சாட்டில் மலேசியாவில் கைதுசெய்யப்பட்டவர்கள் நேற்று முன்தினம் இரவு இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டுள்ளனர்.

முன்னதாக மூவரே கைது செய்யப்பட்டிருந்ததாக மலேசிய அதிகாரிகளை மேற்கோள் காட்டி செய்திகள் வெளிவந்திருந்தன. எனினும், மொத்தமாக 9 பேர் கைதுசெய்யப்பட்டிருந்ததாகவும் இவர்கள் அனைவரும் தற்போது இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளதாகவும் மலேசிய மனித உரிமை அமைப்பொன்றின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பெயர் விபரங்கள், புகைப்படங்கள் வெளியிடப்பட்ட மூவரில் ஒருவர் ஐ.நா. அகதி அந்தஸ்து அங்கீகரிக்கப்பட்டவர் எனவும், மற்றையவர் அகதி அந்தஸ்திற்கு விண்ணப்பித்திருந்தவர் எனவும், மூன்றாவது நபர் மலேசியாவில் உரிய வீசா அனுமதியுடன் இருந்தவர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மலேசியாவில் இந்த விசேட தேடுதல் தொடரும் என மலேசிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எவ்வாறாயினும் மலேசியாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் அலுவலகத்தில் பதிவுசெய்துகொண்டு, அகதி அந்தஸ்து அங்கீகரிக்கப்பட்ட சுமார் 4,500 பேர் மலேசியாவில் தங்கியுள்ளனர்.

இதேவேளை, மலேசியாவில மேலும் பல இலங்கையர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், இந்த விவகாரம் தற்போது பெரும் அழுத்தத்தைத் தமக்கு ஏற்படுத்தியுள்ளதாகவும் மலேசியாவிலுள்ள உள்ளூர் மனித உரிமை அமைப்பொன்று தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், கைதுசெய்யப்பட்டவர்கள் ஐ.நா. அகதிகள் அந்தஸ்து அட்டையை துஷ்பிரயோகம் செய்துள்ளதாக மலேசிய அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். எவ்வாறாயினும் இந்தக் குற்றச்சாட்டுக் குறித்து முழுமையாக ஆராயப்படும் என மலேசியாவிற்கான ஐ.நா. அகதிகள் அலுவலக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.


# என்னைக் கொல்வதற்கு சதித்திட்டம் தீட்டப்படுகிறது

## கூறுகிறார் வட்டரக்க விஜிததேரர்

தன்னைப் படுகொலை செய்வதற்கு சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக மகியங்கனை பிரதேச சபையின் உறுப்பினரும் ஜாதிக பலசேனாவின் தலைவருமான வண வட்டரக்க விஜித தேரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மகியங்கனையிலுள்ள தன்னுடைய விகாரைக்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் தான் சென்றபோது இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வட்டரக்க தேரர் விகாரைக்குச் சென்றபோது அருகேயுள்ள காட்டுப்பகுதியிலிருந்து தொடர்ச்சியாக வெடிச்சத்தங்கள் கேட்டன. இதனால் அச்சமடைந்த தேரர், காட்டுப் பகுதியிலுள்ள மரம் ஒன்றில் ஏறி இரவு முழுவதும் இருந்ததாகக் கூறப்படுகின்றது.



இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட தேரர், தன்னைப் படுகொலை செய்வதற்கான திட்டம் ஒன்றை பொலிஸார் தீட்டியிருப்பதாகவும் அதற்கான தருணத்தை அவர்கள் எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

தன்னுடைய விகாரை அமைந்திருக்கும் பகுதியில் காட்டு யானைகள் எதுவும் இல்லை எனவும் குறிப்பிட்ட அவர் காட்டு யானைகளைத் துரத்துவதற்காகத்தான் வெடி வைக்கப்பட்டது என பொலிஸார் சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.

# மரண தண்டனைக்கு பதிலாக ஆயுள்தண்டனை 75 கைதிகளின் விபரங்கள் ஆராய்வு

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள 75 கைதிகள் தொடர்பான தகவல்களை சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சு ஆராய்நது வருகின்றது.

இந்தக் கைதிகளின் கருத்துக்களை அமைச்சின் மீளாய்வுக் குழு கேட்டறிந்துகொண்டுள்ளதாக அமைச்சின் செயலாளரும் மீளாய்வுக் குழுவின் உறுப்பினருமான ஜீ.எஸ்.விதானகே தெரிவித்துள்ளார்.

மரண தண்டனைக்கு பதிலாக அந்தக் கைதிகளுக்கு ஆயுள் தண்டனையை வழங்குவது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருவதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஆராய்ந்து நீதி அமைச்சரிடம் இது தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப் படவுள்ளது. அதன் பின்னர் குறித்த அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது.

9 பேரைக் கொண்ட இந்த மீளாய்வுக் குழுவிற்கு ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியொருவர் தலைமை வகிக்கின்றார். இதேவேளை 450 கைதிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது.

# மாணவர்களின் சுதந்திரமான கல்விக்கு நடவடிக்கை எடுக்கப்படும்

## ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் உறுதிமொழி

மாணவர்களுக்கு சுதந்திரமான கல்வியை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். கல்வித்துறை சார்ந்தவர்களுடன் இன்று முற்பகல் எதிர்கட்சித் தலைவர் காரியாலயத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் கல்வித்துறை தொடரபாக சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியின் கீழ் ரத்து செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நிதிய மைச்சர் சர்வதேச நாணய நிதியத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளார். அதன்படி இலங்கையில் இலவசக் கல்விமுறையினை இல்லாதொழிப்பதற்கான செயற்பாடு களை இந்த அரசாங்கம் மேற்கொண்டு வரு கிறது.

இந்த நடவடிக்கை உரிய வகையில் இடம்பெறுகின்றதா என்பதற்கான சர்வதேச நாணய நிதியத்தின் குழுவொன்று அண்மையில் இலங்கை வந்தது. ஐககிய தேசியக்கட்சியோ, நானோ இதனை ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம். இந்த வருடத்துடன், அரசாஙகத்தை வீட்டுக்கு அனுப்பி, புதிய அரசாங்கததை ஸ்தாபித்து அதன் மூலம் சுதந்திர கல்வியை ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொள்வோம் என்றார்.

# இராஜதந்திர கடவுச்சீட்டுக்கள் வழங்குவதில் முறைகேடுகள் இல்லை

## குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தகவல்

இராஜதந்திர கடவுச் சீட்டுக்களை வழங்குவதில் முறைகேடுகள் எதுவும் இடம்பெற வில்லை என இலங்கை குடி வரவு குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது. 2006 ஆம் ஆண்டு ஜனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தின் அடிப்படையில் சகல ராஜதந்திர கடவுச் சீட்டுக்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட இராஜதந்திர கடவுச் சீட்டுக்கள், பொருத்தமற்றவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அண்மையில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

எனினும், இவ்வாறான முறைகேடுகள் எதுவும் இடம்பெறவில்லை என குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் உயரதியாரியொருவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி செயலக சுற்று நிருபத்திற்கு புறம்பான வகையில் எவருக்கும் கடவுச் சீட்டுக்கள் வழங்கப்படவில்லை.

பொருத்தமற்றவர்களுக்கு இராஜதந்திர கடவுச் சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தி வருவோர் பிழையர்கபுரிந்து கொண்டே குற்றம் சுமத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

உதாரணமாக மாணவர்களுக்கு இராஜதந்திர கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அமைச்சர் ஒருவரின் மகன் அல்லது மகள் மாணவராக இருந்தாலும் ராஜதந்திர கடவுச்சீட்டு வழங்கப்படும்.

எவ்வாறெனினும் வர்த்தகர்கள் எவ்வாறு இராஜதந்திர கடவுச்சீட்டுக்க்ளைப் பெற்றுக் கொண்டார்கள் என்பது தமக்குப் புரியவில்லை என்றார்.

# புராதன இடங்களை பாதுகாக்க முறையான வேலைத்திட்டம் அவசியம்

## களனி பல்கலைக்கழக பேராசிரியர் ஆலோசனை

இலங்கையில் உள்ள புராதன சிறப்பு வாய்ந்த இடங்களை பாதுகாப்பதற்கு முறையான வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அரசாங்கம் இதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்று களனி பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் ஆய்வு பிரிவின் பேராசிரியர் பிரசாந்த குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், நாட்டின் புராதன பிரதேசங்களை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

இந்தநிலையில் புராதன பிரதேசங்களாக பாதுகாக்கப்பட வேண்டிய ஆயிரத்து 261 இடஙகள் இனஙகண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அவற்றில் 90 சதவீதமானவை புதையல் தோண்டலுக்காக சேதமாக்கப்பட்டுள்ளன என அவர் சுட்டிக்காட்டினார்.

# சுகாதார பரிசோதகர்களின் பிரச்சினைக்கு தீர்வு கிட்டும்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண பொதுச் சுகாதார பரிசோதகர்கள் முன்னெடுத்து வரும் பணிப்புறக்கணிப்பு போராட்டத்திற்குரிய தீர்வினைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென யாழ். கிளிநொச்சி மாவட்டங்களின் இணைத்தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைத்தலைவர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆகியோரை சந்தித்து தமது பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துரைத்தனர்.

இதன்பிரகாரம் குறித்த விடயம் தொடர்பாக துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி உரிய தீர்வினைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென இணைத்தலைவர்கள் தெரிவித்திருந்தனர்.

முன்பதாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திற்காக மாவட்ட செயலகத்திற்கு நேற்றுமுன்தினம் வருகை தந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை பிரதான வாயிலில் சுலோக அட்டைகளை தாங்கியவாறு நின்றிருந்த வடமாகாண பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தமது கோரிக்கைகள் தொடர்பில் அமைச்சரிடம் எடுத்துரைத்தனர்.

இதன்போது தமது பிரச்சினைகள் தொடர்பில் மாகாண சபையால் வெளியிடப்படும் பிழையானதும் முன்னுக்குப் பின் முரணானதுமான தகவல்கள் வெளியிடப் படுவதாகவும் சுட்டிக் காட்டினர்.


இதனிடையே மாகாண முதலமைச்சரை சந்திப்பதற்காக தாம் மாவட்ட செயலகத்தின் பிரதான வாயிலில் காத்திருந்த வேளையில் தம்மை சந்திக்காது முதலமைச்சர் ஏமாற்றி விட்டதாகவும் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சுட்டிக்காட்டினர்.(25)

## பரீட்சைகளின் திகதி அறிவிப்பு

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் பின்வரும் இரு பரீட்சைகள் எதிர்வரும் 31 ஆம் திகதி, ஜீன் முதலாம், 07 ஆம் திகதிகளில் கொழும்பில் நடாத்த ஏற்பாடாகியுள்ளது.

இதன்படி இலங்கை புகையிரத திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையில் புகையிரத பாதுகாவலர் பதவியின் பயிற்சித் தரத்திற்கு வெளி விண்ணப்பதாரிகளை சேர்த்துக் கொள்வதற்கான எழுத்து மூல போட்டிப் பரீட்சை எதிர்வரும் 31 ஆம் திகதி இலங்கை வெளிநாட்டு சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை 31 ஆம் திகதியும் யூன் முதலாம், 07 ஆம திகதிகளிலும் நடைபெறவுள்ளன.

## பளையில் புதிய கடைத் தொகுதிகளை வர்த்தகர்களுக்கு வழங்குமாறு கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

புறநெகும வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பிரதேசங்களுக்கிடையிலான கிராமிய சிறுநகர அபிவிருத்தி முனைப்பு வடக்கு மாகாணசபை ஊடாக பளை நகரில் அமைக்கப்பட்டுள்ள 10 கடைகளுக்கு மலசல கூடமும் மிகவும் விரைவாக மக்களின் வர்த்தக நடவடிக்கைக்கு கிடைக்க வேண்டும்.

இக்கடைகளை நீண்டகாலமாக பளையில் நடாத்தி கடந்தகால போரால் அவைகளை இழந்து தற்போது தற்காலிகமாக பாதுகாப்பற்ற வகையில் கடைகளை அமைத்து நடாத்துபவர்களுக்கு கிடைக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டு என்பதே பளை வர்த்தகர்களின் வேண்டுகோளாக உள்ளது. (37)

## தீர்த்தத்திருவிழா

(அச்சுவேலி)

அச்சுவேலி - பத்தமேனி தீத்தாங்குள பிள்ளையார் ஆலய தீர்த்தத்திருவிழா இன்று முற்பகல் 10 மணிக்கு ஆலய தீர்த்தக்கேணியில் இடம்பெறவுள்ளது.

இவ் ஆலயதேர்த்திருவிழா நேற்று நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (85)


ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர்
தினமுரசு

நாளைய தினமுரசு வாரமலரில்...

29.05.2014




- பிராந்திய அரசியலும் பிரதமர் மோடியும்
- இந்திய வெளியுறவுக் கொள்கை -ஒரு பார்வை-
- கிழக்கில் அதிகாரம் இழுபறியில்...
- கிணறுகளில் பெண்களின் சடலம் பின்னணி என்ன?

உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!



இக்கரையின் வறுமையால்...

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

# 2ஆவது சுற்றுக்கு முன்னேற்றம்

(பரிஸ்)

பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் முதல் சுற்று ஆட்டங்களில் ஜோகோவிச், நடால், ஷரபோவா ஆகியோர் வெற்றிபெற்றனர்.

கிராண்ட்ஸ்லாம் என்ற உயரிய அந்தஸ்து பெற்ற பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் திருவிழா பரிஸ் நகரில் நடைபெற்று வருகின்றது. இதன் 2ஆவது நாளான நேற்று முன்தினம் ஆட்டம் ஆரம்பிக்க முன்பே மழை பெய்ததால் ஆட்டங்கள் தாம்தமாக ஆரம்பமானது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் உலகின் 2ஆம் நிலை வீரர் நோவாக் ஜோகோவிச் (சேர்பியா), போர்த்துக்கல் வீரர் ஜோ சோசாவை சந்தித்தார். இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஜோகோவிச் 6-1. 6-2, 6-4 என்ற நேர்செட்டில் வெற்றி பெற்று 2ஆவுது சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு ஆட்டத்தில் உலகின் முதல் நிலை வீரர் நடால் றொபி ஜினிறிட்டை எதிர்கொண்டார். ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய நடால் 6-0, 6-3,6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். இதேவேளை, பிரெஷ் ஓப்பன் ரென்னில் தொடரில் நடால் பெற்ற 60ஆவது வெற்றியாக இது அமைந்தது. 61 போட்டிகளில் பங்குபற்றிய நடால் ஒரு ஆட்டத்தில் மாத்திரம் தோல்வியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.பெண்கள் ஒற்றையர் பிரிவில் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் உலகின் 8ஆம் நிலை வீரர் மரியா ஷர போவா (ரஷ்யா) 6-1, 6-2 என்ற நேர்செட்டில் சக நாட்டு வீராங்கனை செனியா பெர்வாக்கை எளிதில் தோற்கடித்து 2ஆவ்து சுற்றுக்கு முன்னேறினார்.



INDIAN PREMIER LEAGUE 2014

## இன்றைய ஆட்டம்

**வெளியேற்றுதல் சுற்று (எலிமினேட்டர்)**

**சென்னை எதிர் மும்பை**

**இடம்: மும்பை. நேரம்: இரவு 8 மணி**

## ஐ.பி.எல். துளிகள்...

மும்பை - ராஜஸ்தான் அணிகள் மோதிய ஐபிஎல் கடைசி லீக் ஆட்டம் மும்பையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் ராஜஸ்தான் அணியின் கெவன் கூப்பர் பந்து வீச்சில் சந்தேகம் இருப்பதாக களத்தில் இருந்த நடுவர்கள் தெரிவித்துள்ளனர். அதன் பேரில் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே 2011 ஜனவரியில் அவர் பந்து வீச்சில் சந்தேகம் எழுந்து, அந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் சந்தேகம் தெளிவுபடுத்தப்பட்டது.

பெங்களூரில் யூன் முதலாம் திகதி ஏழாவது ஐ.பி.எல். போட்டியின் இறுதி ஆட்டம் நடைபெறவுள்ளது. இந்த போட்டிக்கான கள நடுவர்களாக இலங்கையைச் சேர்ந்த குமார தர்மசேன, அவுஸ்ரேலியாவின் புரூஸ் ஆக்ஸன்.'. போர்ட் ஆகியோர் செயற்படவுள்ளனர். ரோஷன் மகானாமா போட்டிக்குப் பொறுப்பான நடுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அக்ரம் சிறந்த ஊக்குவிப்பாளர். அனுபவம் வாய்ந்த அவரது அறிவுரைகள் எந்த ஒரு வீரருக்கும் உதவியாக இருக்கும். மனரீதியாக தயாராவதற்கும், பந்து வீச்சாளர்களின் மனநிலையைப் புரிந்து கொள்வதற்கும் அவர் அளித்த அறிவுரைகள் பெரிதும் உதவின. அனைத்து கிரிக்கெட் வீரர்களையும்போல எனக்கும் சிறிது துரதிருஷ்டம் இருந்தது. தற்போது அணியின் வெற்றிக்கு பங்களித்ததில் மகிழ்ச்சி. புள்ளிகள் பட்டியலில் 2ஆவது இடத்துக்கு முன்னேற வேண்டுமானால் கூடுமானவரை அனைத்து பந்து வீச்சாளர்களுக்கும் நெருக்கடி கொடுக்க வேண்டும் என முடிவு செய்தேன். அதன்படி ஆடினேன் வெற்றி பெற்றோம்.

**யூசுப் பதான் (கொல்கத்தா)**

## மூன்றாவது ஒரு நாள் இன்று

(லண்டன்)

இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒரு நாள் போட்டி இன்றைய தினம் இங்கிலாந்தின் மன்செஸ்டரில் நடைபெறவுள்ளது.


ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் இரு அணிகளும் ஒவ்வொரு வெற்றியைப் பதிவு செய்துள்ளன.

இந்நிலையில் இப்போட்டி இரு அணிகளுக்கும் முக்கியத்துவம் மிக்கதொரு ஆட்டமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, இரண்டாவது போட்டியில் பெரு வெற்றிபெற்றமை எங்கள் நம்பிக்கையை அதிகரித்துள்ளது. டில்சான், சங்கக்கார, சேனநாயக்க, குலசேகர ஆகியோர் பொறுப்புடன் செயற்பட்டு கடந்த போட்டியில் நாங்கள் வெற்றிபெறத் துணை புரிந்திருக்கின்றனர்.

அதேபோன்று ஓர் அணியாக எங்கள் திறனை வெளிப்படுத்தி தொடர்ந்து வெற்றிபெற முயற்சிப்போம் என இலங்கை அணிக் கப்டன் மத்தியூஸ் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## டோனியும் பங்கேற்பு



டில்லியில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிரதமர் பதவியேற்பு விழாவில் பங்கேற்ற இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் டோனியைக் காணலாம்.



## பங்களாதேஷ் அணியின் பந்து வீச்சுப் பயிற்றுநர்

(டாக்கா)

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பந்து வீச்சு பயிற்சியாளராக சிம்பாப்வே டெஸ்ட் அணியின் முன்னாள் கப்டன் ஹீத் ஸ்டிரிக் நியமிக்கப்பட்டுள்ளார். 40 வயதான ஸ்டிரிக் 65 டெஸ்ட் மற்றும் 189 ஒருநாள் போட்டியில் விளையாடியிருக்கிறார்.

ஸ்டிரிக் 2 ஆண்டு காலம் ஒப்பந்தம் செய்யப்பட்டு இருக்கிறார். சிம்பாப்வே அணியின் பந்து வீச்சு பயிற்சியாளராக 5 ஆண்டு காலம் பதவி வகித்து இருக்கும் ஸ்டிரிக், பங்களாதேஷ் அணியினருடன் இணைந்து பணியாற்றுவதை ஆவலுடன் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

## உலக கால்பந்தாட்ட விழா வெல்லப்போகும் அணி எது?




கோகன் இன்லர்

**எஸ். அன்ரனிப்பிள்ளை கிளிபேட்**
தலைவர்: யாழ். கால்பந்தாட்ட லீக்



### சுவிற்சர்லாந்து சிறு பார்வை

சுவிற்சர்லாந்து நாட்டின்மக்கள்தொகை 80 இலட்சம். FIFA இன் தலைமையகம் சுவிற்சர்லாந்தின் சூரிச் நகரில் அமைந்துள்ளது. உலக கிண்ணத்திற்குத் தகுதி பெறுவது 10ஆவது தடவையாகும்.

1934, 1938, 1954 களில் காலிறுதிப் போட்டியில் விளையாடியுள்ளதுடன், FIFA இன் சர்வதேச தர வரிசைப்படுத்தலில் தற்போது 8ஆம் இடத்திலுள்ளது. சுவிற்சர்லாந்து இளைஞர் அணிகள் கடந்த சில காலங்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருந்தன. 2010 உலக கிண்ணத்தில் பங்கு பற்றிய, 29 வயது, நடு மத்திய கள வீரர் கோகன் இன்லர் (Gokhan Inler) அணிக்குத் தலைமை தாங்குகிறார்.

மிகவும் உயரமான, எந்த வலுவான அடியையும் தடுக்கக்கூடிய, தனது உடம்பினாலேயே தனது கோல் பரப்பைப் பாதுகாக்கக் கூடிய, 30 வயது கோல் காப்பாளர் டியகோ பெனக்லியோ (Diego Benaglio) மூன்றாவது தடவையாக உலக கிண்ண அணியில் இடம்பெறுகின்றார். கொசொவோ விலிருந்து தப்பி வந்து குடியேறிய பெற்றோருக்குப் பிறந்த, 21 வயதுடைய மத்திய கள வீரர் கிறனிற் சாகா (Granit Xhaka) வும் குறிப்பிடத் தக்கவராவார். 64 வயதுடைய ஒற்மர் கிற்ஸ்வெல்ட் (Ottmar Hitzfeld) 2008 இலிருந்து பயிற்சியாளராகக் கடமையாற்றுகின்றார்.இவர்களது அணி அமைப்பு 4-2 - 3-1

Brasil 2014
FIFA WORLD CUP

**கால்பந்து திருவிழா**
**இன்னும் 14 நாட்கள்**

## பரிஷ் அபார வெற்றி

(யாழ்ப்பாணம்)

வினோத்தின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் மானிப்பாய் பரிஷ் அணி 40 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் டொனால்ட் கணேசகுமார் வெற்றிக் கிண்ண ஒரு நாள் போட்டித் தொடர் சனி, ஞாயிறு தினங்களில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் தெல்லிப்பளை யூனியன், மானிப்பாய் பரிஷ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மானிப்பாய் பரிஷ் அணி ஆரம்பத்தில் தடுமாறியது. குறிப்பாக, முதல் நான்கு விக்கெட்டுக்களைக் குறைந்த ஓட்ட எண்ணிக்கைக்குள் இழந்து தடுமாறியது. இந்நிலையில் ஒரு முனையில் பொறுப்பாக ஆடிய வினோத் அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தார். இறுதியில் மானிப்பாய் பரிஷ் அணி 46.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வினோத் 76, சிசோக் 35 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மகிந்தன் ஐந்து, சுஜந்தன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 246 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தெல்லிப்பளை யூனியன் அணி 48.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 205 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் பிரசாந் 24, லக்சியன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஹரிகரன் ஐந்து, சுபாஸ்கரன், வினோத் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக வினோத் தெரிவு செய்யப்பட்டார். (17)

## ஏழு விக்கெட்டுக்களால் வென்றது கிளிநொச்சி ம.வி.



(கிளிநொச்சி)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் கிளிநொச்சி மகாவித்தியாலய அணி அபார வெற்றிபெற்றது.

கிளிநொச்சி மகாவித்தியாலயம் மற்றும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிகளுக்கிடையிலான நட்பு ரீதியிலான 25 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி கடந்த 24ஆம் திகதி கிளிநொச்சி மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. கிளிநொச்சி மகாவித்தியாலய அணி கடினப் பந்து கிரிக்கெட் போட்டியில் கடந்த 2004ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்கொண்டது. இதன் பத்தாண்டு நிறைவை முன்னிட்டே இப்போட்டி நடாத்தப்பட்டது.

இதில் இரு பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு அணிகள் மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 18.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிருசன் அதிரடியாக ஆடி 48 ஓட்டங்களைப் பெற்றார். ஏனையோர் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் மிதுசன், கீர்த்திகன், நிருத்திகன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 105 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கிளிநொச்சி மகாவித்தியாலய அணி 16 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சனுசன் 25, துவாரகன் 33, மிதுசன் 16 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற பழைய மாணவர்களுக்கிடையிலானபோட்டியில் கிளிநொச்சி பழைய மாணவர் அணி வெற்றிபெற்றது. இப்போட்டி நிகழ்வில் கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபர் பங்கயற்செல்வன், கரச்சிப் பிரதேச விளையாட்டு உத்தியோகஸ்தர் எஸ். குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

விளையாட்டு செய்திகள்

### தனுஜன் சிறப்புப் பந்து வீச்சு

## யாழ். மத்தி பெரு வெற்றி

தனுஜனின் அபாரமான பந்து வீச்சின் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி 105 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் யாழ். மத்திய கல்லூரி, மற்றும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 240 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கோமேதரன் 37, அலன்ராஜ் 32, திரேசன் 30, பிரியலக்ஷன் 29, கார்த்தீபன் 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுஜிபன், சஜித், டயன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 241 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 36 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சஜித் 42, நிலோகுமார் 27 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தனுஜன் ஐந்து, அலன்ராஜ் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (எஸ்.பி.)

## வென்றது யாழ். சென்றல், கிறார் கோப்பர்ஸ்

ஜே.பி.எல். ருவென்ரி-20 தொடரில் கடந்த 24ஆம் திகதி நடைபெற்ற போட்டிகளில் யாழ். சென்றல், தெல்லிப்பளை கிறாஸ் கோப்பாஸ் அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டு வரும் ஜே.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற்று வருகின்றது.

கடந்த 24ஆம் திகதி இரு போட்டிகள் நடைபெற்றன. முதல் போட்டியில் யாழ். சென்றல் அணியும் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். சென்றல் அணி றொகானின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் யாழ். சென்றல் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றது. இதில் றொகான் 41 பந்துகளை எதிர்கொண்டு ஆட்டமிழக்காது 81, ரஜீவ்குமார் 48 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் நிசாந்தன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 191 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ.அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சுதர்சன் 24, சுதாகரன் 22, நிலஜெனன் 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சலிஸ்ரன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாக றொகான் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் தெல்லிப்பளை கிறாஸ் கோப்பர்ஸ் அணியும் ஜொலிஸ்ரார் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய ஜொலிஸ்ரார் அணி 19.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சஜீபன் 29, ஜெனார்த்தனன் 17, மணிவண்ணன் 15, வமணன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிறப்பான முறையில் செயற்பட்ட கபிலன் ஐந்து, மதுஷன், கஜதீபன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 125 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கிறாஸ் கோப்பர்ஸ் அணி 17.3 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் டிலோசன் 42, காந்தசீலன் 27, அஜித் 34 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜெனார்த்தனன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாக கபிலன் தெரிவு செய்யப்பட்டார். (48)




றொகான்




கபிலன்




அன்ரோனியோ வலன்சியா

## உலக கால்பந்தாட்ட விழா

## வெல்லப்போகும் அணி எது?

**எஸ். அன்ரனிப்பிள்ளை கிளிபேட்**
தலைவர்: யாழ். கால்பந்தாட்ட லீக்




### ஈகுவேடர் சிறு பார்வை

ஈகுவேடர் நாட்டின் மக்கள்தொகை 1 ½ கோடி. 2002, 2006இல் உலக கிண்ண போட்டிகளுக்குத் தகுதிபெற்று, 2006இல் இரண்டாம் சுற்றுக்கும் முன்னேறியது. ஆயினும் கடந்த உலக கிண்ணப் போட்டிக்குத் தகுதி பெறவில்லை.

2006இல் உலக கிண்ணப் போட்டிகளில் விளையாடிய, 28 வயது, வலது முன் கள வீரர் அன்ரோனியோ வலன்சியா ( Antonio Valencia) அணிக்குத் தலைமை தாங்குகிறார்.


2002, 2006இல் உலக கிண்ண போட்டிகளில் விளையாடி அனுபவமுள்ள,முன்னேறித் தாக்குதலில் உதவிபுரியும் 35வயதுடைய, மத்திய கள வீரர்எடிசன் மெண்டெஸ், (Edison Mendez) மற்றும் 25 வயது, முன்கள வீரர் பிலிப் கைசடோ (Felipe Caicedo) ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். கொலம்பியாவின் 54 வயது றெய்னால்டோ றூடா (Reinaldo Rueda) அணியின் பயிற்சியாளராவார். கொன்டுராஸ் நாட்டை உலகக் கிண்ணத்திற்குத் தகுதிபெறவைத்த பெருமை இவருக்கு உண்டு.




# இலங்கையில் எல்.ரீ.ரீ.ஈ யினை புதுப்பிக்கும் குறைப்பிரசவ முயற்சியின் உடற்கூற்றியல்

- டி.பி.எஸ் ஜெயராஜ் - 5

சக்தி என்கிற லோகநாதனிடமிருந்து பெறப்பட்ட மிகவும் பெறுமதியான தகவல் என்னவென்றால், அவர்களை நியமித்த மனிதரைப் பற்றிய அடையாளங்கள்தான். லோகநாதன் குடும்பத்தை வவுனியாவுக்கு இடம் பெயர வைத்த மனிதரான தேவிகன்தான், எல்.ரீ.ரீ.ஈக்கு புத்துயிர் அளிக்கும் முயற்சியின் சூத்திரதாரி என்பது தெரிந்தது.




விசாரணைகளில் வெளிவந்த தேவிகன் எனும் பெயர் புலனாய்வாளர்களின் மத்தியில் ஒரு எண்ணத்தை கிளறி விட்டது. அந்தப் பெயர் நன்கு அறிமுகமானதாகவும் பாதுகாப்பு அதிகாரிகள் நீண்ட காலமாக அவரைத் தேடி வருவதையும் நினைவுகூர முடிந்தது.

தேவிகனின் உண்மைப் பெயர் சுந்தரலிங்கம் கஜதீபன். 1979 மே 23இல் பிறந்தவர். அவர் யாழ்ப்பாணம், தென்மராட்சி, மந்துவிலைச் சேர்ந்தவர். 1995இல் அவர் தன்னிச்சையாகவே எல்.ரீ.ரீ.ஈயில் சேர்ந்தார். அவரது பல இயக்கப் பெயர்கள் மற்றும் புனை பெயர்கள் தேவிகன், தெய்வன், நவநீதன், வல்லன், தேவன் என்பனவாகும்.

அவர், எல்.ரீ.ரீ.ஈ தலைவர் பிரபாகரனுக்கும், அவரது மனைவி மதிவதனிக்கும் நீண்ட காலம் மெய்ப்பாதுகாவலராகக் கடமை புரிந்துள்ளார். மேலும் அவர் விமானம் ஓட்டும் உரிமம் ஒன்றைப் பெற்றிருப்பதனால் எல்.ரீ.ரீ.ஈயின் வான்படைப் பிரிவான வான்புலிகளின் விமானத் தாக்குதல்களில் பங்கெடுத்துள்ளார். யுத்த காலத்தில் கொலன்னாவ - கெரவலப்பிட்டிய, சாலியபுர, அனுராதபுர ஆகிய வான் தாக்குதல்களில் தேவிகன் தொடர்பு பட்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது.

தேவிகன் ஒரு தற்கொலைப் போராளியும் ஆவார், அவர் கரும்புலிகளின் சத்தியப் பிரமாணமும் எடுத்துள்ளார். அவர் எல்.ரீ.ரீ.ஈயின் உளவுப் பிரிவு, இராணுவ உளவுப் பிரிவு, உயரடுக்கு ராதா படையணி என்பனவற்றில் கடமையாற்றியுள்ளார். அவர் புதிய அங்கத்தவர்களுக்கு பயிற்சி வழங்கும் ஒரு பயிற்சியாளரும் கூட.

மே 2009இல் யுத்தம் முடிவடைந்த பின்னர், தேவிகன் மன்னாரிலிருந்து இரகசியமாக இந்தியாவுக்குச் சென்றார். நோர்வேயிலிருந்த நெடியவனுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அதன் மூலம் தென்கிழக்காசியாவுக்குச் சென்றார். அதன்பின் அவர் ஐரோப்பாவுக்குச் சென்று அங்கு பல நாடுகள் இடையே சுற்றிவந்தார்.

பின்னர் அவர் இந்தியாவுக்கு திரும்பி வந்தார், அங்கு நெடியவன் குழுவினரால் மேற்கொள்ளப்படும் இந்திய, இலங்கை செயற்பாடுகளுக்கு அவர் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். எனினும் தேவிகன் விநாயகம் குழுவினருடனும் ஒரு சுமுக உறவைப் பேணி வந்தார். தேவிகன் ஒரு போலிக் கடவுச்சீட்டு மூலமாகவோ அல்லது இரகசியமான நாட்டுப் படகுகள் வழியாகவோ இந்தியாவுக்கும் மற்றும் இலங்கைக்கும் இடையில் பல முறை சென்று திரும்புவதை வழக்கமாக கொண்டிருந்தார் என நம்பப்படுகிறது.

புலனாய்வு அறிக்கைகள் இலங்கை மற்றும் இந்தியாவில் நெடியவன் பிரிவினரின் செயற்பாடுகளுக்கு தேவிகன் பொறுப்பாக உள்ளார் எனத் தெரிவிப்பதால், இலங்கை அதிகாரிகள் தீவில் அவரது வருகையை எதிர்பார்த்து எச்சரிக்கையாக இருந்தார்கள். எனினும் தான் நழுவித்தப்பும் நபர் என்பதை பலமுறை தேவிகன் நிரூபித்துள்ளார்.

பிரித்தானியாவில் வாழும் அவரது சகோதரர் திருமணம் செய்வதற்காக இந்த வருட ஆரம்பத்தில் இலங்கைக்கு வந்திருந்தார். அந்த திருமணத்துக்கு தேவிகன் வரலாம் என எதிர்பார்த்து பாதுகாப்பு அதிகாரிகள் திருமணத்தை நெருக்கமாக கண்காணித்து வந்தனர் ஆனால் அந்த சகோதரன் மகிழ்ச்சியான அந்த வைபவத்தை தவிர்த்துக் கொண்டார்.

இந்தப் பின்னணியில் இலங்கை விசாரணையாளர்களுக்கு நிஜமாகவே லோகநாதன் உண்மையைத்தான் சொல்கிறாரா என்கிற சந்தேகம் இருந்துகொண்டே வந்தது. விழிப்புடன் இருந்துவரும் தேவிகன் இலங்கையை சுற்றிவரும் ஆபத்தான ஒரு முயற்சியில் ஈடுபடுவாரா என அதிகாரிகள் பெரிதும் சந்தேகித்தார்கள். தவிரவும் கட்டுநாயக்காவில் அவரது வரவைப் பற்றிய பதிவுகள் எதுவும் கிடைக்கவில்லை.

உண்மையிலேயே தேவிகன், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பறப்பவராக இருந்தால், அதன் அர்த்தம் அவர் பொய்யான அடையாளத்தை அல்லது கள்ளத்தோணியை பயன்படுத்தியிருக்க வேண்டும் என்பதாகும். ஆயினும் புகைப்படங்களைக் காண்பித்தபோது லோகநாதனும் மகேஸ்வரியும் அது தேவிகன்தான் என்பதில் பிடிவாதமான உறுதியுடன் தெரிவித்தனர். இதன்படி சிலசமயங்களில் தேவியன் என பிழையாக எழுதப்படும் தேவிகனின் பெயரும் வேண்டப்படுபவர்கள் பற்றிய சுவரொட்டிகளில் சேர்க்கப்பட்டது.

வான் புலிகளின் சீருடையில் உள்ள ஒரு மனிதரின் புகைப்படமும் அதில் காட்சிக்கு விடப்பட்டது. அவர் வடக்குக்கும் மற்றும் கிழக்குக்கு இடையே நகர்ந்து கொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. இப்போது ஒரு தொகையான வேண்டப்படுபவர்கள் பற்றிய சுவரொட்டிகள் மற்றும் துண்டுப்பிரசுரங்களில் அப்பன் மற்றும் கோபி பற்றியும் மற்றொரு தொகையானவற்றில் தேவிகன் பற்றியும் குறிப்பிட வேண்டியதாகிவிட்டது. விரைவிலேயே அதிகாரிகள் தேவிகன் பற்றிய புதிய தகவல்களைப் பெற ஆரம்பித்தனர்.

அதில் ஒரு தகவல், வவுனியா கூமன்குளத்தில் உள்ள வீடு ஒன்று மறைவிடமாக பயன்படுத்துவதற்காக கடந்த வருடம் தேவிகனால் கொள்முதல் செய்யப்பட்டது என்பதாகும். அந்த வீடு பன்னிரண்டரை இலட்சம் ரூபாவுக்கு பத்மாவதி மகாலிங்கம் என்கிற 64 வயதுடைய பூநகரியை சேர்ந்த ஒரு விதவையின் பெயரில் வாங்கப்பட்டிருந்தது.

34 வயதுடைய தேவிகன் மற்றும் 25 வயதுடைய இளம் பெண்ணாண சசிகலா என்கிற வத்சலா சகாதேவன் ஆகியோர் பத்மாவதியின் பிள்ளைகளாக தெரிவிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் குடும்பம் போல நடித்து அந்த வீட்டில் ஒன்றாக வாழ்ந்து வந்துள்ளார்கள்.

இப்போது பத்மாவதி மகாலிங்கம் சிறைக்காவலில் உள்ள அதேவேளை, சசிகலா என்கிற பொய்ப் பெயரை பயன்படுத்தி வந்த அந்த இளம்பெண் நவம்பர் 2013இல் இந்தியாவுக்குச் சென்றுள்ளார். அவள் கட்டுநாயக்காவிலிருந்து சென்னைக்கு விமானம் மூலம் சென்றுள்ளாள் என்று விசாரணைகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு வந்தாறுமூலையைச் சேர்ந்த சசிகலாவின் உண்மைப் பெயர் வத்சலா சகாதேவன். அவள் 1988 ஒக்ரோபர் 23இல் பிறந்தவள். வத்சலா என்கிற சசிகலா ஒரு முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவராக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

(தொடரும்)

---

"தனிமையிலே இனிமை காண முடியுமா?...."

இது பிரபலமான பழைய திரையிசைப் பாடலொன்றின் ஆரம்ப வரி.

தனிமை பற்றிய எதிர்மறை அணுகுமுறை (Nagative apprachment) சார்ந்ததாக அப்பாடல் மேலே தொடர்கிறது. திரைக் கதையோட்டத்திற்கும், குறித்த கதை மாந்தரின் மனோபாவங்களுக்கும் அது பொருத்தப்பாடுடையதாய் அமைந்திருக்கலாம்.

ஆனால், தனிமையானது உண்மையில் கொடுமையானதல்ல! இந்த அவசர உலகின் ஆரவாரங்களிலிருந்து விலகி இருக்க இது உதவும். சுய சிந்தனையைச் சீர்படுத்த வழிகோலும். கற்பனா வளத்தைத் தூண்டும். தன்னுள் அமைதியையும், நிம்மதியையும் ஒருவர் சாவகாசமாகக் கண்டு கொள்வதற்கு சால ஏற்புடையதாய் அமையும். இந்த ஏகாந்தத்தினால் வேதாந்தமும் பிறக்கலாம். மனப்பக்குவமானது மேலும் சிறக்கலாம்.

மனிதரின் அன்றாட "இயங்கியற் செயற்பாடுகள்" (Physical activities) உயிர்ப்புறும் முன்னதாக, வைகறைப் பொழுதில் துயிலெழுந்து வெளியே வந்தால் - அந்தப் "பிரம்ம முகூர்த்தத்தில்" ஓரளவேனும் ஓசோன் கலந்த சுத்தமான காற்றினைச் சுவாசம் உள்வாங்கும். விடியலின் வெளிச்ச ரேகைகள் விழிகளுக்கு நல் விருந்தாகும். இயற்கை தரும் இனிய கீதங்கள் செவிகளுக்கு அருமருந்தாகும்.

"தனித்திருத்தல்" எனின் புறத்தே ஒதுங்கி இருத்தல் என்பதல்ல. அத்தருணத்தில் புலன்களை விழிப்பாக்கி, நிர்மலமயமான நித்திய உண்மைகளை உய்த்துணர முயல வேண்டும். இதனூடே இறைவனைச் சமீபிக்கவும் இயலும்.

"இறைவன்" என்பது இயற்கை மகா சக்தியின் உருவகம். தனக்கு வசதியான விதத்தில் அனுட்டான ஏதுவாக மனிதன் இதனைக் கற்பித்து, காலங்காலமாக ஆராதித்து வருகின்றான். இறை சக்தி ஒவ்வொருவர்




உள்ளேயும் உள்ளது. இது புனைவு அல்ல! பரீட்சித்துப் பார்ப்பதாயின், தனிமையையே நாடவேண்டியிருக்கும். யோக, தியானங்கள் ஆகிய ஆத்மீகப் பரிசோதனைகளின் வாயிலாகப் பெறுபேற்றைப் பெறலாம்.

இந்த ஞான வழியையே இளந்துறவி விவேகானந்தர் "தனித்திரு! விழித்திரு!!" என இரத்தினச் சுருக்கமாக இயம்பியுள்ளார்.



"தன்னந்தனியான" சூன்யமான தனிமை என ஒன்றில்லை. இப்பிரபஞ்சமானது சூழ இயங்கிக் கொண்டிருக்கையில், இது எங்ஙனம் சாத்தியம்?!

"தன்னுள் ஒடுங்குதல்" என்பதுவே அதிக ஆபத்தானது! அதீத குற்ற உணர்வு, அநாதரவு நிலை, அபவாதம்... என்றவாறாக மறுகும் சுய பச்சாத்தாபங்களினால் இது சம்பவிக்கலாம்.

"தாழ்வுச் சிக்கலும்" (inferiority complex) தன்னியல்பாக உருவாகும். "மனதளவில் இயலாமை" "மனமுடக்கம்" (Mental disability) என உளவியலாளர் இதனை ஒரு மனோவியாதியாக வகைப்படுத்துவர். இதை முற்றிலுமாகக் குணப்படுத்துவதற்கு குறைந்த பட்சம் கணிசமானளவு தணித்துக் கொள்வதற்கு, இன்றைய நவீன மருத்துவவியலில் மார்க்கமுண்டு.

சீன - ஜின்ஜியாங் மாகாணத்தில், 1997 இன் பூகம்ப விளைவாக மூடப்பட்ட சுரங்கத்தில் தனிமையில் சிக்கி, 17 ஆண்டுகளின் பின் "செங்வாய்" (59) என்ற தொழிலாளி மீட்கப்பட்டிருப்பதான அண்மைய தகவல் ஒன்றினை அநேகர் அறிந்திருப்பர்.

இந்நபர் மனநலம் பாதிக்கப்பட்டிருந்தாலும், இதுவரை உயிரைத் தக்க வைத்திருந்ததே உச்சமான அதிசய சாதனை! தமக்குத் "துணையாயிருந்த" அந்தத் தனிமையைச் சகித்துக் கொண்டிருந்த இவரது தளராத மனவுறுதி அதி ஆச்சரியத்திற்குரியதாகும்.


இவ்வகையான "தனிமைச் சம்பவங்கள்" மிக அபூர்வமானவை. குறிப்பாக ஒருவர் தாமே விரும்பி ஏற்படுத்திக் கொள்கின்ற தனிமையானது மனோ திடத்தினைப் பரிச்சயமாக்க முடிகின்ற ஒரு சுகானுபவம் தான்!.

# உயிர் பிழைத்த ஒருவர்!

1902ஆம் ஆண்டு பிரான்ஸின் ஆட்சிக்கு உட்பட்ட மேற்கிந்தியத் தீவுப் பகுதியான மார்ட்டின் கியுவின் தலைநகர் சென் பயரிக்குள் புகுந்து எங்கும் நெளிந்து ஓடின நூற்றுக்கணக்கான விஷப் பாம்புகள். இதில் ஐம்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்களும் பல கால்நடைகளும் அந்தப் பாம்புகளால் கொத்தப்பட்டு மாண்டனர். ஆனால், ஆறடி நீளமிருந்த அந்தப் பாம்புகளை பூனைகள் கடித்துக் குதறின. இந்தப் பாம்புகள் எங்கிருந்து வந்தன? எப்படி வந்தன? என ஒருவருக்கும் புரியவில்லை.

ஆனால் மறு வாரமே அதற்கான காரணம் கிடைத்தது. அந்நகரின் அருகிலிருந்த பீலி என்ற எரிமலை வெடித்துச் சிதறி விஷவாயு பரவிய தில் 30 ஆயிரம் பேர் ஒரே நாளில் இறந்து போயினர்.

எரிமலையை ஒட்டிய பகுதியில் வாழ்ந்த இந்தப் பாம்புகள் வாயுக் கசிவை முன்கூட்டியே உணர்ந்து வெளிவந்துள்ளன. இந்தத் துயரச் சம்பவத்தில் உயிர் பிழைத்தவர் ஒரே ஒருவர் மட்டுமே. அவர் மதில்கள் சூழ்ந்த கிடங்கில் அடைக்கப்பட்டிருந்த ஆயுள் தண்டனைக் கைதி ஆவார்.



# முகநூலில் இருந்து....

அன்புள்ள குகு,

உங்களிடம் ஒரு ஆன்மீக கேள்வி. இந்த ஜென் நிலை என்று சொல்கிறார்களே அது என்ன? அது எப்படி இருக்கும்?

இப்படிக்கு, மைக்கேல் ஜாக்சன்.


அன்புள்ள மிக்கேல்,

ஜென் நிலை என்பதை சில உதாரணங்களுட்ன் விளக்குவோம்.

நாடாளுமன்ற தேர்தலில் மிக கேவலமாக ஒரு சீற் கூட பெறமுடியாமல் படுதோல்வி அடைந்தது தி.மு.க. அதை ஒட்டி தலைவர் கலைஞரிடம் "உங்கள் தோல்விக்கு காரணம் என்ன? என்று கடுப்படிக்கும் வகையில் ஒரு கேள்வியை பத்திரிகையாளர்கள் கேட்டனர். ஆனால் அவரோ அதற்கு கொஞ்சம்கூட கோவப்படாமல் முகத்தில் எந்த வித சலனமும் இல்லாமல் "ஓட்டு குறைந்துவிட்டது" என்று சொன்னாரே அதுதான் ஜென் நிலை.

37 தொகுதியில் ஜெயிச்சும் பத்துரூவாய்க்கு கூட பிரயோசனமே இல்லாமல் அந்த வெற்றி வீணாய்ப்போனபோதும் பிரதமர் கனவு கலைந்தபோதும் அதைப்பற்றி அலட்டிக்கொள்ளாமல் புன்னகையோடு பிரதமர் பதவியேற்கவுள்ள மோடிக்கு வாழ்த்து அனுப்பிவிட்டு இந்தப்பக்கம் கட்சிக்காரர்களை போட்டு வெளுவெளு என்று வெளுத்து கையை முறுக்கி சுளுக்கெடுக்கிறாரே முதல்வர் ஜெ அதுதான் ஜென் நிலை.

ஒரு தொகுதி கூட வெற்றிபெறவில்லை என்றபோதும் கேப்டன்




விஜயகாந்தை டில்லிக்கு அழைத்து சாப்பாடு போட்டு பேட்டாவும் கொடுத்து பாராட்டிய பிரதமர் மோடி அவர்கள் மேலேயே தள்ளாடிக் கொண்டே வந்து கட்டிப்புடிச்சு புரண்டு விழுந்த நிலையிலும் சிரிச்ச முகத்தோடு கேப்டனுக்கு முட்டுக்கொடுத்து அவரை நிறுத்தி நின்று "யே ஹமரா தோஸ்த் ஹே, ஹம் ஆப்கே ஹேன் கோன்" என்று புன்னகைச்சாரே அந்த மோடி மகான் அதுதான் ஜென் நிலை.

மோடியின் பதவியேற்பு விழாவில் ராஜபக்ச கலந்துகொள்ளப் போறார் என்று தெரிஞ்சும் இருபத்திநாலு மணிநேரமா ஒருவார்த்தை கூட பேசாம அப்படியே தியான முக்தி நிலையில் எங்கயோ தலைமறைவா இருக்கிறாரே அகில உலக புரட்சிப்பொறி தீப்பொறி திருமுகம் எங்கள் தலை சீமான் அந்த அமைதிக்கு பேர்தான் ஜென் நிலை.


சட்டை கிழிஞ்சு டார்டாரா தொங்கும்போதும் முகத்திலே வழிகிற இரத்தத்தை துடைத்துக்கொண்டே "மீண்டும் எழுவோம்" பேட்டி கொடுத்திருக்கிறாரே ஞானதேசிகன் தட் ஈஸ் ஜென் நிலை.

**அன்புடன் குகு.**

# "இலங்கைப் பிரிவினையை எதிர்க்கிறோம்!"

## பா.ஜ.க. வியூகத்தைச் சொல்கிறார்

## ஆர்.எஸ்.எஸ். சேஷாத்ரி சாரி



பா.ஜ.க. வின் தாய்வீடான ஆர்.எஸ்.எஸ். தளபதிகளில் முக்கியமானவர் சேஷாத்ரி சாரி. இவர், ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் அதிகாரபூர்வ ஆங்கில இதழான organizer இன் முன்னாள் ஆசிரியர். பா.ஜ.க. வின் தேசிய செயற்குழு உறுப்பினராக இருக்கும் மும்பை வாழ் தமிழர். அவரது பேட்டியிலிருந்து...

**மோடி பதவியேற்புக்கு சார்க் நாட்டு ஆட்சித் தலைவர்களை அழைக்க பா.ஜ.க. முடிவெடுத்தது ஏன்?**

இது பா.ஜ.க-வின் தன்னிச்சையான முடிவு அல்ல. அடுத்து, இனிவரும் நாட்களில் வெளியுறவு விவகாரங்கள் எப்படி இருக்க வேண்டும் எனவும், இந்த நாட்டின் சக்தியை எப்படி உபயோகப்படுத்த முடியும் என்பதற்கும் ஆதாரமாக விடுக்கப்பட்டதுதான் இந்த அழைப்பு. இந்த விஷயத்தை, தமிழகத்தில் ராஜபக்சவின் வரவை எதிர்க்கும் அரசியல் கட்சிகளுக்கு மெல்லமெல்லப் புரியவைப்போம். அவர்கள் புரிந்துகொண்டால் நாட்டுக்கு நல்லது.

**ராஜபக்சவைத் தவிர்த்திருக்க முடியாதா?**

எப்படி முடியும்? சார்க் நாடுகளை அழைக்கும்போது இலங்கை அல்லது பாகிஸ்தானை மட்டும் வர வேண்டாம் என்று கூற முடியுமா? இந்தியாவுக்கு எதிரி நாடு கிடையாது என்பது எங்கள் கருத்து. அனைவரிடமும் நேசக்கரம் நீட்டவே இந்தியா விரும்புகிறது.

**இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைகளை அணுகுவதில் காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க-வுக்கு இடையே உள்ள பெரிய வித்தியாசம் என்ன?**

இந்திய - இலங்கை உறவு என்பது தமிழர்கள் பிரச்சினையால் பகையாகிவிடக் கூடாது. தமிழர்களின் பிரச்சினைகளை கொழும்பு, உண்மையாகவும் சுமுகமாகவும் தீர்க்கும் என பா.ஜ.க. கருதுகிறது. மேலும், இதற்காக அந்த அரசு முயற்சிப்பதாகவும் நம்புகிறது. இதற்கு கொழும்பு மற்றும் புதுடில்லிக்கு, தமிழர்களுடன் இலங்கை அரசு பேச்சுவார்த்தை நடாத்த நாம் கால அவகாசம் தருவது அவசியம். ஆனால், எதிர்பாராதவிதமாக ஐ.நா. சபையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில், காங்கிரஸ் அரசு இலங்கையிலிருந்து வெளிநாட்டில் புலம் பெயர்ந்து வாழும் சில குழுக்களின் வலையில் விழுந்து, தவறாக வழிகாட்டப்பட்டுவிட்டது. இதன் விளைவாக, புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இடையே இடைவெளி அதிகரித்துவிட்டது.

**அப்படியெனில், ஐ.நா. வில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் இந்தியா நடுநிலைமை வகித்திருக்கக் கூடாது என்கிறீர்களா?**

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே, அந்தத் தீர்மானத்தில் இந்தியா நடு-நிலை என்ற நிலைப்பாட்டை எடுத்திருக்க வேண்டும். அதேசமயத்தில், இலங்கைக்குச் சாதகமாக வாக்களிக்க வேண்டிய அவசியமும் இல்லை. இந்த நடவடிக்கைகள் மூலம், அந்தப் பிரச்சினை கொழும்பு - புதுடில்லி - இலங்கைத் தமிழர்கள் ஆகிய தரப்புக்கு இடையில் மட்டும் இருந்திருக்கும். இப்போது, அந்தப் பிரச்சினையில் மற்ற உலக நாடுகளும் தலையிட வாய்ப்பாகிவிட்டது. இந்தத் தீர்மானத்தால், தமிழர்களின் பிரச்சினை உலகமயமாகிவிட்டது. இனி இதில், அநாவசியமாகப் பிரச்சினைகள் வருமே ஒழிய அவற்றைத் தீர்ப்பது கடினம். இதைத்தான், வடமாகாணத்தின் முதலமைச்சரான விக்னேஸ்வரனும், "இந்தப் பிரச்சினை என்பது வடமாகாணத்துக்கும் இலங்கை அரசுக்கும் உட்பட்டதாகும் எனவும் இதில், தமிழக அரசியல் கட்சிகள் தலையீடு இருக்கக் கூடாது" எனவும் கூறியிருக்கிறார். இப்போது, உலக நாடுகளும் தலையிடுவதற்குக் காரண-மாக காங்கிரஸ் அரசு இருந்துவிட்டது. இந்த அணுகுமுறைதான் அவர்களுக்கும் எங்களுக்கும் இடையிலான வித்தியாசம்.

**ஐ.நா. தீர்மானத்துக்கு முன்பாகத் தமிழகத்தின் பா.ஜ.க. தலைவர்கள் தம் தலைமையிடம் கேட்டபோது, அதன் தேசியத் தலைவர்கள் வெளிப்படையாக வந்து கருத்து சொல்லாதது ஏன்?**

கருத்து கூறினார்கள். அது பரவலாகச் செய்திகளில் வரவில்லை. இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு காஷ்மீர் ஒரு பெரிய உதாரணம் பலஸ்தீனமும் ஒரு நல்ல உதாரணம். இதுபோல், பல பிரச்சினைகள் இந்த உலகத்தில் உலகமயமாக்கப்பட்டு அவை, தீர்க்கப்படாமலேயே உள்ளன. எனவே, இந்தப் பிரச்சினை இலங்கைத் தமிழர், இலங்கை அரசு மற்றும் இந்திய அரசுகளுக்கு இடையே தீர்க்கப்படுவதுதான் சிறப்பாக இருக்கும். இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை அவர்களின் முக்கியமான விருப்பங்களின் பேரில் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுத் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் இந்தியா மிகவும் நம்பிக்கை வைத்திருக்கிறது. நாம் இலங்கையில் பிரிவினையை எதிர்க்கிறோம், இதில் மற்ற நாடுகள் தலையிடுவதையும் எதிர்க்கிறோம்.

**இந்த விளக்கத்தைத் தேர்தலுக்கு முன்பாக அளித்திருக்கலாமே?**


எங்கள் விளக்கத்தைப் பொதுமக்கள் கவனத்துக்குக் கொண்டுசெல்வதைத் தமிழகத்தின் அரசியல் சாதுர்யவான்கள் தடுத்துவிட்டனர். இது நம் அரசியல் அமைப்பின் ஒரு குறைபாடு.

**சார்க் நாடுகளின் ஆட்சித் தலைவர்களுக்கான அழைப்பு மூலம் பா.ஜ.க. சொல்லும் செய்தி என்ன? இந்தியா ஒரு வல்லரசு என்கிறீர்களா? மோடி அதன் முடிசூடா சக்ரவர்த்தி என்கிறீர்களா?**

இது உலகின் எந்த நாடுகளுக்கும் கிடைக்காத ஜனநாயகத்தின் வெற்றி. இதில், அதிக அளவில் வாக்களிப்பு நடைபெற்று ஒரே கட்சிக்கு மாபெரும் வெற்றி கிடைத்துள்ளது. இதை, இந்தியாவின் அண்டை நாடுகளுக்கும் உலகத்துக்கும் எடுத்துக்காட்ட விரும்புகிறோம். இந்த ஜனநாயகத்துக்கு வெற்றி கிடைக்கும் எனவும், அதுதான் நாட்டுக்கான சிறந்த வளர்ச்சி என்பதையும் உலகத்துக்கு உணர்த்த சார்க் நாடுகள் அழைக்கப்பட்டிருக்கின்றன.

**(நன்றி: தி இந்து)**

**ஓர் ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையிலான உறவு அவ்வளவு சுலபமானதல்ல. இந்த உறவு நீடித்துச் செல்வதற்கு இருவருமே மனமார்ந்த முயற்சியை மேற்கொள்ளவேண்டும். அதிலும் "காதல்" ரசத்துடன் ஆரம்பிக்கும் இந்த உறவு திருமண வாழ்வின் பின் பல பிரச்சினை களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் யாரால் இந்தப் பிரச்சினைகளையெல்லாம் சமரசம் செய்து தடைகளை எல்லாம் கடந்து போக முடிகிறதோ அவர்களால்தான் வெற்றிகரமான வாழ்க்கையை மேற்கொள்ள முடியும்.**



# விவாகரத்து எனும் பேரில் அலட்சியப்படுத்தப்படும் திருமண உறவுகள்

தற்காலத்திலே, பெருகிவரும் பிரச்சினைகளுள் விவாகரத்தும் ஒன்றாகக் காணப்படுகின்றது. இது மிகவும் மோசமான பிரச்சினையாகவும் மனித வாழ்வில் சிக்கலான உள நடத்தையை உண்டு பண்ணுவதாகவும் காணப்படுகின்றது.

விவாகரத்தானது இலங்கையிலே 25 வீதமாகக் காணப்படுகிறது. கொழும்பிலே அதிக வீதத்தினைக் கொண்டுள்ளது. மொனராகல மாவட்டத்திலே குறைந்தளவினதாக 8 வீதமாகக் காணப்படுகின்றது.

சமகாலத்திலே விவாகரத்தை வெளிப்படுத்துவதில் 1/4 பங்கு பெண்களாகத்தான் இருக்கிறார்கள். விவாகரத்து பற்றிய பிரச்சினையானது கணவன், மனைவி ஆகிய இரு நபர்களுக்கிடையிலான ஒன்றாக இருந்தாலும் அது ஒரு சமூக ரீதியான, உள ரீதியான பிரச்சினையாகவும் மாற்றம் பெறுகின்றது. மேலும் ஒழுக்கவியல் ரீதியிலும் பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்துவதாகவும் அமைகிறது.

திருமணம் என்பது ஒரு சமூக சட்ட அமைப்பு முறை ஆகும். குடும்பம், இனப்பெருக்கம், பொருளாதாரம் போன்ற காரணங்களுக்காக திருமணம் செய்யப்படுகின்றது. மனித இனத்தைப் பொறுத்தவரையில் விவாகம் என்பது ஒரு உலகளாவிய பொதுமையாக இருந்தாலும் வெவ்வேறு பண்பாட்டுக் குழுக்களிடையே இது தொடர்பான வெவ்வேறு சமூகத்தினரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண், பெண் உறவு நிலையைக் குறிப்பிட்டு நிற்கின்றது. அதே நேரம் ஒரு புதிய சந்ததி தோன்றுவதற்கான பிணைப்பு எனவும் கூறப்படுகின்றது.

"திருமணங்கள் சுவர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன" "இன்னார்க்கு இன்னாரென எழுதி வைத்தான் இறைவன் அன்றே" போன்ற கூற்றுக்கள் திருமண பந்தத்தின் புனிதத் தன்மையை வலியுறுத்துகின்றன. தெய்வீகக் கோட்பாடானது திருமணம் செய்வதனை இறைவன் விரும்புகின்றான் என்கிறது. மேலும் யார் யாரைத் திருமணம் செய்யலாம் என்றும் திருமண பந்தத்துள் அடங்குபவை எவை? எனவும் வேத நூல்கள் வாயிலாக எடுத்துக் கூறியுள்ளதுடன், இன்பத்திலும் துன்பத்திலும் கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் பிரமாணமாக இருத்தல் வேண்டும் என விளக்கி நிற்கிறது.

கிறிஸ்தவ சமயமானது திருமணம் தெய்வீகமானது என்றும் அது ஒரு சமூக ஒப்பந்தம் இல்லை என்றும் விவாகரத்து ஒரு பாவமான செயல் என்றும் கூறுகிறது.

இயற்கை விதிகளின் பிரகாரம் மணம் முடித்த இருவரில் ஒருவர் இறக்கும் வரை திருமண பந்தம் தொடர வேண்டும். ஏனெனில் பெண்கள் 45 வயது வரை மக்கட்பேற்றிற்கான வாய்ப்புடையவர்கள். ஆதலால் குறைந்த பட்சம் 65 ஆண்டுகள் வரையாயினும் இப்பந்தம் தொடர வேண்டும் என்கிறது.

இவ்வாறாக திருமண வாழ்வானது தெய்வீகக் கோட்பாடுகள், இயற்கை விதிகளினால் பெரிதும் மதிக்கப்பட்ட ஒரு கருத்தமைவாக காணப்படுகின்றபோது சாதாரண மனிதர்களாகிய நாம் அதனை அவமரியாதை செய்யலாமா?

இன்றைய காலமானது ஏன்? எதற்கு? என்ற தகுந்த காரணங்கள் இல்லாமல் எடுத்ததற்கெல்லாம் விவாகரத்து தான் என முடிவு எடுக்கும் காலமாக மாறி வருகிறது. ஆனால் அது அவரது வாழ்க்கையிலும் சமூகத்திலும் ஏற்படுத்தும் பாதிப்புக்களைப் பற்றி யாரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

விவாகரத்தானது "விவாகத்தின் ஒரு சட்ட ரீதியான நீக்கம்" அதாவது இணைப்பினை அறுத்தல் என கலைக் களஞ்சியம் பொருள் கூறுகின்றது. அதாவது ஓர் ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையில் செய்யப்பட்ட விவாக ஒப்பந்தத்தை போதிய சட்டரீதியான உரிமம் கொண்டு நீதிமன்றம் தன் தீர்ப்பினால் அந்த விவாக ஒப்பந்தத்தை கலைத்து விடுதலே விவாகரத்து எனக் கூறுகின்றது.

ஓர் ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையிலான உறவு அவ்வளவு சுலபமானதல்ல. இந்த உறவு நீடித்துச் செல்வதற்கு இருவருமே மனமார்ந்த முயற்சியை மேற்கொள்ளவேண்டும். அதிலும் "காதல்" ரசத்துடன் ஆரம்பிக்கும் இந்த உறவு திருமண வாழ்வின் பின் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் யாரால் இந்தப் பிரச்சினைகளையெல்லாம் சமரசம் செய்து தடைகளை எல்லாம் கடந்து போக முடிகிறதோ அவர்களால்தான் வெற்றிகரமான வாழ்க்கையை மேற்கொள்ள முடியும்.

அதிலும் குழந்தைகளுக்காக பெண்கள் தமது திருமண வாழ்வு வெற்றி பெற வேண்டும் என எண்ணுவார்கள். மேலும் அவர்கள் திருமண பந்தத்தில் ஈடுபடுவதற்கு தமது பாதுகாப்புத் தேவையையும் மனதில்கொள்கின்றனர்.

அப்படியான பெண்களும் ஒரு கட்டத்தில் தம் கணவனை விட்டுப் பிரியும் நிலை ஏற்படும். ஏனெனில் உயிரே இல்லாத ஒரு உறவோடு வாழ்வதைவிட விவாகரத்து செய்வதே சிறந்த வழி என்று எண்ணுவார்கள். இக்காலப் பெண்களை ஆண்கள் தன் மனம்போன போக்கில் ஆட்டி வைக்க முடியாது.

ஏன் விவாகரத்து செய்கிறார்கள் என பார்க்கலாமா?

- கணவன்மார்கள் நம்பிக்கைத் துரோகம் செய்தல்
- திருமணமான பின்னும்கூட ஆண்களுக்கு சபலபுத்தி இருக்கக்கூடும்.
- பிற பெண்களின் வலையில் எளிதில் விழுந்துவிடும் தன்மை.
- குடும்பச் சுமைகளும் மற்றும் பிரச்சினைகளும் கூட ஒரு பெண் விவாகரத்துக் கோரக் காரணமாகிறது.

அதாவது மாமியார் எல்லா விடயங்களிலும் மூக்கை நுழைத்தல். இக்காலப் பெண்கள் வீட்டில் உள்ள மற்ற உறுப்பினர்கள் தனது திருமண வாழ்வில் தலையிடுவதனை விரும்புவதில்லை. எனவே, பெரியவர்களாகிய நீங்கள் இவற்றைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். இல்லையேல் அவர்களின் விவாகரத்துக்கு நீங்களே காரணம் ஆகிவிடுவீர்கள். இதனை விரும்புகின்றீர்களா?

எனினும் இத்தகைய காரணங்களுக்காக உடனே விவாகரத்துக் கோருவது ஒரு முட்டாள் தனமான செயல். ஏனெனில் சில ஆண்களுக்கு திருமணம் செய்த ஆரம்பத்தில் சில விடயங்கள் புரியாது இருக்கலாம். நீங்கள் அவர்களுக்கு சரி, பிழை எடுத்துக்கூறி புரியவைக்க வேண்டும். எதிர்கால உங்கள் நலனைக் கருத்திற்கொண்டு முடிந்தவரை அனைத்தையும் சமாளித்து சீர்செய்து வாழப்பழகுங்கள்.

பெண்களை நோக்கி ஆண்கள் விவாகரத்து கோருவதற்குரிய சந்தர்ப்பங்கள் குறைவு. இருந்தாலும் விசுவாசம் அற்ற தன்மை, வேறு ஆணுடன் தொடர்பு அல்லது ஈர்ப்பு, குடும்பத்தில் ஒற்றுமை இன்மை போன்றவை காரணங்களாவதைக் கூறலாம். இருப்பினும் "தாய்க்குப் பின் தாரம்" என்பதனை மனதில் வைத்து உங்களுக்குள்ளேயே கலந்தாலோசித்து முடிவெடுத்து வாழப்பழகுவீர்களாயின் வாழ்வு வெற்றிகரமானதாக அமையும்.

விவாகரத்து செய்யும்போது அதன் பின் ஏற்படும் பாதிப்புக்களை சிந்தித்துப் பாருங்கள். இது தனி ஒருவருக்கோ அல்லது சம்பந்தப்பட்ட இருவருக்கோ மட்டும் பாதிப்பை ஏற்படுத்தும் விடயமல்ல. இது பலருக்கு பல வழிகளில் பாதிப்பை உண்டுபண்ணுகிறது.

உளவியல் ரீதியாக மன அழுத்தம், உதவியற்றுள்ளோம் எனும் நிலை, நம்பிக்கையற்ற நிலை, தனிமையான வாழ்க்கை போன்ற நெருக்கடிகளை ஏற்படுத்தி பாதிக்கின்றது. பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்துகிறது. உடல் ரீதியாகவும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. எனவே ஆரோக்கியமாக இருப்பதனை விரும்பும் நீங்கள் விவாகரத்துக் கோருவதனை கைவிடுங்கள்.

அடுத்து விவாகரத்து கோரும் உங்களுக்கு பிள்ளைகள் இருப்பின் அந்தப் பிள்ளைகள் எந்தளவு தூரம் பாதிக்கப்படும்? ஏனைய சக பிள்ளைகள் தமது தாய் தந்தையுடன் மிகவும் சந்தோசமாக இருப்பதினைப் பார்த்து தனக்கு அவ்வாறு இல்லையே என்று சிறுவயதிலிருந்தே அப்பிள்ளைக்கு உளரீதியான தாக்கம் ஏற்படும். ஏனையோரின் துன்புறுத்தல்களுக்கும் அடிமைத்தனத்திற்கும் ஆளாகும் நிலை ஏற்படும். இதனால் அப்பிள்ளையின் வாழ்வு கேள்விக்குறியாவதோடு மட்டுமன்றி சிக்கலுக்குரிய ஒன்றாகவும் மாறுகின்றது. உங்கள் பிள்ளையின் வாழ்வு சிதைவடைவதனை பெற்றோர்களாகிய நீங்கள் விரும்புகின்றீர்களா?

உறவுகளுக்குள் பிளவுகள் ஏற்பட்டு, இதனால் சமூகம் பாதிக்கப்படுகின்றது. ஒவ்வொரு தனி மனிதருக்கும் சமூகத்தில் பல்வேறு பொறுப்புக்கள் உண்டு. அதாவது எம்மைப் பாதுகாப்பது, எம்மைச் சூழ உள்ளவர்களைப் பாதுகாப்பது...., விவாகரத்துக்கோர எண்ணும் ஒவ்வொருவரும் "நான் செய்வது மனிதாபிமானச் செயல்தானா?" என தம்மையே கேட்டுக்கொள்ளுதல் வேண்டும். சமூகத்திற்கும், குடும்பத்திற்கும் நாம் செய்ய வேண்டிய கடமைகள் உடன் பிறந்தது இதனை நாம் காப்பாற்ற வேண்டும்.

ஒவ்வொருவரும் ஒவ்வொருவருக்கும் பிடித்த மாதிரி வாழப்பழகிக் கொண்டால் விவாகரத்து எனும் சொல்லே அழிந்துவிடும். அதற்கான வழியினைப் பார்த்தல் மிகவும் அவசியமானது. இருவரும் இணைந்து உலா செல்லுதல், சேர்ந்து உணவருந்துதல், நண்பர்களை இணைந்து சந்தித்தல் போன்றவற்றோடு இருவரிடையேயும் புரிந்துணர்வுமிக்க நட்பினை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும். இருவரும் தொழில் செய்வோராகில் வீட்டு வேலைகளை, சமையலறை வேலை ஆகியவற்றில் இணைந்து திட்டமிட்டு செயலாற்றுவீர்களாயின் அதிக மன நிறைவைத் தரும்.

பிறந்தநாள், மணநாள் முதலியவற்றை நினைவில் வைத்து பொருத்தமான அன்பளிப்பைச் செய்யுங்கள். ஆழமான இன்ப உணர்வைத் தோற்றுவிக்கும். மனைவி அல்லது கணவன் எனக்காகவே வாழ்கின்றார் என நினைக்க வேண்டும்.

விவாகமாகிய ஆண், பெண் ஏனைய பெண் அல்லது ஆணுடன் எல்லையைத் தாண்டி உறவாடும் சந்தர்ப்பங்கள் இருப்பின் அது பாரிய பிரச்சினையை உண்டு பண்ணும் எனத் தெரிந்துகொண்டு கவனமாயிருங்கள். அளவோடு பழகுங்கள் உங்கள் வாழ்வின் உன்னதத்தைபேணுங்கள்.

மேலும் Internet, Face book, Mobile போன்றவற்றின் பாவனையைத் தேவையான விடயங்களுக்காக மட்டும் பாவியுங்கள். ஏனெனில் விவாகரத்தை தூண்டுவதற்கு இவ்வையும் காரணமாக அமைகின்றன.

எனவே உங்கள் வாழ்வை ஒளிமயமாக்குவதோடு மட்டுமன்றி உங்களைச் சுற்றியுள்ள சமூகம் மற்றும் கலாசாரத்தையும் வலுப்படுத்துங்கள். ஒருபோதும் வாழ்வை இழந்தால் மீளப் பெறமுடியாது. உங்கள் திருமண வாழ்வை நீங்களே அலட்சியப்படுத்த விரும்பாதீர்கள். அது விவாகரத்து அல்ல உங்கள் வாழ்விற்கு முற்றுப் புள்ளி இடும் ஒரு சொல்.


சந்தோசமாக வாழப்பிறந்த ஒவ்வொருவரும் திருமண வாழ்வின் மூலம் அனைவரையும் சந்தோசமாக்கி உங்கள் வாழ்க்கையை வெற்றிகரமாக நடாத்துங்கள். விவாகரத்து பற்றிய சிந்தனையைக் கைவிடுங்கள்.

**"விவாகம் என்பது வாழ்வின் அர்த்தம்"**
**"விவாகரத்து என்பது சிக்கலின் அர்த்தம்"**



**சரிதா சிவஞானம்**
கலைப்பீடம்
3ஆம் வருடம்
யாழ்.பல்கலைக்கழகம்

# உடையார்கட்டு கமநலசேவை நிலையத்தை புனரமைக்க ஏற்பாடு



(கிளிநொச்சி)

யுத்தத்தால் சேதமடைந்த முல்லைத்தீவு, உடையார்கட்டு கமநலசேவை நிலையக் கட்டடமானது பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 11.7 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

மேற்படி கமநல சேவை புனரமைக்கப்படாமையால், தங்களால் முழுமையாக சேவையை பெறமுடியாதுள்ளதாக விவசாயிகள் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி ஆணையாளரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதற்கான புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தங்கள் கோரப்பட்டுள்ளன. இந்நிலை யில், புனரமைப்புப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படு மெனவும் அவர் கூறினார்.

இதேவேளை, புதுக்குடியிருப்பு கமநல சேவை நிலையத்திற்கு உரக்களஞ்சிய நிலையமொன்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 3.5 மில்லியன் ரூபா நிதியுதவியில் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

# கரைப்பிரான் பிள்ளையார் ஆலயத்துக்கு சிமெந்துப்பைகள் அன்பளிப்பு



(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் திருவருள்மிகு கரைப்பிரான் பிள்ளை யார் ஆலயத்திற்கு ஒரு தொகுதி சிமெந்துப் பைகள் வழங்கப்பட்டன.

இவ் ஆலய பிரதமகுரு சோ.சிவகுமரக் குருக்கள் ஆனைகோட்டை இளைஞர் கழகத்திற்கு விடுத்த வேண்டுகோளை ஏற்றே இவ் உதவிகள் ஆலயத்தில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன.

ஆனைக்கோட்டை இளைஞர் கழகத்தின் தலைவர் எவ்.எக்ஸ்.டிகூரே தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், நவாலி வடக்கு இளைஞர் கழகத்தலைவர் அன்ரன் ரஜோ, க்ல்வளை இளைஞர்கழகத் தலைவர் நா.சுதர்சன், சண்டிலிப்பாய் மேற்கு இளைஞர் கழக பொருளாளர் நா.கஜீலன், ஆனைக்கோட்டை இளைஞர் கழகத்தின் உபதலைவர் ம.பனுஷா, விளையாட்டுத் துறைச செயலாளர் அ.நிஷாங்கன் உட்பட்ட இளைஞர்கள் பலர் கலந்து கொண்டனர். (48)

# மோட்டார்சைக்கிளில் வந்த யுவதியுடன் மோதிய இளைஞர்கள்

(அச்சுவேலி)

இராசவீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் இளம்யுவதி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

இரு இளைஞர்கள் ஒரு மோட்டார் சைக்கிளில் துவிச்சக்கரவண்டியொன்றை பிடித்துக்கொண்டு வந்தவேளையில் எதிரே மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த பெண்ணை மோதித்தள்ளி விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இதில் மோதுண்ட பெண்ணின் மோட்டார்சைக்கிள் பலத்த சேதத்திற்குள்ளானதுடன் அவரும் காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

மேலும் இவ் இளைஞர்கள் மதுபோதையில் மோட்டார் சைக்கிளைச்செலுத்திச் சென்றமையாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த பெண் சிகிச்சைக்காக அச்சுவேலி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (85)



கைதடி பிரதேசத்தில் கிராமிய குலதெய்வமான அண்ணமார் வழிபாடுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பக்தி பூர்வமாக நடைபெற்றன. (90)

# ஆயுர் வேதம்



## எளிதில் சமிபாடு அடைய...!

சிலருக்கு காலையில் சிறிதளவே சாப்பிட்டாலும் மாலை வரை பசியே எடுப்பதில்லை. மலம் போவதில்லை. இத்தகைய சமிபாட்டுப் பிரச்சினை உள்ளவர்கள் உணவில் கவனம் செலுத்த வேண்டும்.

எளிதில் சமிபாடடையக் கூடிய உணவு வகைகளாகிய புழுங்கலரிசிக் கஞ்சி, தெளிவான மோர் சேர்த்த அன்னவகை, நார்த்தங்காய் வற்றல், நார்த்தங்காய் சாறு பிழிந்த சித்ரான்னம், கருவேற்பிலைத் துவையல், கொத்தமல்லித் துவையல், எள்ளுப்பொடி அன்னம், எலுமிச்சை அன்னம் என்ற வகையில் காலை உணவாக ஏற்க, செரிமானத்தில் எந்த விதமான கஷ்டநிலையையும் அனுபவிக்க வேண்டி இராது.

புளித்த மாப் பண்டங்களாகிய இட்லி, தோசை, புரோட்டா, பட்டர் நாண், பாண் வகையறாக்களை காலை உணவாக உண்பதைத் தவிர்த்தல் நலம். உணவிற்குப் பிறகு சீரகம் போட்டுக் காய்ச்சிய வெந்நீரைப் பருகுவதால் செரிமானம் விரைவாக ஏற்பட்டு, உண்ட உணவின் சாராம்சத்தை உடலுட்புற தாதுக்கள் நிறைவாகப் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

சிறுகுடலில் சமிபாட்டிற்கு உதவிடும் சமானன் என்ற வாயு சரிவர செயற்படவில்லை என்றால் சமிபாட்டுப் பிரச்சினை தோன்றுகிறது. அதனுடைய செயற்றிறனில் ஏற்படும் தொய்வானது பெருங்குடல் பகுதியிலுள்ள அபான வாயுவின் செயலுக்கும் குந்தகம் விளைவிப்பதால், மலம் கழிக்க முயற்சிக்கும்போது பெருத்த சத்தத்துடன் காற்று வெளியேறுமே தவிர மலத்திலுள்ள ஈரப்பசை வற்றிவிடுவதால் வெளியேறுவதில்லை.

ஆகையால் இந்த சமான மற்றும் அபான வாயுக்களின் செயற்பாடுகள் சீராவதற்கும் சமிபாடு விரைவில் ஏற்படுவதற்கும் நம் கட்டுப்பாட்டில் இல்லாத குடல் அசைவுகள் நன்றாக நடைபெறுவதற்கும் கந்தர்வஹஸ்தாதி ஆமணக்கு எண்ணெய் எனப்படும் ஆயுர்வேத விளக்கெண்ணெய் மருந்தை சுமார் பத்து பதினைந்து மில்லி லீற்றர் காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு மேலே சிறிது வெந்நீர் பருகுவது மிகவும் நல் லது.

வயிற்றிலுள்ள சூட்டைப் பாதுகாப்பதற்கு சூடான வீரியம் கொண்ட ஒரு சில உணவுப்பொருட்களாகிய பெருங்காயம், சீரகம், தனியா, மிளகு, பட்டை, மசாலா, குண்டு மிளகாய், வெல்லம், உப்பு, கறிவேப்பிலை போன்ற வற்றைச் சமச்சீரான அளவில் உணவில் சேர்த்து பசி கெடாதவாறு அமைத்துக் கொள்வது நல்லது.

தயிரின் மேல் பகுதியில் நிற்கக் கூடிய தண்ணீரை மட்டும் எடுத்து சிறிது வெல்லம் உப்பு சேர்த்து காலையில் வெறும் வயிற்றில் பருக, குடல் பகுதியில் சேர்ந்துள்ள அழுக்குகளைச் சுரண்டி அங்கு பரவியுள்ள தேவை யற்ற வாயுவின் அழுத்தத்தையும் மலத்தின் வழியாக வெளியேற்றக் கூடிய சக்தி அதற்கு இருப்பதால் சுமார் மூன்று, நான்கு மாத காலங்கள் காலை யில் வெறும் வயிற்றில் சாப்பிடுவது ஆரோக்கியமானது.

ஒரு சில யோகப்பயிற்சிகள் நிறைவான பலனைத் தரலாம். பஸ்த்ரிகப்ராணாயாமம் என்ற மூச்சை உள்ளிழுத்து வெளியே விடும் யோகப்பயிற்சி செய்தால், உடற்சூடு நன்றாக பாதுகாக்கப்படுவதால் எளிதில் செரிக்கும் சக்தி மேம்படுவதாகக் கூறப்படுகிறது.

மேலும், நார்ச்சத்து மிகுந்த காய்கறிகள், கீரை, பழம் இவற்றை சாப்பிட பழக்கப்படுத்திக் கொள்வதும் ஆரோக்கியமானதே. அப்படி சாப்பிட இயலாதவர்கள் காய்கறிகளிலும் பழங்களிலும் இருக்கும் நார்ச்சத்தை மட்டும் கடைந்தெடுத்து மாவாக்கி பவுடர் வடிவில் கடைகளில் விற்கப்படுகிறது - அதை மருத்துவர் ஆலோசனைப்படி எடுத்துக் கொள் வது நல்லது.

இதைச் சாப்பிடும்போது பெருங்குடல் சுவர் இதை உறிஞ்ச முடியாது. அதனால் இந்தப் பவுடர் குடல் நீரை நன்றாகத் தன்னுள் இழுத்து கெட்டியான இறுகிப்போன மலத்தை வெளியில் கொண்டு வந்து விடும். இத்துடன் வெல்லத்தையும் சேர்த்து வெளியேற்றுவதால் நீரிழிவு வியாதிக்காரர்களுக்கு இரத்தத்தில் வெல்லத்தின் அளவும் குறையும்.

மேற்குறிப்பிட்ட காரணங்களால் குடல் பகுதியைச் சார்ந்த சமான, அபானவாயுக்கள் கெடாதவாறு கவனித்துக்கொண்டு உணவு, பழக்க வழக்கம் மற்றும் மருந்து ஆகியவற்றைச் சீரானமுறையில் கடைப்பிடிப்பதன் மூலமாக இத்தகைய சமிபாட்டு உபாதைகளைத் தவிர்த்து ஆரோக்கியமான ஒரு வாழ்க்கையை நீங்கள் அமைத்துக்கொள்ள முடியும்.

### இலந்தை

இலந்தைப் பழத்தில் ஊட்டச்சத்து உள்ளது. இது வயிற்றுப் புண்ணுக்குச் சிறந்தது. பழத்திலிருந்து ரொனிக் தயாரிக்கிறார்கள். குளிர்ச்சியானது. வலிநிவாரணி மருந்தாகவும் பயன்படுகிறது. உணவில் ஏற்படும் விஷத் தன்மைக்கு (Food poison) மாற்று மருந்தாகவும் பயன்படுகிறது. உலர்ந்த பழம் மலமிளக்கியாகச் செயற்படுகிறது. விதையின் பவுடர் தூக்கம் உண்டாக்கியாக உள்ளது. இதை மோருடன் கலந்து குடிக்கும் போது வயிற்றுப் போக்கைக் கட்டுப்படுத்துகிறது. பிரசவக் காலத்தில் ஏற்படும் அடிவயிற்று வலியைச் சரி செய்கிறது. புண்ணைச் சுற்றி உள்ள வீக்கத்தைக் குறைக்கிறது. இப்பவுடரை எண்ணெயுடன் கலந்து பக்க வாதத்தால் பாதித்த மூட்டுப் பகுதியில் தேய்த்துவிடுவதால் பலன் கிடைக்கிறது. இது பசியைத் தூண்டும் பழம்.

# முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தின் போது இனவாதத்தை தூண்டவேண்டாம்

## மீள்குடியேற்ற அமைச்சர் கோரிக்கை



(மன்னார்)

வடமாகாண முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தின்போது இனவாதத்தை தூண்ட வேண்டாம் என மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்தின வீரக்கோன், நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். மன்னார் மாவட்டத்திற்கு விஜயம் செய்த அமைச்சர் குணரத்தின வீரக்கோன், அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்ற மீள்குடியேற்றம் தொடர்பான கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் அமைச்சர் றிசாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக், மன்னார் அரசாங்க அதிபர் தேசப்பிரிய ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், வட மாகாண முஸ்லிம்கள் எதிர்நோக்கும் அவலங்களை நேரடியாக அவதானிக்கும் சந்தர்ப்பம் இன்றுதான் எனக்கு கிடைத்தது. இம்மகளது மீள்குடியேற்றம் தொடர்பாக அமைச்சர் றிசாத் பதியுதீன் பல தடவைகள் என்னிடம் சுட்டிக்காட்டியிருந்தார்.

அது மட்டுமன்றி, நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக், மேற்படி விடயமாக என்னிடம் சண்டை பிடிக்காத நாளே இல்லை. அவர்களது துன்பத்தை துயரத்தை இன்றுதான் நேரடியாக காண்கிறேன். இங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவை செய்கின்ற அமைச்சர் றிசாத் பதியுதீனை, சிலர் இனவாதியாகச் சித்தரிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இனிவரும் காலங்களில் அமைச்சர் றிசாத் பதியுதீனால் முன்னெடுக்கப்படும் வட மாகாண முஸ்லிம்களின் அபிவிருத்திக்கான நடவடிக்கைக்கும் எனது பூரண ஒத்துழைப்பை வழங்குவேன்.

அதோடு, அவர் மீது கூறப்படும் இனவாத கருத்துக்களை வன்மையாகக் கண்டிக்கின்றேன். வடக்கில் பாதிக்கப்பட்டவர்கள் எவராக இருந்தாலும் அவர்களுக்கான நடடிக்கைகளை எடுப்பதற்கு எனது அமைச்சு பின்நிற்கப்போவதில்லை என்றார்

இந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து, மன்னார், உப்புக்குளத்தில் தற்காலிக கூடாரங்களில் வாழும் மக்களையும் அமைச்சர்கள் குழு நேரில் சென்று பார்வையிட்டது.

# பனைமரச் சிலாகைகள் கொண்டு சென்றவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். வட்டுக்கோட்டையிலிருந்து பண்டத்தரிப்பிற்கு அனுமதிப்பத்திரமின்றி பனைமரச் சிலாகைகளை உழவு இயந்திரத்தில் கொண்டு சென்றவரை பிரான்பற்று பகுதியில் வைத்து நேற்று முன்தினம் காலை கைது செய்துள்ளதாக இளவாலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீதிக் கடமையில் ஈடுபட்ட பொலிஸார் வீதியால் வந்த உழவு இயந்திரத்தினைச் சோதனை மேற்கொண்ட போதே இவ்வாறு அனுமதிப்பத்திரமின்றி மரச் சிலாகைகள் கொண்டு செல்லப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

உழவு இயந்திரமும் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இதேவேளை பண்டத்தரிப்பு சூரிய வைரவர் ஆலயத்திற்கு அருகில் அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் விறகு ஏற்றிச் சென்றவர் நேற்று முன்தினம் காலை கைதுசெய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# சதொச நிறுவனங்களில் மரக்கறிகளின் விலை குறைப்பு

(கொழும்பு)

நாட்டின் பல பாகங்களிலும் உள்ள சதொச நிறுவனங்களில் நேற்று முதல் சகல வகையான மரக்கறிகளையும் குறைந்த விலையில் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கென மரக்கறிவகைகள் தம்புள்ளை, நுவரெலியா, யாழ்பபாணம் ஆகிய இடங்களிலுள்ள விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்வனவு செய்யப்பட்டு மக்களுக்கு மிகவும் குறைந்த விலை களில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோவின் பணிப்புரையின் பேரில் சதொச நிறுவனத் தலைவர்கள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

முதல் நிகழ்வாக பத்து வகையான மரக்கறிகள் மக்களுக்கு குறைந்த விலையில் விநியோகிக்கபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பேராதனை பல்கலைக்கழக பரீட்சைகள் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

திட்டமிட்ட வகையில் பேராதனை பல்கலைக்கழகத்தின் இணை சுகாதார பீடத்தின் பரீட்சை நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகும் என பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் அத்துல சேனாரத்ன அறிவித்துள்ளார்.

உபவேந்தரினால் நேற்று முன்தினம் நடாத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டது.


இன்று இடம்பெறும் குறித்த பரீட்சையில் தோற்றாத மாணவர்கள் சித்தியெய்தாத மாணவர்களாக அறிவிக்கப்படுவார்கள் என்று உபவேந்தர் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக் கண்டுபிடிப்பாளரின் சுற்றாடலுக்கு இசைவான படகு

(கொழும்பு)

இலங்கையின் புதிய கண்டுபிடிப்பாளர் ஒருவரின் கனவு கொமர்ஷல் வங்கியின் உதவியோடு இவ்வாரம் நனவாகியுள்ளது.

இந்திரசிறி கருணாதிலக்க என்ற புதிய கண்டுபிடிப்பாளரின் புதிய உருவாக்கமான சுற்றாடலுக்கு இசைவான படகு பேரா வாவியில் வெள்ளோட்டம் விடப்பட்டதன் மூலம் அவரின் நீண்ட நாள் கனவுநனவாகியுள்ளது.



இலங்கையின் புகழ்பூத்த கண்டுபிடிப்பாளரான காலஞ்சென்ற தேசமான்ய ராய் விஜேவர்தனவின் குடும்பத்தவர்கள் இந்தப் படகின் முதலாவது பயணிகளாக இணைந்து கொண்டனர். 'நதீயாத்திரா' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த சுற்றாடலுக்கு இசைவான படகு 12 அடிகள் நீளமானதாகும்.

2012ஆம் ஆண்டு ராய் விஜேவர்தனதர்ம நிதியத்தால் அறிமுகம் செய்யப்பட்ட புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கான முதலாவது விருதை வென்றதே இந்தப்படகாகும்.

வர்த்தகரீயான உற்பத்திக்கு சாதகமான இதன் மாதிரிகள் அன்று சமர்ப்பிக்கப்பட்டன. அதன் பிறகு இலங்கை கண்டுபிடிப்பாளர்களின் ஆணையகம் மற்றும் கொமர்ஷல் வங்கி என்பன வழங்கிய ஒத்துழைப்பின் மூலம் இந்தப் படகு கட்டி முடிக்கப்பட்டு வெள்ளோட்டம் விடப்பட்டுள்ளது

# பயணிகள் போக்குவரத்து சாரதிகளுக்கு புதிய சாரதி அனுமதிப்பத்திரம்

(கொழும்பு)

பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் சாரதிகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதல மீண்டும் தமது சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பிக்க வேண்டிய வகையில் புதிய விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த விதிமுறை, தனியார் மற்றும் அரச பேருந்து சாரதிகள், பாடசாலை வாகன சாரதிகள் ஆகியோருக்கே பொருந்தும வகையில் அமைந்துள்ளது. ஏனைய வாடகைக்கமர்த்தல் சேவைகளில் ஈடுபடுவோருக்கு இந்த விதிமுறை பொருந்தாது.

இந்தத் திட்டம் அறிமுகம் செய்வது தொடர்பில் முதன் முதலில் 2012ஆம் ஆண்டில் கலந்துரையாடப்பட்டிருந்த போதிலும், இதுவரையில் அமுல் படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# இளைஞர் விருது வழங்கல்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ் மாவட்ட காரியாலயம் மற்றும் யாழ் .மாவட்ட இளைஞர் கழக சம்மேளனம் இணைந்து நடாத்தும் இளைஞர் தினமும் இளைஞர் விருது வழங்கலும் இடம்பெறவுள்ளன.

ஒவ்வொரு வருடமும் மே 30ஆம் திகதி இளைஞர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில் இவ் வருடம் யாழ். மாவட்டத்திற்கான நிகழ்வுகள் கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் சிறப்பாக செயற்பட்டவர்களிற்கான விருது வழங்கலும் இடம்பெறவுள்ளது.

சிறந்த பிரதேச இளைஞர் கழக சம்மேளனங்கள், சிறந்த இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர், சிறந்த இளைஞர் கழகம், சிறந்த இளைஞர் சேவை அதிகாரி, அர்ப்பணிப்புள்ள இளைஞன், பிரதேச ரீதியில் சிறந்த இளைஞன், முன்னோடி இளைஞர் தலைவர் உள்ளிட்ட பல விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இந் நிகழ்வில் இளைஞர்களில் பல்வேறு கலைநிகழ்வுகளும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (48)

# சேவைநலன் பாராட்டு






(யாழ்ப்பாணம்)

சமூகசேவையாளன் சி.க. இராஜேந்திரனின் சேவைகளை பாராட்டும் விதமாக வதிரி தமிழ் மன்றம் ஏற்பாடு செய்த சேவைநலன் பாராட்டு விழா கடந்த புதன்கிழமை யா/தேவரை யாளி இந்துக்கல்லூரியில் இடம்பெற்றது.

இவ் விழாவில் இலக்கியவாதிகள் அரசியல்வாதிகள் முன்னாள் விளையாட்டு வீரர்கள் என பலதரப்பினரும் கலந்துகொண்டனர். விழாவின் இறுதியில் அவரின் வாழ்க்கை தொடர்பிலான புத்தகமும் வெளியிடப்பட்டது. (48)



# க.பொ.த. (சா/த) பயிற்சிப் பரீட்சை - 2014

# கல்வி முரசு O/L

தமிழ் மொழியும் இலக்கியமும்



1) பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

1. பின்வரும் தொடர்களைப் பிரித்து எழுதுக.

1) கல்லாதான் ஒட்பங் கழியநன் றாயினுங்

2) காப்படங்கென் றன்னை கடிமனை யிற் செறித்து

3) கோட்டை இடித்தகழ் குன்றாக்கி

2) கட்டுரையினைப் பொருளமைப்புக்கேற்ப எவ்வாறு வகைப்படுத்தலாம்?

3) பின்வரும் தொகாநிலைத் தொடர்களின் வகைகளை இனங்கண்டு எழுதுக.

1) அவன் படித்தான் | 3) இராமனுக்குத் தந்தை தசரதன்
2) ஓடிய குழந்தை | 4) நனி சிறந்தனவே

4) "அவர்களுள் இவளே சிறந்தவள்" இவ்வாக்கியத்தில் "ஏகார" இடைச்சொல் எவ்வகைப் பொருளில் வந்துள்ளது?

5) மழை பெய்தது

அதிபர் பாடசாலைக்குச் சமூகமளிக்கவில்லை.

பொருத்தமான இணைப்பிடைச் சொல்லைப் பயன்படுத்தி இவ்விரு வாக்கியங்களையும் ஒரு வாக்கியமாக எழுதுக.

6) "பழமோ அதுவுமன்று காயோ அதுவுமன்று" இவ்வாக்கியத்தில் "ஓகார" இடைச்சொல் எவ்வகைப் பொருளில் வந்துள்ளது?

7) "இனியாவது நிகர்த்த குளிர்நிலவுடையாள்" இவ்வாக்கியத்தில் இடம்பெற்ற இடைச்சொல் யாது?

8) "பாலை நிகர்த்த குளிர்நிலவுடையாள்" இவ்வாக்கியத்தில் இடம்பெறும் உவமை உருபு யாது?

9) "பாடி பாடல்", "பெய்யும் மழை" இவ்விரு தொடர்களிலும் இடம்பெறும் பெயரெச்ச விகுதிகள் எவை?

10) பணமோ இல்லை பொருளோ வேண்டும் என்னும் வாக்கியத்தில் பொருள் மாறுபடாதவாறு விலக்கி விடக்கூடிய சொல் எது?

11) இன்றைய நவீன தொடர்பாடல் சாதனங்களுள் அடங்கும் மின்னியல் கடிதங்கள் எவை?

12) "அற்று குளத்தில் அறுநீர்ப் பறவை போல் உற்று வழித்தீர்வார் உறவல்லர்" என்னும் தொடரில் இடம்பெறும் உவமானம், உவமேயம், உவமை உருபு என்பவற்றைக் குறிப்பிடுக.

13) "மன்னர் விழித்தாமரைப் பூத்த மண்டபம்" இத்தொடரில் இடம்பெற்ற அணி யாது?

14) "அறிவில்லாதவனான கொற்றவன்" இங்கு 'அறிவில்லாதவன்' என்ற தொடர் இரு பொருள்பட வந்துள்ளது. அதனை விளக்குக.

15) "உன் மூக்கினிலும் தீயின் மூளை அது சொண்டா" இதில் வந்துள்ள அணியை விளக்குக.

16) "படத்தை வரைந்தான்" இத்தொடரில் இடம்பெறும் 'வேற்றுமை உருபு' யாது? அவ்வுருபு உணர்த்தும் பொருள் யாது?

17) 'நா கொண்டு சுட்ட வடு' இவ்வாக்கியத்தில் இடம்பெறும் சொல்லுருபு யாது? தற்கால வழக்கில் பயன்பாடில்லாத மூன்றாம் வேற்றுமை உருபுகள் எவை?

18) "கூலியின் பொருட்டு வேலை செய்தான்", "கூலிக்காக வேலை செய்தான்" இவ்விரு வாக்கியங்களிலும் கையாளப்பட்ட சொல்லுருபுகள் யாவை? அவ்விரு சொல்லுருபுகளும் உணர்த்தும் வேற்றுமை யாது?

19) அழைப்பிதழ்களின் வகைகள் எவை?

20) திருமண அழைப்பிதழ் ஒன்றில் இடம்பெறவேண்டிய பிரதான அம்சங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

21) பந்தியை விரித்து வளர்ப்பதற்கான வழிகள் இரண்டு தருக.

22) பேச்சு வழக்கில் எழுதப்படும் இரண்டு இலக்கிய வடிவங்களைத் தருக.

23) பின்வருவன எந்தப் பிரதேசக் கிளை மொழிகள்

1. மறுகா | 2. உறுலோசு

24) பாரதி ஒரு மகாகவி என்பது இலக்கிய ஆய்வாளர்களின் கருத்தாகும். இது எவ்வகை வாக்கியம்?

25) சிறுகதையின் பண்புகள் இரண்டு தருக?

26) கட்டுரை எழுதும்போது அவதானிக்கவேண்டிய இரண்டு படிமுறைகளும் எவை?

27) கட்டுரையில் பின்வருவனவறறுள் எவற்றைத் தவிர்க்க வேண்டும் என்பதனைக் குறிப்பிடுக. சிறந்த பயன் தருதல், சந்தேகம் ஏற்படக்கூறல், பொருத்தமான குறியீடுகளைப் பயன்படுத்தல், முரண்படக் கூறுதல், வாசிப்பதற்கு இன்பம் தருதல்.

28) அல்லோல கல்லோலம், ஒட்டி உலர்ந்து ஆகிய இணைமொழிகளை வைத்து வாக்கியம் அமைக்க.

29) பின்வரும் தொகைநிலைத் தொடர்களின் வகைகளை இனங்கண்டு எழுதுக.

1. ஒன்றரை | 2. வட்டமேசை
3. சுடுநீர் | 4. பிறைநுதல்

30) அமைப்பு அடிப்படையில் அமைந்த வாக்கிய வகைகளுள் இரண்டினைக் குறிப்பிடுக.

31) உறவுமுறைக் கடிதத்தின் வகைகள் இரண்டு தருக.

32) கடிவேல், கடிமாலை என்பவற்றில் வந்த 'கடி' என்னும் உரிச்சொல் உணர்த்தும் பொருள்கள் எவை?

33) உறவுமுறைக் கடிதத்தில் பின்வருவனவற்றுள் தவிர்க்கப்பட வேண்டியவை எவை? முகவரி, உள்முகவரி, விளிப்பு, விடயத்தலைப்பு, செய்தி, முடிப்பு, ஒப்பம்

34) கவிதை ஒன்றினை நயப்பதற்கரிய கூறுகள் நான்க தருக.

35) நரை, நறை இச்சொற்களின் கருத்துப் புலப்படுமாறு அவற்றை தனித்தனி வாக்கியங்களில் எழுதுக.

36) பற்றையில் விழுந்தவனைப் பாம்பு கடித்தது. இதில் விழுந்தவனை என்பது எவ்வகைப் பெயர்?

37) கண்ணன் நன்றாகப் பாடினான்.

கண்ணன் போட்டியில் வெற்றி பெற்றான்.

இவ்விரு வாக்கியங்களையும் இணைத்துத் தொடர் வாக்கியமாக எழுதுக

38) துக்க சம்பவத்தைக் குறிப்பதற்கு மீனவ சமூகம் பயன்படுத்தும் சொல் எது?

39) நாளைக்கும் வருவேன். இவ்வாக்கியத்தில் இடம்பெற்ற இடைச்சொல்லை இனங்கண்டு எழுதுக. அது என்ன பொருளில் வந்துள்ளது?

40) 'வரை' என்னும் சொல் பெயராகவும், வினையாகவும் அமையும் வகையில் வாக்கியம் அமைக்க.

41) விளம்பரத்தின் பண்புகளாகப் பின்வருவனவற்றுள் எவற்றைக் குறிப்பிடலாம்?

விரிவாகச் சொல்லி விளக்குதல், கவர்ச்சியான வசனங்கள், சுவையான தகவல்கள், தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தல்.

42) 'செல்' என்னும் சொல் பெயராகவும் வினையாகவும் அமையக்கூடிய வகையில் வாக்கியம் அமைக்க.

43) "வெண்பாவில் புகழேந்தி" என்பதில் வந்துள்ள வேற்றுமை உருபு யாது? என்ன பொருளில் வந்துள்ளது?

44) கண்ணனது கருமை, கண்ணனது புத்தகம் என்பதில் 'அது' உருபு உணர்த்தும் பொருள்கள் எவை?

45) திலீபனைக் காட்டிலும் தீசன் கெட்டிக்காரன். என்பதில் வந்துள்ள சொல்லுருபு யாது? அது என்ன பொருளில் வந்துள்ளது?

46) எங்களுடைய பாடசாலை என்பதில் வந்துள்ள சொல்லுருபு யாது? அச்சொல்லுருபு உணர்த்தும் பொருள் யாது?

47) 'நான் இவ்வளவோடு நிறுத்திக்கொள்கின்றேன்' இது எத்தனையாம் வேற்றுமை? என்ன பொருளில் வந்துள்ளது?

48) வணிக நிறுவனங்கள் நுகர்வோரைக் கவரும் வகையில் விளம்பரங்களை மேற்கொள்கின்றன. அவ்வாறு நேர்த்தியான வகையில் விளம்பரங்களை மேற்கொள்வதற்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

49) "என்னட்டை அப்பிடியெல்லாம் வேண்டக்குடாது புள்ளை" பேச்சு வழக்கிலுள்ள இத்தொடரினை எழுத்து வழக்கில் மாற்றி எழுதுக.

50) விதானையார் கண்களை மூடியிட்டாராம் என்ற செய்தியைக் கேட்டதும் வைரமுத்தரின் மார்பில் சுரீரென்றது பொருத்தமான நிறுத்தக் குறிகளை இட்டு வாக்கியத்தை எழுதுக.

## பகுதி II

பின்வரும் உரைநடைப்பகுதியை 40 -45 சொற்களில் அமையுமாறு சுருக்கி எழுதுக.

1) நோக்கமும் கொள்ளையும் மக்கள் வாழ்க்கைக்காக - மக்களுக்காக ஏற்பட்ட

வைகளே. மதமும் மொழியும் அப்படியே மக்களின் நன்மைக்காக ஏற்பட்ட வைகளே. ஆனால், இன்று இந்தியா முழுவதும் நான் காணும் காட்சி மதத்துக்காக மொழிக்காக நோக்கத்துக்காக கொள்கைக்காக என்று இப்படிப்பட்ட காரணங்களுக்காக மக்கள் சாகின்றார்கள், வதைக்கின்றார்கள், அலைகின்றார்கள், ஒருவரை ஒருவர் பகைக்கின்றார்கள். பட்டுப்பூச்சிதானே நூல் உண்டாக்கித் தன்னையே சுற்றிக்கொண்டு தானே ஏற்படுத்திய அந்த வலைக்குள் தானே கிடந்து வருந்துகின்றதல்லவா? மனிதனும் அப்படியே தன் மூளையைக் கொண்டுதானே ஏற்படுத்திக் கொள்கின்ற கொள்கை வலைக்குள் தானே அகப்பட்டு அழிகின்றான். இன்று உலகத்தில் மக்கள் படும் தொல்லைக்குக் காரணம் என்ன? பூனைகளோ அல்லது புலிகளோ மாநாடு கூடி மக்களைக் கெடுக்கச் செய்த சூழ்ச்சியா இது? அல்லது கழுகுகளும், புழுக்களும் பிணங்களும் போதாத குறையை உணர்ந்து பிணங்களைப் பெருக்குவதற்கு ஏற்படுத்திய போர்களா? இக்காலத்துப் போர்கள். எந்த விலங்கும் எந்தப் பறவையும் எத்தகைய சூழ்ச்சியும் செய்து மனிதனைக் கெடுக்க முயலவில்லை. மனிதன் மூளையில் தோன்றிய சில தவறான எண்ணங்களுக்கு மனிதன் அடிமையாகி அழிந்து போகின்றான். வாழ்வுக்காகக் கண்டான் கொள்கைகளை, நாளடைவில் கொள்கைகளுக்காக வாழ்வைப் பலிகொடுக்கின்றான். அரசியல் கொள்கை வலுக்கின்றது. மதம் ஆகின்றது. எதிர்க்கட்சிகளை வளர்க்கின்றது. எதிர்பாராத போர்களை உண்டாக்குகின்றது. ஒன்றும் அறியாத பாமர மக்கள் படமுடியாத துன்பங்களைப் பட்டு வருந்துகிறார்கள். உயர்ந்த நோக்கம் தான். ஆனால் ஓயாத தொல்லையாக மூழ்கின்றது. காரணம் இல்லாமல் ஏழைமக்கள் துன்பங்களுக்கு ஆளாகின்றார்கள். இதைக்கண்ட உலகத் தலைவர்கள் நெஞ்சம் கலங்குகின்றார்கள். மெல்ல மெல்ல உண்மையினை உணர்த்தி உதவ முயல்கின்றார்கள். கொள்கையை விட உயர்ந்த நோக்கத்தை விடப் பொதுமக்களின் உயிர் வாழ்க்கை விலையுயர்ந்தது என்பதைத் தெளியச் சொல்கிறார்கள்.

2) கல்வி என்பது ஓர் இலக்கன்று. இலக்கை எய்துவதற்கான ஒரு கருவியேயாம். அதாவது, நாம் பிள்ளைகளைக் கற்பிக்க வேண்டும் என்பதற்காக மட்டும் கற்பிப்பதில்லை. அவர்களை வாழ்க்கைக்குத் தகுதியானவர்களாக்குவதே நமது நோக்கமாகும். இந்த உண்மையை நாம் உணர்ந்து கொள்வோமாயின், பிள்ளைகளை உண்மையிலே வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்யத்தக்க கல்வி முறைமை ஒன்றைத் தெரிவுசெய்ய வேண்டியது மிக முக்கியமானது என்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல காண்கிறோம். யாதேனும் ஒரு கல்வி முறைமையை முதலிற் கண்ட அளவாளே, அதனை அப்படியே தெரிவுசெய்து விடுவது போதாது. அதுபோலவே நடைமுறையில் நெடுங்காலமாக இருந்துவரும் பழைய கல்வி முறையானது உண்மையிலே பொருத்தமுடையதே, அன்றோ என்று ஆராய்ந்து பாராமல், அதனைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதும் போதாது.

இக்கால நாடுகள் பலவற்றிலே செல்வராயினுமாக, வறியராயினுமாக, நுண்ணறிவுள்ளவராயினுமாக, மந்தர்களாயினுமாக எல்லார்க்கும் இலவசக்கல்வி அளிப்பதால் சமூகப்பிரச்சினைகள் யாவற்றையும் தீர்த்து நிறைவான நாட்டினம் ஒன்றை உருவாக்கிவிடலாம் என்று நம்பும் போக்கொன்று காணப்பட்டது. ஆனால் எல்லார்க்கும் இலவசக்கல்வி அளிப்பது போதாது என்பதை நாம் ஏலவே கண்கூடாகக் கண்டுகொண்டோம். அத்தகைய நாடுகளிலே கிடைக்கும் வேலைகளைக் காட்டிலும் எண்ணிக்கையில் அதிகமானோர் பல்கலைக்கழக பட்டம் பெற்றவராய் இருக்கக் காண்கின்றோம். தாம் பெற்ற பட்டம் காரணமாக, அன்னார் தாழ்வாகக் கருதும் வேலைகளைச் செய்ய மறுக்கின்றனர். உண்மையிலே, அத்தகைய நாடுகளிற் கைகளினாற் செய்யும் வேலை இழிவானதென்றும் நாணத்தக்கதென்றும் கருதப்படுகின்றது.

3) சீதத்தன் என்ற வணிகன் வீரம் மிக்க அவதத்தன் என்பவனின் அருமந்த மகனாவான். சிறந்த காளைப் பருவத்தினன். இனிய சாயல் மிக்க பதுமை என்பவளின் கணவன். அவன் பெரு நிதியம் படைத்திருந்தனன். அவன் தன் செல்வ மிகுதியைச் "சங்குதரு நீணிது" என்பர் தேவர். சங்க என்பது ஒரு பேர் எண் சங்குக் கணக்கான பெருநிதியத்தைச் சீதத்தன் பெற்றிருந்தான் என்பது இத்தொடரினின்றும் பெறப்படும் பொருளாம். அவன் தன் தீவினைப் பயனால் இப்பெருநிதியம் முழுவதும் அழிந்தது. ஆனால் அதற்காக அவன் மனம் தளரவில்லை. முயற்சி திருவினையாக்கும் என்ற உண்மையை உணர்ந்தனன். "முயலும் உள்ளமுடையவன் முயன்றால் ஒரு நாளிலேயே வெள்ளக்கணக்கான நிதியத்தை திரட்டலாம். முயற்சியால் ஆகாததொன்றில்லை. இம்முயற்சியை விடுத்து வரும்பொருள் நிலைத்திருக்காது. எனவே முயற்சி செய்து என்பயன் என்ற கருத்தினராய் மடிந்திருப்பின் பகைவர்க்கு அது தலையெடுப்புப் போல இனிதாயிருக்கும் என்றிங்ஙனம் அவன் முயற்சியினால் எய்தும் பெருமையையும் மடியினால் எய்தும் சிறுமையையும் சிந்தித்தான். தான் கடல் கடந்து சென்று இழந்த பொருளை ஈட்டத் துணிந்தனன். தன் மரக்கலத்தில் பண்டங்களை மிகுதியாக ஏற்றி நன்னேரத்தில் புறப்பட்டனன். அவன் புறப்படுவதற்கு முன்பு வேண்டுவார்க்கு வேண்டுவ தானம் செய்து மரக்கலத்திலேறி தெய்வத்தை வணங்கி "இக்கலம் தீங்கு சிறிதுமின்றி இனிதே செய்வதாக' என்று தொழுதனன். மரக்கலம் சங்கும் நாவாய்ப் பறையும் முழங்க கடலிலே விரைந்து சென்றது. விரைந்து சென்ற காட்சி பவளக்கொடியை அறுத்து ஓடும் களிறு போல இருந்தது.

4) "பேச்சிலே என்ன இருக்கிறது என்று சொல்லிவிட முடியாது பேச்சைக் காட்டிலும் செயல் முக்கியம் என்பதை நான் ஒப்புக்கொள்கின்றேன். ஆனால் செயலுக்குத் தூண்டுவது பேச்சு என்பதை நீ மறந்துவிடக்கூடாது. இன்னின்னபடி ஒரு காரியத்தைச் செய்யவேண்டும் என்பது உனக்கு எப்படித் தெரிகிறது? பிறர் சொல்லக் கேட்டுத்தானே, கல்விச் செல்வத்தைக் காட்டிலும், கேள்விச் செல்வம் விசேடமானதென்று சொல்வார்கள். இந்தக் கேள்விச் செல்வம் எதனை முக்கியமாகக் கொண்டு பெருமையடைகின்றது? பேச்சையல்லவோ? ஒருவர் சொல்லித்தானே மற்றவர் கேட்கவேண்டும். ஆதலின் பேச்சென்ன வேண்டியிருக்கிறதென்று அலட்சியப்படுத்தக்கூடாது.

ஆனால், பேச்சுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்துவிட்டு, மற்றச் சிந்தனை, செயல் எல்லாவற்றையும் இரண்டாம் பட்சமாகக் கருதாமலிருக்க வேண்டும். அதுதான் முக்கியம். சொல்லுக்குப் பேச்சு ஒரு கருவி. அந்தக் கருவிக்குள்ள கௌரவத்தை அதற்கு நீ கொடுக்க வேண்டும். அந்தக் கருவியை நன்றாக உபயோகிக்கத் தெரிந்துகொள்ள வேண்டும். அப்படித் தெரிந்துகொண்டால் தான் நீ எடுத்த காரியத்தை நன்றாகச் செய்து முடிக்க முடியும்.

## பகுதி I

பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.

1) **"ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்**
**பேரறிவாளன் திரு"** இக்குறட்பாவை கொண்டு கூட்டி எழுதுக.

2) முத்தொள்ளாயிரச் செய்யுட்கள் எந்நூலில் திரட்டித் தரப்பட்டுள்ளன?

3) "குறித்த நேரத்தைச் சற்றுக் கடந்தாலும் என் உயிர் துடித்துப் போய்விடும் என்று உனக்குத் தெரியாதா?" இக் கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

4) **"மஞ்சும் அஞ்சும் கை....."** எனும் பாடலில் அஞ்சும் என்ற சொல் எவ்வெப் பொருளில் பயன்படுத்தப்படுகிறது?

5) கசாப்புக்காரன் சந்நியாசிக்குக் கூறிய உபதேசங்கள் எந்நூலாக உருப்பெற்றது?

6) மீன்பிடிகாரர் பாடலில் ஆசிரியர் எதனை விளக்க முற்படுகின்றார்?

7) ஒண்ணும் இருக்காது நமக்கேன் அப்படியெல்லாம் வராது?

8) "காலப் பெருநதியின் கால்நடையும் அப்படித்தான்...." இங்கு காலப் பெருநதி என்பதில் கையாளப்பட்டுள்ள அணி யாது?

9) கலித்துறைக்கோவை என்னும் நூலை இயற்றியவர் யார்?

10) நிழலின் நினைவு எனும் கவிதையில் கையாளப்பட்டுள்ள குறியீட்டுச் சொற்கள் எவை?

11) யாருடைய வாழ்க்கை நிலைப்பாட்டைக் கூறுவதனூடாக ஆசிரியர் மீனவத் தொழிலின் சிறப்பை விளக்குகின்றார்?

12) "ஜயனே நாம் இருவரும் கானகம் சென்றது முதல் இதுவரையும் நிகழ்ந்த செயல்களைப் பார்த்தாயா?" இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

13) "கைப்புடி லேஞ்சி கண்டு எண்கள்ளமனம் துள்ளுதையா..." எனும் பாடலடியில பெண்ணின் எம்மனவுணர்வு வெளிப்படுத்தப்படுகிறது?

14) கடற்புறம் எனும் கவிதையின் ஆசிரியர் யார்? இது எக்கவிதைத் தொகுதியில் இடம்பெறுகிறது?

15) ஒரு பதிவிரதையின் சரித்திரம் எனும் கதையினூடாக நீர் அறிந்து கொண்ட படிப்பினைகள் இரண்டு தருக?

16) விடியுமா என்ற சிறகதையின் ஆசிரியர் யார்? இச்சிறுகதை எத்தொகுதியில இடம்பெறுகிறது?

17) "இல்னீலத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான்..." என்ற பாடல் வரியில் இல்லைத்தான் என்பதன் பொருள் யாது?

18) சூசிகை என்றால் என்ன? சூசிகை எழுதப்பட்டதன் நோக்கம் யாது?

19) "காப்படங்கென்றன்னை கடிமனையிற்செறித்து...." என்னும் பாடலில் வரும் இற்செறித்தல் என்றால் என்ன?

20) கிட்டியடித்தல் என்னும் பாடலில் கூறப்படும் மருந்துப்பட்டைகள் எவை?

21) நச்சப்படாதவன் செல்வத்தை வள்ளுவர் எதனுடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளார்?

22) "கடவுள் தந்த கைகள் முழுப்படவுண்டு..." என்ற பாடல் வரி உணர்த்துவது யார்?

23) முன்னோர்க்கு என்ற கவிதையின் தொனிப்பொருள் யாது?

24) விடியுமா என்ற சிறுகதையில் தந்தி தாங்கி வந்த செய்தி யாது?

25) "நான் உம்முடைய யோக வித்தையைக் கற்றிலேன். ஒருநாளும் சந்நியாசி வேஷம் தரித்திலேன்" இக்கூற்று யாரால் கூறப்பட்டது? இக்கூற்று இடம்பெறும சிறுகதை எது?

26) "நிலவாய் விளங்குதலால் ....." என்ற பாடலில் கையாளப்பட்டுள்ள அணி யாது? இதில் புலவர் எவற்றை ஒப்பிட்டுப் பாடுகிறார்?

27) மங்கையர்க்கரசியின் காதல் என்ற சிறகதை எழுந்த காலப்பின்னணி யாது?

28) "ஆய்மணிப்பைம்பூண் அலங்கதார் கோதையை..." இங்கு கோதை எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

29) **"நல்லார் கைப்பட்ட செல்வத்தின் இன்னாதே**
**கல்லார் கட்பட்ட திரு"** எனும் குறட் பாவின் பொருளைத் தருக?

30) "குததுக்கட்டை மேலேறி ....." என்ற நாட்டார்பாடல் எப்பிரதேசத்துக்குரியது? உமது விடைக்கான சான்றிதனைத் தருக?


31) சென்றொழிந்த காலம் திரும்பி வரமாட்டடாது. ஆகவே காலத்தை தக்கவாறு பயன்படுத்த வேண்டும் என்பதை விளக்கும் பழமொழிகள் இரண்டு தருக?

32) விடியுமா என்ற சிறுகதையின் கதைக்கரு யாது?

33) ஒரு பதிவிரதையின் சரித்திரம் எனும் கதையின் ஆசிரியர் யார்? இது எந்நூலில் இடம் பெறுகிறது?

34) "குத்துக்கட்டை மேலேறி...." ஏன்ற நாட்டார்பாடலில் எச்சுவை விஞ்சியுள்ளது?

35) "கோழியர் கோக் கிள்ளிக் களிறு...." இங்கு கோழி என்பது.





புகைத்தல் எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு தென்மராட்சி பிரதேச செயலக சமுர்த்தி வாழ்வெழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தால் கருத்தமர்வு நேற்று முன்தினம் செயலக மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் வளவாளர்களினால் கருத்தமர்வு இடம்பெறுவதையும் கலந்துகொண்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களையும் காணலாம். (11)

# ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், 31 ஆம் திகதி சனிக்கிழமையும் முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையும் மாவட்ட கூட்டுறவு கலாசார மண்டபத்தில் நடை பெறு மென மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

உரிய திணைக்கள தலைவர்களை அதில் பங்குபற்றுமாறும் அரசாங்க அதிபர் கடிதம் மூலமாக தெரிவித்துள்ளார். (90)

# பனைவளக் கைத்தொழிலை மேம்படுத்த யாழில் மாநாடு

(யாழ்ப்பாணம்)

பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சிகளின் முடிவுகளை பனை சார்ந்த கைத் தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கும் நோக்குடன் எதிர் வரும் 2ஆம் திகதி காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணி வரை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் பனை ஆராய்ச்சிகளின் முடிவுகளை வெளிக்கொண்டு வரும் மாநாடு பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் வழி நடத்தலில் பனை ஆராய்ச்சி நிறுவனத்தினால் நடாத்தப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் வே.சிவஞான சோதி தெரிவித்தார்.

இவ் வைபவத்திற்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர், டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இம் மாநாட்டில் பனைத் துறை சார்ந்த ஆராய்ச்சியாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பனை தொடர்பான கூட்டுறவுச் சங்கங்கள், பனைசார் உற்பத்தியாளர்கள், பனை அபிவிருத்தி சபையின் சிரேஸ்ட அலுவலர் கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பனைத்துறையில் அக்கறையுள்ள பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

2013ஆம் ஆண்டு பனை ஆராய்ச்சி நிறுவனத்தினால் பனை வளம் சார்ந்த கைத்தொழில்களில் உள்ள பிரச்சினைகள் அத்தொழில் சார்ந்த முயற்சியாளர்களுடன் ஆராயப்பட்டு அப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பிரயோக ஆராய்ச்சிகள் இனங் காணப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றில் முக்கியமான ஆராய்ச்சிகளாவன.

போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளின் தரத்தை அதிகரிப்பதற்கான ஆராய்ச்சிகள், பனங்கட்டியின் தரம், சுவை, உள்ளடக்கம், பாவனைக்காலம், (shell life) தொடர்பான ஆராய்ச்சிகள், பனையோலை சார்ந்த கைவினை கைப்பணிப் பொருட்களில் ஏற்படும் பங்கசு தாக்கத்தினை குறைக்கும் முகமாக பங்கசு தாக்கத்தினைக் கட்டுப்படுத்தும் ஆராய்ச்சிகள், பனங்களியை நீண்ட காலத்திற்கு பழுதடையாமல் பாதுகாப்பதற்கான ஆராய்ச்சிகள், பனைகளிலிருந்து இலாபகரமாகப் பெக்டின் பிரித்தெடுப்பதற்குரிய ஆராய்ச்சிகள், பனங் களியிலிருந்து உடலாரோக்கியத்துக்குத் தேவையான போசாக்கு பெறுமதிகளை கண்டறிவதற்கான ஆராய்ச்சிகள் என்பவற்றை குறிப்பிட்டுச் சொல்லாம், பனைத்துறை சார்ந்த ஆராய்ச்சிகள் பனைசார் உற்பத்தியாளர்களைச் சென்றடைவதன் மூலம் பனைத்துறையின் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துவதே இம் மாநாட்டின் நோக்கமாகும்.

பனை சார் உணவு பெறுமதிகள், போசாக்குப் பெறுமதிகள், மருத்துவ பெறுமதிகள், சுகாதார பெறுமதிகள் மக்களிடையே வெளிப்டுத்தப்பட்டு விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதன் மூலம் பனைக் துறையினை பொருளாதார ரீதியில் சக்திமிக்க துறையாக மாற்றமுடியும் என வே.சிவஞா னசோதி தெரிவித்தார்.

மேலும் அத்துறையின் அபிவிருத்தியினரால் ஏற்படுகின்ற பலாபலன்கள் வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள மக்களின் வாழ்வாதாரத்திற்கு பங்களிப்புச் செய்யும் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது.

# முரசின் இன்றைய பலன்

(28.05.2014 புதன்கிழமை)



ஜய வருஷம் சித்திரை மாதம் 14 ஆம் திகதி.

அக்கினிநாள் முடிவு அமாவாசை /அமிர்தசித்தம்.

கார்த்திகை நட்சத்திரம். மாலை.6.17வரை. பின் ரோகிணி.

இராகு காலம 1.22 - 2.52 வரை. சுபநேரம 7.22 - 08.52 வரை.

**ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | மின்ஒழுக்கைச்சீர் செய்ததால் ஏற்படவிருந்த அபாயம் விலகுதல்.மறைந்திருந்த திறமைகள் வெளிப் பட்டதால் பணிஆச்சரியப்படத்தக்க வகையில் முழுவுறல். |
| ரிஷபம் | அமங்கல நிகழ்வினால் தடைப்பட்டிருந்த சுபகாரியம் நடைபெற ஒழுங்குகள் செய்தல்.உங்களை விமர்சித்த உறவுகள் மனம்மாறி பாராட்டுதலைத் தருவார்கள். |
| மிதுனம் | படிப்பில் கவனமெடுக்காத பிள்ளையைக் கண்டிக்க முயன்றவேளை ரகளை ஏற்படல்.நோய் நொடிகள் நீங்கி தேகம் வளப்புடன் விளங்க முற்படும். |
| கடகம் | உங்களின் நடவழக்கைகளைச்சிலர் வேவு பார்க்க முயல்வதை எச்சரிக்கையாக கண்ணோட்டம் விடுங்கள.கணக்குப்பதிவில் தில்லுமுல்லு இருந்ததினால் வாழிக்கையைக் கைவிட முஸ்தீபு |
| சிம்மம் | கௌரவப்பாதிப்பினால் அழைக்கப்பட்ட நிகழ்வினைக் கைவிட்டுவிடல். ஆடம்பரப் பொருட்களின் கொள்வனவால் கடன் சுமை ஏறி பதகளிப்பு ஏற்படும். |
| கன்னி | வேலைப்பளுவினை தேக்கமின்றி குறைக்க சக ஊழியர்கள் கைகொடுத்தல்.பிறமுகரின் கருணையால் வேலை கிட்டும் சந்தர்ப்பம் உண்டாகும். |
| துலாம் | பிதாவின் நோய் குணமடைவதனால் வெளியூர் பயணத்திற்கான ஏற்பாட்டினை மேற்கொள்ளல். இனிமையான நினைவுகளை மீட்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டு மனம் ஆனந்தத்தில திளைக்கும். |
| விருச்சிகம் | மறைமுக எதிரிகளினால் உங்கள் பணிக்கு தொல்லைகள் ஏற்படலாம். கருத்து வேறுபாடுகள் மறைந்து தம்பதியருக்குள் ஒற்றுமை மேலோங்கும். |
| தனுசு | நண்பனின் கபடத்தனத்தைக் கண்டதால் உறவினை முறித்துக் கொள்ளல். பிணை மற்றும் பொறுப்புக்கு துணை போவதை மனதாலும் எண்ண வேண்டாம். |
| மகரம் | கௌரவமும் பெயரும் கெட்டுப்போகும் சம்பவம் பற்றி எச்சரிக்கையாக இருங்கள்.கொடுத்த கடனை மீளப்பெற பகீரதப்பிரயத்தனம் ஏற்படும். |
| கும்பம் | தொலைக்காட்சிப்பெட்டியினை பழுதாக்கியதினால குடும்பத்தில் சச்சரவு தோன்றல்.மனுச்சமர்பித்தும் இட மாற்றம் இரத்துச் செய்யாமையினால் துயர் ஏற்படல். |
| மீனம் | துணிவுடன் பிரச்சினையை எதிர்கொண்டதால் காரியசித்தி ஏற்படல். புதிய இடத்தில் தொழிலை ஆரம்பிக்க நிலையமொன்றை தேட வெளிக்கிடல். |

# ஜேர்மன் தமிழ்ச்சங்கம் நடத்திய சிறுகதைப் போட்டி முடிவுகள்

ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம் இலங்கையில் வாழ் கின்ற தமிழ் எழுத்தாளருக்காக நடாத்திய 2014 ஆம் ஆண்டுக்கான சிறுகதைப்போட்டி முடிவுகள் ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவர் வ.சிவ ராசா செயலாளர் பொன்.புத்தி சிகாமணி ஆகியோரினால் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

பரிசுபெறும் சிறுகதைகள் முதலாமிடம் - வேறையாட்கள் பாலகிருஸ்ணன் அனோஜன் அரியாலை யாழ்ப்பாணம் (பரிசு 25 ஆயிரம்), இரண்டாமிடம் பண் பெனப்படுவது - எஸ்.ஐ. நாகூர் கனி , கொழும்பு 12 (ரூபா15 ஆயிரம்.) , மூன்றாமிடம் வீட்டில் - அ.வாமுஹ் சீன் பாலையூற்று , திருமலை. (ரூபா 10 ஆயிரம்.) , ஆகியோர் பெற்றுள்ளார்கள். மேலும் பன்னிரண்டு சிறுகதைகள்.ரூபா 5ஆயிரம் பரிசு தொகையினை பெறுவோர் வபரம் வருமாறு

கலைந்து போன கனவுகள் -திருமதி அனுராதா பாக்கியராசா களுவாஞ்சிக்குடி, பிராயச்சித்தம்- க.கோபாலபிள்ளை தெகிவளை .கொழும்பு. , ஏன் அழுதான் - மு.பு.முகம்மது ராபி பாலையூற்று திருமலை. குஞ்சியப்பு - நடராசா.இராமநாதன் அல் வாய் வடக்கு.அல்வாய், சருகை வேட்டி -சௌந்தரராஜன்.லெனாட் , தாழங்குடா. ஆரையம்பதி. அறிவுக்குமனசில்லை - சண்முகலிங்கம். ராஜீசன் பெரியகல்லாறு, மட்டக்களப்பு. , முதமையெனும் பூங்காற்று - மு.சிவலிங்கம் கொட்டகலை, கனவுகளின் சமாதி - பி.வேதநாயகம், தும்பளை தெற்கு பருத்தித் துறை, காசிருந்தால் வாங்கலாம் - சின்னராஜா உதயகுமார். வல்வெட்டித்துறை., கூடு - கஜன். அமிர்தலிங்கம் , துணுக்காய். , பூமிகா காத்திருக்கிறாள் - பசுபதி.உதயகுமார் . அளவெட்டி. வாடகைவீடு - யூலியஸ் விஜ யகுமார் .விஜய சங்கர் வேப்பன் குளம் வவுனியா ஆகியோர் வெற்றி பெற்றுள்ளார்கள். (63)

# வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும் புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

## நரேந்திர மோடியின் ஆட்சியினூடாக
## இந்தியா - அமெரிக்கா உறவு வலுப்பெறும்

### அமெரிக்க வெளியுறவுத்துறை இணை அமைச்சர் தெரிவிப்பு



பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் இந்திய-அமெரிக்க நாடுகளுக்கு இடையிலான உறவு வலுப்பெறுவதுடன், உலக அரங்கில் இந்தியாவின் முக்கியத்துவம் புதிய உச்சத்தை எட்டும் என்று தெற்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகளுக்கான அமெரிக்க வெளியுறவுத்துறை இணை அமைச்சர் நிஷா தேசாய பிஸ்வால் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, வொஷிங்டனில் செய்தியாளர்களிடம் நிஷா தேசாய் பிஸ்வால் கூறியதாவது,

இந்தியாவில் 30 ஆண்டுகளுக்குப் பின்னர் வலிமையான, உறுதியான ஆட்சிக்கு மக்கள் தீர்ப்பளித்துள்ளனர்.

இந்தியாவும், அமெரிக்காவும் இணைந்து செயற்பட ஏராள மான வாய்ப்புகள் உள்ளன. இந்தக் கூட்டு செயற்பாட்டின் மூலம் இரண்டு நாடுகளும் பயன்பெறுவதுடன், உலக நாடுகளையும் முன்னேற்றப் பாதைக்கு இட்டுச்செல்லும் திறன் ஏற்படுகிறது.

தான் என்ன செய்ய வேண்டும் என்ற நிகழ்ச்சி நிரலை மோடி வகுத்துக் கொள்வார் என்று நம்புகிறோம். அவரை வரவேற்க ஆவலுடன் இருக்கிறோம்.

முதல் பயணமாக ஜப்பான், சீனா அல்லது வங்க தேசத்திற்கு மோடி செல்வார் என்றும் முதல் பயணமாக அமெரிக்கா செல்லமாட்டார் என்றும் கூறப்படுவது சரியல்ல.

அப்படியே அவர் அந்நாடுகளுக்குச் சென்றாலும் அது எங்களுக்கு கவலை அளிக்காது.

பொருளாதார வாய்ப்புகளை பெருக்கி, அனைத்து இந்தியர் களையும் ஒன்றிணைக்கும் வாய்ப்பாக இந்தத் தேர்தல் தீர்ப்பு அமைந்திருப்பதாக நம்புகிறோம் என்றார்.

## கடத்தப்பட்ட மாணவிகளின் இருப்பிடம் கண்டுபிடிப்பு

### நைஜீரிய பாதுகாப்பு தரப்பு தகவல்

தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு ஒழித்து வைத்திருக்கும் சிறுமிகளின் இருப்பிடத்தை கண்டுபிடித்துள்ளதாக நைஜீரிய பாதுகாப்புத் தரப்பு தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் நைஜீரியாவில் போர்னோ மாகாணத்தில் சிபோக் என்ற இடத்தில், பாடசாலை மாணவிகள் 276 பேரை போகோ ஹரம் தீவிரவாதிகள் கடத்திச் சென்று மறைவிடத்தில் சிறைவைத்தனர்.

அவர்களை "செக்ஸ்" அடிமைகளாக விற்க போவதாக மிரட்டல் விடுத்தனர். இது உலக மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. நைஜீரிய இராணுவத்தால் அவர்களை கண்டுபிடிக்க முடியவில்லை. அதைத் தொடர்ந்து அவர்களை மீட்க அமெரிக்கா இராணுவத்தை அனுப்பியுள்ளது. அந்நாட்டு அரசும் மாணவிகளின் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க இராணுவத்தை அப்பணியில் ஈடுபடுத்தியது.

தற்போது மாணவிகளை தீவிரவாதிகள் எங்கு மறைத்து வைத்திருக்கிறார்கள் என்பதை இராணுவம் கண்டுபிடித்துவிட்டதாக அந்நாட்டு பாதுகாப்புத்துறை தலைவரான ஏர் மார்ஷல் அலெக்ஸ் பாடேஹ் தெரிவித்துள்ளார்.

விரைவில் மாணவிகள் மீட்கப்படுவார்கள் என அலெக்ஸ் பத்திரிக்கையாளர்களிடம் தெரிவித்தார்.

உலகச் செய்திகள்

## மாறக்கூடிய இறக்கைகளை விமானத்தில் உருவாக்க ஆராய்வு

காற்றின் வேகத்திற்கு ஏற்ப பறவைகள் தங்களின் இறக்கைகளைத் தாங்கள் பறப்பதற்கு ஏற்றாற்போல் மாற்றிக்கொள்கின்றன. இதனையொத்த அமைப்பினை விமானங்களுக்கும் உருவாக்கி அவற்றின் திறனை அதிகரிப்பது குறித்த ஆராய்ச்சியினை விஞ்ஞானிகள் மேற்கொண்டுள்ளனர்.

ஐரோப்பாவின் நுண்ணறிவு விமான கட்டமைப்புக்கள் திட்டம் ஆறு சதவிகித எரிபொருள் நுகர்வைக் குறைத்து விமானங்கள் எளிதாக இறங்கும் முயற்சிகளை ஒருங்கிணைக்க முயனறு வருகின்றது.

மேலும் ஆண்டுதோறும் 2.2 பில்லியன் மக்கள் ஆய்வு, வர்த்தகம் அல்லது சுற்றுலா நோககங்களுக்காக விமானப் பயணங்களை மேற்கொள்வதால் விமான நிலைய நெருக்கடிகளும் உச்சபட்ச அளவைத் தொட்டுள்ளன. ஜெட் விமானங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதும் காற்று மண்டலத்தில் மாசு அளவை அதிகரித்து வருகினறது.



இந்த மாசு கட்டுப்பாட்டைக் குறைக்கும் முயறசியின் ஒரு கட்டமாகவே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. காற்று வேகத்தினை அனுசரித்து விமானம் தரையிறங்கும் தொழில்நுட்பம் மேம்படுத்தப்படவேண்டும் என்று செம்நிட்சில் உள்ள எலக்ட்ரோனிக் நானோ அமைப்பிற்கான பிரான்ஹோபர் நிறுவனத்தில் ஆராய்ச்சியாளராக செயற்பட்டு வரும் மார்டின் ஸ்கல்லர் தெரிவித்துள்ளார்.

## பணியைத் தொடங்கினார் மோடி

(புதுடில்லி)

நாட்டின் பதினைந்தாவது பிரதமராக தனது முதல்நாள் பணியை நரேந்திர மோடி நேற்று தொடங்கினார்.



முன்னதாக, பிரதமரின் அலுவலகம் அமைந்துள்ள "சவுத் பிளாக்" கட்டடத்துக்கு பலத்த பாதுகாப்புடன் காரில் வந்திறங்கிய பிரதமர் மோடியை புதிதாக நியமிக்கப்பட்ட பிரதமரின் முதன்மைச் செயலாளர் நிருபேந்திரா மிஷரா மற்றும் உயரதிகாரிகள் வரவேற்றனர்.

தனது அலுவலகத்துக்குள் நுழைந்தவுடன் அங்கு வைக்கப்பட்டுள்ள மகாத்மா காந்தியின் புகைப்படத்தை வணங்கிய மோடி, பிரதமர் நாற்காலியில் அமர்ந்து, தனது முதல் நாள் பணிகளை கவனிக்கத் தொடங்கினார்.

## ஜப்பான் - வடகொரியா முக்கிய பேச்சுவார்த்தை

(ஸ்டாக்ஹோம்)

அரசியல் உலகில் எதிர் துருவஙகளாக விளங்கும் ஜப்பானும், வடகொரியாவும் சுவீடன் தலைநகரான ஸ்டாக்ஹோமில் நேற்று முன்தினம் மூன்று நாள் பேச்சுவார்த்தையைத் தொடங்கின.

ஸடாக்ஹோம் பேச்சுவார்த்தை குறித்து கருத்து தெரிவித்த ஜப்பானிய வெளியுறவுத்துறை அமைச்சர் பியுமியோ கிஷிடா, இந்த கடத்தல் பிரச்சினை தங்கள் நாட்டின் மிகப் பெரிய கவலைகளில் ஒன்று என்று குறிப்பிட்டுள்ளார். இதற்கான சாதகமான பதிலைப் பெற விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பீஜிங்கில் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் எழுப்பப்பட்ட பிரச்சினைகளில் முன்னேற்றம் குறித்து இந்த மூன்று நாட்களில் பேச விரும்புவதாக ஜப்பானின் முக்கிய பிரதிநிதியான ஆசியா மற்றும் கடல் விவகாரத்துறையின் பொது இயக்குனர் ஜூநிச்சி தாரா கூறினார்.

இரு நாடுகளுக்கும் ஒத்த விருப்பம் உள்ள பல்வேறு விரிவான பிரச்சினைகளில் வெளிப்படையாகவும், தீவிரமாகவும் விவாதித்து முடிவுகளை மேற்கொள்ள முயற்சி செய்வதாகவும் அவர் தெரிவித்தார்.

## சந்திரசேகரராவ் இராஜினாமா

(புதுடில்லி)

தெலுங்கானாவில் டி.ஆர். எஸ்.கட்சி தலைவர் சந்திரசேகர்ராவ் கஜ்வேல் சட்டசபை தொகுதியிலும், மெடக் நாடாளுமன்ற தொகுதியிலும் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

தெலுங்கானாவில் டி.ஆர்.எஸ்.கட்சி ஆட்சியை பிடித்ததையொட்டி அம்மாநில முதல்மந்திரியாக சந்திரசேகரராவ் ஜூன் 2 ஆம் திகதி பதவியேற்க இருக்கிறார்.

இதையடுத்து அவர் நேற்று மெடக் எம்.பி.பதவியை ராஜினாமா செய்தார். தனது இராஜினாமா கடிதத்தை நாடாளுமன்ற செயலக அதிகாரிக்கு அனுப்பிவைத்தார்.

இதையடுத்து மெடக் நாடாளுமன்ற தொகுதி விரைவில் இடைத்தேர்தலை சந்திக்க இருக்கிறது.

## சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணைக்கு தடைவிதிப்பு

முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்து குவிப்பு வழக்கு விசாரணைக்கு ஜூன் 6 ஆம் திகதி வரை உச்ச நீதிமன்ற இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.

பெங்களூர் தனி நீதிமன்றத்தில் நடந்து வரும் ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கில் தொடர்புடைய லெக்ஸ் பிராபர்ட்டீஸ் நிறுவனத்தின் சொத்துக்களை முடக்கியதை எதிர்த்து அந்நிறுவனத்தின் இயக்குனர் சிவகமார் சார்பில், உச்ச நீதிமன்றத்தில் கடந்த வாரம் ஒரு மனுத்தாக்கல் செய்யப்படடது.

அதில், லெக்ஸ் பிராப்பர்ட்டீஸ் சொத்து முடக்கம் தொடர்பாக பெங்களூரில் நடந்து வரும் பிரதான வழக்கு முடியும் வரை, சொத்துக் குவிப்பு வழக்குக்கு தடை விதிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. இந்த மனுவை உச்ச நீதிமன்றம் கடந்த மாதம் தள்ளுபடி செய்தது.

இதையடுத்து, ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணைக்கு நீதிபதிகள் வரும் யூன் 6 ஆம் திகதிவரை தடை விதித்தனர். மேலும், சொத்துக் குவிப்பு வழக்கில் தொடர்புடைய நிறுவனங்கள் மீதான சிவில் வழக்குகள் விசாரணைக்கு எந்த தடையும் இல்லை.

அந்த வழக்குகளை தனி நீதிமன்றம் தொடர்ந்து விசாரிக்கலாம் என்றும், ஜெயலலிதா மனு மீது தமிழக ஊழல் தடுப்பு பிரிவு (டி.ஜி.பி) பதில் மனுத் தாக்கல் செய்யவேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவில் கூறியுள்ளனர்.

### சீசன்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால், தத்தமது நாடுகளில் அகதி அந்தஸ்து கோரும்போது இவர்களில் பலர், தம்மால் இலங்கையில் இருக்க முடியாமல் போய்விட்டதென்றும், அரசு மற்றும் விடுதலைப்புலிகளினால் தமக்கு அச்சுறுத்தல் இருந்ததென்றும் கூறியிருப்பார்கள். அவர்கள் அப்படி கூறியதுதான் தமிழீழ விடுதலைப்போராட்டம் தோற்றுப்போக காரணமல்ல. அப்படி கூறுவதால், விடுதலைப்போராட்டத்திற்கு எந்த நேரடி சிக்கலுமில்லை என்ற மனச்சம்மதத்துடன் அதனை கூறியிருக்க கூடும். யார் கண்டது, அன்று யாழ். வெசாக் வலயத்திற்கு சென்றவர்கள் கூட இதேவிதமான மனச்சம்மதத்துடன், சென்றிருக்கக்கூடும்.

இங்கே குறிப்பிடும் மனநிலை ஏதோ மே 2009 இற்குப் பிறகு உருவானதல்ல என்பதற்கு மேலே சொன்னவை ஆகச்சிறந்த உதாரணங்கள். விடுதலைப்புலிகள் இருந்த காலத்திலும் அதுதான் இருந்தது. அவர்கள் இல்லாமல் போன பின்னரும் அதுதான் இருக்கின்றது. விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில், மிகச்சிறிய அளவிலென்றாலும் செயற்பாட்டாளர்கள் இருந்து அனைத்தையும் ஈடு செய்து கொண்டிருந்தனர். இப்பொழுது அப்படியல்ல, அனைத்து செயற்பாடும் இணையத்திற்குள் முடங்கிவிட்டது.

ஆகவே தோழர்களே... இனிப் பொழுதை வீணடிக்க தேவையில்லை. இன்னும் மெழுகுவர்த்திகளையோ, மே 18 என எழுதிய படங்களையோ முகப்பு படங்களாக வைத்திருக்க தேவையில்லை. மாற்றி விடலாம். நவம்பர் வரைக்கும் அறச்சீற்றத்துக்கு அல்வாகொடுத்துவிட்டு அமலாபால் கல்யாண அலுவல்களைக் கவனிக்கலாம்? சுப்பிரமணிய புரம் சுவாதி கூட கல்யாணத்துக்கு தயாராம் (எவ்வளவு சோகத்தைத் தான் தமிழன் தாங்குவான்!)

# தரம் 3-II இற்குள் இணைக்கக்கோரி

# ஆசிரிய உதவியாளர்கள் ஆர்ப்பாட்டம்




(யாழ்ப்பாணம்)

ஆசிரிய உதவியாளர்கள் தம்மை இலங்கை ஆசிரியர் சேவை தரம் 3-II இற்குள் உள்வாங்குமாறு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

இவ் ஆர்ப்பாட்டம் நேற்று யாழ். மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நடாத்தப்பட்டது.

இதுதொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தொண்டர் ஆசிரியர்களாக நீண்ட காலம் கடமையாற்றிய எம்மை ஆசிரிய உதவியாளர்களாக நியமிக்க நடவடிக்கை எடுத்தவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அந்தவகையில் அமைச்சருக்கு நாம் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

எங்களில் சுமார் 40 வீதத்தினர் 50 வயதினை அண்மித்தவர்களாகவும் குடும்பச் சுமைகள் நிறைந்த குடும்பத்தலைவர்களாகவும் உள்ளோம். எமக்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தில் தெரிவித்தவாறு எங்களை ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கும் போது எமக்கு 55 வயதை அண்மித்துவிடும். இவ்வித நிலை தோன்றினால் கடந்த இருபது வருட ஆசிரியர் சேவைக்காக ஓய்வூதியம் கூட பெறமுடியாத நிலைக்கு உட்படுவோமென மிகுந்த அச்சமுறுகின்றோம்.

மூவாயிரம் ரூபா வேதனத்தை இரட்டிப்பாக மாற்றுவதற்கு வழியேற்படுத்தியதும் அமைச்சர் டக்ளஸ் என்பதனை நாங்கள் நன்கு அறிவோம். எம்போன்ற பலர் இலங்கையின் வெவ்வேறு பிரதேசங்களிலும் நியமனம்பெற்றபோது அவர்கள் நேரடியாக இலங்கை ஆசிரியர் சேவை 3-II இல் நியமனம் பெற்றதை தங்களுக்கு பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

எனவே ஆசிரிய உதவியாளர்களாகிய நாங்கள் எங்களுடைய ஆசிரிய உதவியாளர் நியமனத்தை அதே திகதி 12.11.2009 தொடக்கம் ஆசிரியர் சேவைக்கு உட்பட்டதாக மாற்றித்தர பொருத்தமான நடவடிக்கையை எடுத்துதவுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரிய உதவியாளர்களை சந்தித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எதிர்வரும் அமைச்சரவைக்கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பாக அமைச்சரவைப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு ஆசிரிய உதவியாளர்களுக்கு தீர்வு பெற்றுத்தரபடுமென உறுதியளித்தார்

இவ்வாறு தம்மை ஆசிரியர் சேவை தரம் 3-II இற்குள் இணைத்தால் தாம் கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் பணியாற்றத் தயாரென ஆசிரிய உதவியாளர்கள் தெரிவித்தனர்.

(25)

### ஆலய...

கவனத்திற்கு கொண்டு வந்தனர். அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் கொடிகாமம் திடீர் மரண விசாரணை அதிகாரி சி. சி.இளங்கீரன் முன் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார். திடீர் மரண விசாரணை அதிகாரி பொலிஸாருடன். சம்பவ இடத்திற்குச் சென்று பர்வையிட்டு சடலத்தை சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு பொலிஸாரைப் பணித்ததுடன் அங்கு விசாரணைகளை நடத்தி வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி மூலம் பிரேத பரிசோதனை செய்த பின்னர் உறவினரிடம் சடலத்தைக் கையளிக்குமாறும் பொலிஸாரைப் பணித்தார்.

### இலங்கைத்...

அந்தப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இலங்கையில் உள்ள தமிழர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதில் பிரதமர் நரேந்திர மோடி உறுதிபூண்டுள்ளதால், அது குறித்து யாரும் அஞ்சத் தேவையில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

# வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் 99 வீதமானோருக்கு மின்சாரம்

வடக்கின் வசந்தம் திட்டத்தில் 99 வீதமானவர்களுக்கு எதிர்வரும் டிசம்பர் மாதத்துடன் மின்சார விநியோகம் பூரணப்படுத்தப்படுமென இலங்கை மின்சார சபையின் வடக்கின் வசந்த திட்ட அதிகாரி தெரிவித்தார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றபோது,

மின்சாரம் தொடர்பில் ஒருங்கிணைப்புக்குழுத்தலைவர் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா வினாவினார். அதன்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2009 ஆம் ஆண்டின் பின்னர் வடக்கின் வசந்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் வேறுபாடின்றி மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

அனைவருக்கும் மின்சாரம் என்ற தொனிப் பொருளில் வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் மின் விநியோகம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அந்த வகையில், யாழ். மாவட்டத்தில் ஒருஇலட்சத்து 85 ஆயிரம் பேருக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் இன்றும் 27 ஆயிரம் பேருக்கு மின்சாரம் வழங்கவேண்டுமென்றும் தெரிவித்தார்.

அதேவேளை, பிரதேச சபைகளுக்குட்பட்ட வீதிகளில் பொருத்தப்பட்டிருக்கும் மின் விளக்குகளிற்கான கட்டணம் 940 ரூபா. எனவே இந்தக் கட்டணத்தை பிரதேச சபைகளினால் கட்ட முடியாமல் இருப்பதாகவும் பிரதேச சபை செயலாளர்கள் தெரிவித்தனர்.

இந்தக் கட்டணம் தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் பிரதேச சபை செயலாளர்களை கலந்துரையாடுமாறு அவர் கூறினார். (25)

# விபத்தில் காயமடைந்த மற்றைய நபரும் மரணம்

வவுனியா, நெடுங்கேணிப் பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த பட்டிக்குடியிருப்பைச் சேர்ந்த கோ.ஜெயரூபன் என்பவர் திங்கட்கிழமை இரவு மரணமடைந்ததாக அவ் வைத்தியசாலையின் விபத்துக்கள் பிரிவு தெரிவித்துள்ளது.

மேற்படி பிரதேசத்தில் கடந்த திங்கள் பகல் கன்டர் ரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதால் ரா.ஆனந்தகுமார், கோ.ஜெயரூபன் ஆகிய இருவரும் காயமடைந்தனர்.

இவர்கள் இருவரும் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்தனர். இந்நிலையில், ரா.ஆனந்தகுமார் அன்றையதினம் மாலை மரணமடைந்தார் இரவு ஜெயரூபன் உயிரிழந்தார். (40)

### ஆசிரியையை...

நேற்றுமுன்தினம் காலை தொண்டைமானாறு காட்டுப்புலம் பகுதியிலுள்ள தனது வீட்டிலிருந்த பாடசாலைக்குச் சென்றவர் மாலை ஆகியும் வீடு திரும்பவில்லையென சகோதரன் தனது முறைப்பாட்டில் தெரிவித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வல்வெட்டித்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### ஒருங்கிணைப்பு....

செயலர்கள் இராணுவ அதிகாரிகளுக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்பு தொடர்பில் வினவினார்.

அதற்கு அரசாங்க அதிபர் பதிலளிக்க முற்பட்ட வேளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ்பிரேமச்சந்திரன் குறுக்கிட்டுப் பேசினார்.

அவ்வாறு குறுக்கிட்டு பேசும் போது அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலர்கள், இராணுவத்திற்கு ஆட்களைச்சேர்ப்பவர்கள் அல்ல என்று கூறினார்.

அதன்போது, வடமாகாண கால்நடை அமைச்சர் அரசாங்க அதிபருடன் கதைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அவர் கேள்விகளை கேட்கும் போது அரச அதிபர் பதிலளித்தார்.

இனி, அது பற்றி கதைப்பதற்கான சந்தர்ப்பம் இல்லை. தேவையற்ற விடயங்களை கதைக்க வேண்டாமென்றும், அவ்வாறு கதைப்பதாக இருந்தால், கூட்டத் தொடரில் கதைக்கவேண்டிய விடயங்களை தொடர்ச்சியாக கதைப்போம் என யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பதிலளித்தார்.

அவ்வாறு கூறிய போதிலும் தமிழத்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இராணுவத்திற்கு ஆட்களைச் சேர்ப்பதற்கு, உதவி செய்கின்றீர்களா என கேள்வி எழுப்பினார்.

மீண்டும் ஒருங்கிணைப்பு குழுத்தலைவரான அமைச்சர் பதிலளிக்கையில், யாழ். மாவட்டத்தின் அரச பிரதிநிதி என்ற வகையில் இராணுவத்தினருடன் கதைப்பதற்கு நான் அரசாங்க அதிபருக்கு அனுமதி வழங்கியுள்ளேன்.

அந்தவகையில், தேவையற்ற விடயங்களை கதைக்க வேண்டாமென்றும், அவரின் அதிகாரத்தினை துஷ்பிரயோகம் செய்வதற்கு ஒரு போதும் அனுமதிக்க முடியாது என பதிலளிக்க சுரேஷ் பிரேமச்சந்திரன் வாய் அடைத்து நின்றார். அதன்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மண்டையன் குழுத் தலைவர் விடுதலைப்புலிகள் இராணுவத்தினருக்கு தமது உறுப்பினர்கள் தொடர்பாக கணக்கு காட்டி பணம் பெற்றது ஞாபகம் இல்லையா என்றும் சபையில் கேள்வியெழுப்ப சுரேஷ் பிரேமச்சந்திரன் அவ்விடத்தை விட்டு மெதுவாக நகர்ந்து சென்றார். (25)

### நாடுகடத்தப்பட்ட....

முல்லைச்செல்வன் என்று அழைக்கப்படும், சுந்தரலிங்கராஜா குசாந்தன் (வயது 45), கிருபா என்று அழைக்கப்படும், நல்லூரைச் சேர்ந்த மகாதேவன் கிருபாகரன் (வயது 42), நல்லூரைச் சேர்ந்த கிருபா எனப்படும், செல்லத்துறை கிருபானந்தன் (வயது 39) ஆகியோரே மலேசியாவில் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இவர்கள் புலிகளின் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என வாக்கு மூலம் அளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் நிறைவடைந்த நிலையில் இவர்கள் மலேசியாவுக்கு தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸ் ஊடக பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, இராணுவத் துடனான மோதலில் விடுதலைப் புலிகளின் தலைவரான கோபிக்கு தப்பிச் செல்வதற்கான உதவிகளை வழங்கிய இரண்டு பேர் நேற்று வவுனியாவில் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

மார்ச் மாதம் 6 ஆம் திகதிக்குப் பின்னர் விடுதலைப் புலிகளை மீள கட்டியெழுப்புவதற்கு முயற்சி செய்த குற்றச்சாட்டில் 77 பேர் கைது செய்யப்பட்ட நிலையில் அவர்களின் 46 பேர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஆசிரிய...

இதன்போது கருத்துரையாற்றிய அமைச்சர் ஆசிரியர் உதவியாளர்களாக இருப்போரை நிரந்தர நியமனத்திற்குள் உள்வாங்கும் பொருட்டு உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

அதன்பிரகாரம் 2009 ஆம் ஆண்டு ஆசிரியர் உதவியாளர்களாக நியமனப் பெற்றதிலிருந்து நிரந்தர நியமனத்திற்குள் தம்மை உள்வாங்குமாறு ஆசிரிய உதவியாளர்கள் விடுத்திருந்த கோரிக்கைக்கு அமைவாக இந்நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

ஆசிரிய உதவியாளர்களுக்கு முதற்கட்டமாக 3,000 ரூபாவும் பின்னர் 6,000 ரூபாவும் தற்போது 10,000 ரூபாவுமாக மாதாந்த கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது பெருமுயற்சியின் பயனாக தொண்டர் ஆசிரியர்கள் முதன்முதலாக யாழ். மாவட்டத்திலேயே நிரந்தர நியமனத்திற்குள் உள்வாங்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

முன்பதாக பிரதான வாயிலில் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு நின்றிருந்த ஆசிரிய உதவியாளர்கள் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திற்காக மாவட்ட செயலகத்திற்கு வருகை தந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்துக் கலந்துரையாடி, தமது கோரிக்கையினை முன்வைத்திருந்தனர். (25)

### ஜனாதிபதி...

குறித்தும், இந்தியாவின் வளர்ச்சி, உதவித் திட்டம் குறித்தும் பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்பு குறித்தும் இரு நாட்டு தலைவர்களும் கலந்துரையாடினர். குறிப்பாக 500 மெகா வாட் சம்பூர் நிலக்கரி மின் திட்டம் தொடங்கப்படுவது தொடர்பிலும் இரு நாடுகளுக்கும் இடையிலான இணைப்புகளை அதிகப்படுத்துவது தொடர்பிலும் இந்தியப் பிரதமர் விருப்பம் தெரிவித்தார். இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் இரு நாட்டு தலைவர்களும் வலியுறுத்தினர்.

மேலும் தமிழர் பகுதிகளில் மறுவாழ்வுப் பணிகளை துரிதப்படுத்துமாறும், தமிழர்களுக்கு அதிகாரம் அளிக்கும் 13ஆவது சட்டதிருத்த பிரிவை அமுல்படுத்துமாறும் பிரதமர் வலியுறுத்தினார்.

அதே சமயம் இலங்கை உடன் அனைத்து துறைகளிலும் இந்தியாவின் ஒத்துழைப்பு தொடரும் என்றும் பிரதமர் மோடி உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, பிரதமர் மோடியை இலங்கை வருமாறு இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்தார். அதை ஏற்று இலங்கை வர பிரதமர் மோடி சம்மதம் தெரிவித்ததாகவும் சுஜதாசிங் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தச் சந்திப்பில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், மீள்கட்டுமானம் மற்றும் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர் மோடிக்கு எடுத்து விளக்கினார்.

இந்தச் சந்திப்பின்போது வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், கிராமிய கைத்தொழில் அமைச்சர் அறுமுகம் தொண்டமான்,வெளிவிவகார அமைசசின் கண்காணிப்பு எம்.பி. சஜின் டி வாஸ், குணவர்த்தன, யாழ்.மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஜனாதிபதியின் செயலர் லலித்வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஷேனுகா செனிவிரட்ன, மற்றும் இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் ஆகியோர் உடனிருந்தனர்.

# வெளிநாடுகளில் பணிபுரிவோரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்

## அரசுக்கு கூறுகிறது ஐ.நா.



வெளிநாடுகளில் பணியாற்றி வரும் இலங்கையர்களின் பாதுகாப்பை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டுமென ஐக்கிய நாடுகள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது. வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள்ளை சிறந்த முறையில் கண்காணிப்பதற்கு ஓர் பொறிமுறையை உருவாக்க வேண்டுமென ஐக்கிய நாடுகள் அமைப்பின் வெளிநாட்டுப் பணியாளர்களின் மனித உரிமைகளுக்கான விசேட பிரதிநிதி பிரான்கோயிஸ் கிரிபியாயு தெரிவித்துள்ளார்.

தொழில் வாய்ப்பு வழங்கும் நிறுவனங்கள், துணை முகவர்கள் போன்றவர்கள் தொடர்பில் தெளிவான கொள்கையொன்று உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுமார் 1.8 மில்லியன் இலங்கையர்கள் வெளிநாடுகளில் வாழ்ந்து வருவதாகத் தெரிவித்துள்ளார். உரிய வசதிகளின்றி உரிய சம்பளம் வழங்காது வெளிநாடுகளில் தொழில் வாய்ப்பு பெற்றுச் செல்லும் பணியாளர்கள் பாதிக்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பெண்கள், இளைஞர்கள் மற்றும் கிராம மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தக் கூடிய திட்டங்களை இலங்கை அரசாங்கம் உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். வெளிநாடுகளில் இலங்கைப் பணியாளர்கள் துன்புறுத்தப்படுவதனை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

# முதலாவது அரையிறுதி இன்றைய தினம்

கொல்கத்தா - ஈடன்காடன் மைதானத்தில் நேற்று நடைபெறவிருந்த முதலாவது ஐ.பி.ல் அரையிறுதிப் போட்டி மழை காரணமாக இன்றைய தினத்திற்கு பிற்போடப்பட்டுள்ளது.

நேற்றைய அரையிறுதிப் போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் மற்றும் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகள் மோத விருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இளைஞனின் சடலம் மீட்பு

வவுனியா குடியிருப்பு குளத்தில் இருந்து நேற்றுக் காலை இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குளத்தின் செடிகள் நிறைந்த பகுதியில் இருந்து சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.



இச்சடலம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இணையத்தள தடை அடிப்படை உரிமை மீறல்

## மனித உரிமை ஆணைக்குழு தெரிவிப்பு

இலங்கையில் இயங்கும் சில இணையத்தளங்களை தடை செய்தமையானது, நாட்டின் அரசியல் அமைப்பில் மக்களுக்கு உறுதிப்படுத்தப் பட்டுள்ள அடிப்படை உரிமையை மீறும் செயல் எனக் கருத முடியும் என இலங்கை மனித உரிமை ஆணையகத்தின் தலைவர் பிரதீபா மாஹானாமஹேவா தெரிவித்துள்ளார்.

இணையத்தளங்களை தடை செய்ததன் மூலம் அரசியல் அமைப்பின் 14 (1) (அ) சரத்தில் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தை மீறும் செயல்.

பல செய்தி இணையத்தளங்களை அரசாங்கம் தடை செய்துள்ளமைக்கு எதிராக இணையத்தளங்களுடன் தொடர்பு டைய ஊடகவியலாளர்கள் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் பல முறைப்பாடுகளை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புலிகளால் சுட்டுவீழ்த்தப்பட்ட ஹெலியின் பாகங்களே மீட்பு



முல்லைத்தீவு, சாலைக் கடற்பரப்பிலிருந்து கடற்படையினரால் மீட்கப்பட்ட ஹெலிகொப்டரின் பாகங்கள், ரஷ்யாவினால் தயாரிக்கப்பட்ட எம்.ஐ 24 ரக தாக்குதல் ஹெலிகொப்டர் ஒன்றினுடையது என விமானப்படை உறுதி செய்துள்ளது.

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான இந்த ஹெலிகொப்டர், 1997ஆம் ஆண்டு மார்ச் மாதம், ரஷ்ய விமானிகள் இருவர் உட்பட 8 விமானிகளுடன் காணாமற்போனது என்றும் விமானப்படை கூறியுள்ளது.

சாலைக் கடற்பரப்பிலிருந்து சுமார் ஒரு கடல் மைல் தூரத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட இந்த ஹெலிகொப்டரின் பாகங்களை ஆய்வு செய்யுமாறு விமானப்படைத் தளபதி கோலித்த குணதிலக்க நியமித்த விசேட அதிகாரிகளினால் இந்த ஹெலிகொப்டர் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமாக எம்.ஐ 24 ரகத்தைச் சேர்ந்த இந்த விமானம் சி.எச்.614ஆம் இலக்கத்தைச் சேர்ந்ததாகும் என அவ்வதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

இந்த ஹெலிகொப்டர், விடுதலைப் புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுவதாக விமானப்படை தெரிவித்தது.

இந்த ஹெலிகொப்டரில், விமானப்படையைச் சேர்ந்த விமானிகளான மேஜர் வோவா மில்லர் (ரஷ்யா), மேஜர் வை. ராமனொவ் (ரஷ்யா), ஏ.மலலசேகர (இலங்கை), எல்.ஏ.சி. அருணசாந்த (இலங்கை), எல்.ஏ.சி.சமரகோன் (இலங்கை), பி.எச்.ஏ.சேனசிங்க (இலங்கை), கோப்ரல் நந்தசேன (இலங்கை) மற்றும் எல்.ஏ.சி.லியனகே ஆகியோரே இறுதியாகப் பயணித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் இருவரின் உடல்கள் மாத்திரமே அக்காலப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.

பலாலி விமானப்படைத் தளத்திலிருந்து ஹிங்குரங்கொட விமானப்படைத் தளத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த போதே இந்த ஹெலி கொப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளதாக விமானப்படை மேலும் தெரிவித்தது.

# மோ.சைக்கிள் விபத்து; மன்னார் வாசி படுகாயம்

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் ஒன்று சங்குப்பிட்டி பாலத்திற்கு அண்மையில் உள்ள வளைவில் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்து மயங்கிய நிலையில் இருந்த இவரை வீதியால் சென்றவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்த்தனர். பின்னர் இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்பிவைக்கப்பட்டார். நேற்று மதியம் இடம்பெற்ற இந்த விபத்தில் நட்டாங்கண்டல், அடம்பன் மன்னாரைச் சேர்ந்த எஸ்.சி.போல்ராஜ் என்பவரே படுகாயமடைந்தவராவார்.

# மாத்தளை எலும்புகளில் சித்திரவதை அடையாளம்

(கொழும்பு)

மாத்தளை மனிதப் புதைகுழியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளை ஆராய்ந்ததில், இறந்தவர்கள் மரணமடைவதற்கு முன் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று குருநாகலை சட்ட வைத்திய அதிகாரியினால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட புதைகுழியிலிருந்து 153 மண்டை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டிருந்ததாகவும், அவற்றில் சில மண்டையோடுகளுக்குள் இரும்பு ஆணிகள் இருந்ததாகவும் சட்ட வைத்திய நிபுணரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என காணாமற்போனோர் சார்பில் நீதிமன்றில் ஆஜரான வழக்கறிஞர் சுனில் வடகள தெரிவித்துள்ளார்.

விரல்களும் உடம்பின் வேறு பல பாகங்களிலும் கூர்மையான ஆயுதம் கொண்டு தாக்கப்பட்டதற்கான அடையாளங்கள் தெரிவதாக வைத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் வழக்கறிஞர் சுட்டிக்காட்டினார்.

சட்ட வைத்திய நிபுணரின் அறிக்கையில் சித்திரவதைக்கான அடையாளங்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளதால், இந்த மரணங்களை கொலைக் குற்றச்சாட்டாக கருதி வழக்கு நடத்த வேண்டுமென நீதவான் பரிந்துரைக்க வேண்டும் என்று தாம் கோரியுள்ளதாக வழக்கறிஞர் குறிப்பிட்டார்.

மாத்தளை புதைகுழியில் கண்டெடுக்கப்பட்ட சடலங்கள் 1988 - 89 காலப்பகுதியில் இலங்கையில் நடந்த கலவரங்களின் போது காணாமற்போனவர்களாக இருக்கலாம் என்று சந்தேகம் தெரிவித்துள்ள அவர்களது உறவினர்கள், இது சம்பந்தமாக விசாரிக்கப்பட வேண்டுமென்று நீதிமன்றத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.


சம்பந்தப்பட்ட புதைகுழியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட எலும்புகளை மேலதிக விசாரணைக்காக அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்க நீதிமன்றம் பணித்துள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

# கமலேந்திரனின் விளக்கமறியல் நீடிப்பு

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் றெக்சியன் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் கைது செய்யப்பட்ட கந்தசாமி கமலேந்திரன் உள்ளிட்ட மூவரையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்று உத்தரவிட்டது.

கொலை தொடர்பிலான வழக்கு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டபோதே எதிர்வரும் 11ஆம் திகதி வரை இவர்களது விளக்கமறியல் காலத்தை நீடிக்குமாறு நீதிவான் எஸ்.லெனின் குமார் உத்தரவிட்டுள்ளார்.

# பிரணாப் முகர்ஜியையும் சந்தித்தார் ஜனாதிபதி



(புதுடில்லி)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நேற்று இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியைச் சந்தித்துப் பேச்சுவார்தை நடத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவிற்குச் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நேற்றுக் காலை புதிய பிரதமர் மோடியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இதனையடுத்து, புதுடில்லியில் ராஷ்டிரபதி பவனில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இரு நாட்டுத் தலைவர்களும் இரு நாடுகளின் பரஸ்பர உறவு குறித்துக் கலந்துரையாடினர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இலங்கையில் முன்னெடுக்கப் பட்டுவரும் அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கச் செயற்பாடுகள் குறித்து இந்திய ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மே 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.